சுதேசமித்திரன்

ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்தி
கள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ்
கிரைப் வாட்டர் குழந்தைகளை
நன்கு பாதுகாக்கிறது

WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

1-WW 111-111

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.

ஆரூடம்!

உங்கள் எதிர்கால பலன்!!

★

தொழில், குடும்பம், காதல், பிரயாணம், வியாதி, வியாஜ்யம், வியாபாரம் முதலிய எல்லா விஷயங்கள் சம்பந்தமாகவும் குறிப்பாக பதில் அனுப்பப்படும். கட்டணத்திற்கான போஸ்டல் ஆர்டருடன் ஜாதகம் அல்லது கடிதம்எழுதும் நேரம்தேவை.

கேள்வி 3-க்கு ரூ. 2.
மேற் கேள்வி ஒவ்வொன்றுக்கும் அணா 8.
10 கேள்விகள்
அல்லது
ஒரு வருஷ பலன் ரூ. 5.
வெளி நாடுகளுக்கு 5 ஷில்லிங்.

மீனாக்ஷி ஜோதிடாலயம்,
P. B. நெ. 1015, பம்பாய்.

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115. நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
போன் நெ. 3432.

9. ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் - பாதம் எண்ணெய் - அமலா ஹேர் ஆயில - வாசனை தேங்காய் எண்ணெய்-கஸ்தூரிகுங்குமப்பூ-கோரோஜனம் - ஊறுகாய (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து-பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்-ஓமவாடர் - முறப்பா. நெல்லிக்காய் - இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள :—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி டி. மதருஸ்.

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராய நகர், சென்னை **17.**

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க........................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு......ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு..................................அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க...ரூ 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

குகன் சோப்புகள்

சுதேசி தயாரிப்பு சலவைக்கு மிகவும் சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

யானைக்காலுக்கு நிகரற்ற மருந்து (எலப்டோ பில்ஸ்)

ஆரம்ப அல்லது கடுமையான யானைக்கால் பிலேரியா வியாதிகளுக்கு நிச்சயமான நிவாரணி. பல நாள் அனுபவத்தின் பயனாக தயாரிக்கப்பட்டது. உத்திர வாதமுள்ளது. ஆபத்தில்லாதது. விலை ரூ. **9-8-0.**

தபால் செலவு பிரத்யேகம்.

SEENU & Co., P. B. No. 1638. (L) **MADRAS 1.**

Quality always tells!

hence BUY **L.G ASAFOETIDA**



எல். ஜி பெருங்காயமே உயர்ந்தது

ఎల్. జి ఇంగువయే శ్రేష్టం

ஜுரத்தில்

உஷ்ணம் 102 டிக்ரிக்கு மேலே போனால், கூந்தல் உதிர்வது நிச்சயம். அம்மையானாலும் சரி, 'டைபாயிட்' 'மலேரியா' 'இன்புளூயன்ஸா' முதலிய விஷ ஜுரங்களானாலும் சரி, சூடு காரணமாகவே மயிர் அபரிமிதமாகக் கொட்டுகிறது. ஜுர ஸமயங்களில் உஷ்ணம் அதிகமாக ஏறுவிடினும், மயிர் உதிர்வது மட்டும் தவறுவதேயில்லை. அப்படி உதிரும்போது தக்க சிகிச்சை செய்து தடுக்காமலிருந்துவிட்டால் மயிர் விடாமல் உதிர்ந்து தலையும் வழுக்கையாய்விடும்.

வெள்ளம் வந்த பிறகு அணையிடுவதேன்? மயிர் உதிர ஆரம்பிக்குமுன்னரே, கூந்தலைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள். ஜுரத்துக்குப்பிறகு கேசம் அரைப்பங்கு கால்பங்காகிக்குறைந்துவிட்டால், கேசவர்த்தினியைக் கொண்டு கேசத்தை விருத்திசெய்து பூரணமாக்கிக்கொள்ளுங்கள். கடைசியாக எல்லாப் பரீக்ஷைகளும் செய்தானபிறகு கேசவர்த்தினியே கூந்தலுக்குச் சிறந்தது என்று தெரியவந்தால், கேசவர்த்தினியை முதலிலேயே கைக்கொள்ளலாமே?

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணா 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :
தென் இந்திய ரஸாயன சாலை,
"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,
பவர் ஹவுஸிற்கு அடுத்தது
கோயமுத்தூர்.

உங்கள் எதிர்காலம்

பண நிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம், பிரயாணம், எதிர்பாராத லாப நஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்ட நாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதியனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்றுமுதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணு 8, ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ. 6. வாரப்பலனுக்கு ரூ. 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுபலனும் எழுதியனுப்ப ரூ. 5. த.செ.தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமதுபாஸி, திருவல்லிக்கேணி, MADRAS 5

பிரசுரமான கிருதிகள்

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேறகூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும. தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.
" சுதேசமித்திரன் " புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.

REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA
(GOVT. REGD)

இது சித்த வசீகரண யந்திரம். இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர் நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமககு அதிர்வுடத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாடடரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை ரூ. 2. வெள்ளி ரூ.3.
தங்கம் விலை ரூ. 10.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொறப நரைக்கு ரூ. 2—8—0. அதற்கு மேற்பட்டது. ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5.

வெளிநாடுகளுக்கு வி. பி., போஸ்டல் ஆர்டர் கிடையாது. மணியார்டர் தேவை. கடிதங்கள் ஆங்கிலத்தில்.

KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P. O. Katrisarai, (Gaya)



501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி,
லிமிடெட்.

ஆஸ்தமாவை குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

மதராஸ் ஸ்டாகிஸ்டுகள்: தாதா & கோ,
நைனியப்ப நாய்க்கன் தெரு.

ஆனந்த குஸுமாகர லேகியம்

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, பித்தம், காசம், க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும், உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை.

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம், விவரமான காட்லாக் இனம்,

மலையாள மெடிகல் ஹால் (Regd.)
189, வக்கீல் புது தெரு - Post Box No. 27. — மதுரை.

சக்தி ஆரூடம்!

தபால், தந்தி இலாகா ஆபீசர் Sri K. S. சுப்பய்யா B. A., 23—5—48ல் எழுதுகிறார் :—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெற்றேன்."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7—8—6. வி. பி. பி. தனி. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

N. B:—வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P. O., (S. I.)



1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனா பஜார், சென்னை.

Estd: 1920

சேலம் மூன்று தாமரை

பீடிகளை உபயோகித்து, சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd. No. 2221.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம். S.I.R.

கடைசி கிளியரன்ஸ் விற்பனை

ரூ. **3-10**-க்கு

1 டஜன் தங்கமோதிரம், 1 ஜதை முத்து கம்மல், 1 ஸ்கார்ப் பின் (இரு பாலருக்கும்) தேசத் தலைவர்கள் போட்டோக்களுடன் (காந்தி, நேதாஜி முதலியோர்) கிடைக்கும். பாலிஷ், பினிஷ், வேலைப்பாடு, பூபோட்ட எனமலிங் கூடிய மோதிரத்தின் முகப்பு இந்த மோதிரத்தை உண்மை தங்கம்போல் விளக்கும்.

முத்து கம்மல் : அசல் சரக்கு போலிருப்பதால் நகை நிபுணரால் மட்டுமே கண்டு பிடிக்கப்படும். ஒரு ஜதை ரூ. 2/8/0.

ரப்பர் பலூன்: எல்லோருக்கும் பிடித்தமானவை. ஊதினால் மிகப் பெரியதாகும். டஜன் ரூ. 1/12/0. குரோஸ் ரூ. 16/8. கடிதங்கள் ஆங்கிலத்தில். தபாற் செலவு இலவசம்.

HENA AGENCY.
NO. 14, Dr. Jagabandhu Lane, (S.W.)
Bowbazar P. O., CALCUTTA.

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம் : 1926.)

ஊர்..........................

தேதி..........................

To
M/s. JOTHI FABRICS,
KOTTAR : TRAVANCORE.

அன்புடையீர்!

தங்கள் சொந்த கைத்தறியில் தயார் செய்து 24 ரூபாய் மதிப்புள்ள கண்ணைக்கவரும் வர்ணங்களில் நல்ல ரகமாகவும் மெல்லிய தரமான 6 கெஜம் பட்டு புடவை தீபாவளி பரிசாக போஸ்டு & பாக்கிங் செலவு இல்லாமல் 12 ரூபாய்க்கு நம் ஊரில் இன்னும் அநேக புடவைகள் வந்த வண்ணமாக இருப்பதால் அதே மாதிரியில்...... கலர் 6 கெஜம் புடவை ஒன்று அனுப்புவதுடன் புது வருட காலண்டர் பதிவுசெய்த மெல்லிய கைகுட்டை ஒன்று இனாமாக புடவையுடன் சேர்த்து அனுப்பக் கோருகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

பெயர்..........................

SPECIAL OFFER!

எங்களிடம் தயாராகும்
46"X6 Yds. ஸில்க் ஸாரி 1-க்கு
ரூ. 30 விலை பெறக்கூடியது ரூ. 20.
46"X6 Yds. ஸில்க் ஸாரி 1-க்கு
ரூ. 20 விலை பெறக்கூடியது ரூ. 12.

இந்த விலையில் கிடைக்கும்.
ஒரு ஆர்டருக்கு 3 சேலைவரை V. P. P. யில் அனுப்பலாம்.
விலையின் 25% அட்வான்ஸ் அனுப்பவும்.
ஒரே ஆர்டரில் மூன்று சேலை வாங்குபவருக்கு
தபால் சார்ஜ் இனும்.

Apply to:—

THE SOUTH TRAVANCORE TEXTILE HOUSE,
BAZAAR, KOTTAR, NAGERCOIL.

ரூ. 500 இனும்

ஆச்சரியகரமான சக்திவாய்ந்த
சித்த யந்திரம்.

சக்தி வாய்ந்தது. இந்த "கவசத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனுல் நீர் விருமபும் (ஆண், பெண்) எவராகிலும் உனக்கு அடங்கி வருவர் அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 இனும்.

செப்பு மூடியுடன் ரூ. 5
மூன்று வாங்கினுல் ரூ. *12.*

வெள்ளி மூடியுடன் ரூ. 7.
மூன்றுக்கு ரூ. *18.*

தங்க மூடியுடன் ரூ. 15.
மூன்றுக்கு ரூ 40.

Sri Kamrup Kamakshya Ashram,
199/B, P.O. Rajdhanwar, (Hozaribagh)

ஜாதகம் ! ஆரூடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:-1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ.5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு: வெளிநாட்டுக்கு இரட்டிப்புகட்டணம்

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:- தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்கு திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், **வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,**
தெப்பக்குளம் **P. O.** (தென் இந்தியா)

விகடன் பரிமள பாக்குத்தூள்

50 காலணு பொட்டலம் அணு 8. எல்லா இடங்களிலும் ஸ்டாக் செய்து ஊக்கமுடன் வியாபாரம் செய்பவர் எழுதுக. தக்க கமிஷன் உண்டு.

மாணிக்க விலாஸ்
11-பீட், மதராஸ் 1.

கதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் **விலை ரூ. 2-8-0**

தபாற் செலவு பிரத்யேகம்.
மானேஜர்:-'சுதேசமித்திரன்' புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேணடுமானுல் ரியல் அசோகா அண்டு கோவில் வியாபார தொடர்ச்சி வைத்துக கொள்ளுங்கள்.

எலலா வகை செண்டுகளும், ஏர் ஆயிலகளும, வாஸலின், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள் மூககு பொடி புகையிலை, பர்பியூமும அரை சேர் பர்பியூம பாககு தூள் டினகளும தயாரிக்கபபடுகிறது. விறபனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாமபிள் செட பெறுக.

N B. ஒரு கேஸ் பாககுதூள தயாரிபப தறகான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம. கொபபரை சீவல கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.
40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

ஐந்து வயதினிலே அறியாப் பருவத்திலே அகத்துறை இலக்கியத்திற்கு
அபினயம் பிடிக்க கற்றுத்தருவது குற்றமா? இல்லையா?
என்ன கேள்வி, என்கிறீர்களா?
"நகைச்சுவை அரசு" இக்கேள்வியை எழுப்புகிறார்.
கிருஷ்ணா பிக்சர்ஸ்
கிருஷ்ண பக்தி
டைரக்ஷன்: R.S.மணி
P.U.சின்னப்பா
T.R.ராஜகுமாரி
N.S.கிருஷ்ணன்
T.A.மதுரம்
சென்னை மாகாணமெங்கும்
40 தியேட்டர்களில்
பொங்கல் முதல் ஆரம்பம்.
ஸ்டுடியோ நியூடோன்
சென்னையில் பாரகன் & பிராட்வே
தினசரி 3 காக்ஷிகள்: மாலை 1-30, 5-30 & 9-30.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ தைமீ 10௳ ★ 1949-௵ ஜனவரிமீ 23௳ No. 52

டர்பான் அட்டூழியம்

தென்னாப்பிரிக்காவில் நடந்திருக்கும் ரத்தக் கிளறி பற்றிய விவரங்கள் இந்நாட்டினரைத் திடுக்கிடச் செய்யும். டர்பான் நகரில் ஆப்பிரிக்க சுதேசிகள் ஒரு பாவமுமறியாத இந்தியர் மீது திடீரென்று பாய்ந்து அவர்களைக் கொன்று குவித்திருக்கின்றனர். அவர்களுடைய வீடுவாசல்களும், கடைகளும் மற்ற சொத்துக்களும் பெரும்பாலும் தீக்கிரையாகிவிட்டன. இந்த நாசவெறிக்குப் பலியான இந்தியரின் உயிரோ, அவர்களுடைய சொத்தோ எவ்வளவோ. எனினும் இந்த அட்டூழியத்தின் தன்மையைக் கவனிக்கையில் உயிரிலும் உடமையிலும் நாசம் மிக கொடிதாக இருக்குமென்றே தோன்றுகிறது.

ஆப்பிரிக்க சுதேசிகளின் இந்த கொலைவெறித் தாண்டவம் அதிகாரிகளின் நேரடியான கண்காணிப்பில் இல்லாத தூரத்திலுள்ள கிராமாந்திரம் எதிலும் நடந்துவிடவில்லை. அங்குள்ள முதல்தர நகரமான டர்பானிலேயே இவ்வளவும் நடந்திருக்கிறது. இந்தியரது உயிரும், சொத்தும் இவ்வளவு பெருவாரியாக நாசமாகும்வரை அங்குள்ள அதிகாரிகளும், அவர்கள் வசமுள்ள போலீஸ் படையினரும் என்ன செய்துகொண்டிருந்தனர்? சுதேசிகள் இவ்வளவு பெரிய அளவில் நடத்தியிருக்கும் அட்டூழியம் தக்க முன்னேற்பாட்டுடன் கூடியதாகவேயிருக்கவேண்டும். அதைப்பற்றி அதிகாரிகளுக்கு முன்னதாக ஒன்றுமே தெரியாதென்று சொல்வது ஆச்சரியமாகும். கலகம் துவங்கிய பிறகாவது அவர்கள் உடனே தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தாலும், இந்த பயங்கரப் பேயாட்டத்தை கூடியவரை ஆரம்ப கட்டத்திலேயே மண்டையிலடித்திருக்கக்கூடும். எனினும் அதை இவ்வளவு தூரம் முற்றவிட்டதற்குக் காரணமென்ன? அதை உடனே அடக்க அதிகாரிகளுக்கு ஒன்று, சக்தியில்லாதிருக்க வேண்டும்; அல்லது அதை அடக்குவதில் அவர்களுக்கு அந்தரங்கமான சிரத்தை இல்லாதிருக்க வேண்டும். இந்தியர்களுக்குப் பதிலாக வெள்ளையரது உயிருக்கோ, உடமைக்கோ இத்தகைய ஆபத்து ஏற்பட்டிருக்குமாயின், அதிகாரிகள் அதை ஒரு கணமேனும் நீடிக்கவிட்டிருப்பரா? உண்மையில் இந்தியரது உயிர் அவர்களுக்கு அவ்வளவு முக்கியமாகத் தோற்றாததே சுதேசிகளின் நாச வெறிக்கு நெடுநேரம் வரை தங்கு தடை ஏற்படாததற்குக் காரணமாயிருக்க வேண்டும்.

ஆனால், ஒரு பாவமுமறியாத இந்திய மக்கள் மீது சுதேசிகள் இவ்வாறு பாயக் காரணமென்ன? இதைப்பற்றித் தெளிவான விவரம் ஏதுவும் கிடைக்கவில்லை. ஒரு இந்தியக் கடைக்காரர் ஒரு ஆப்பிரிக்கச் சிறுவனை அடித்ததாக ஒரு வதந்தி பரவியதன் பேரில் ஆப்ரிக்க சுதேசிகள் கொதித்தெழுந்து அட்டூழியத்திலிறங்கி விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. ஆப்பிரிக்கச் சிறுவன் தாக்கப்பட்டது வாஸ்தவம்தானா என்பதுகூட நிச்சயமாகத் தெரியவில்லை. இது உண்மையாகவே இருந்தாலும், இந்த ஒரு சிறு சம்பவம் ஒரு நொடியில் ஒரு ஜாதி முழுவதுமே கொலை வெறியை உண்டாக்கி அதை இந்திய மக்கள்மீது இவ்வளவு கோரமான முறையில் திருப்பியிருக்க முடியுமென்பது நகைக்கத்தக்கதாகும். ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் தக்க முன்னேற்பாட்டுடனேயே இந்தப் பயங்கரமான அட்டூழியம் நடந்திருக்க முடியும்.

சுதேசிகள் நெஞ்சு பகைமைத் தீ வளர நெடுநாளாகவே பக்குவமாயிருந்து வந்திருக்கி

—அடுத்த பக்கம்

சென்ற செவ்வாயன்று ராஷ்டிரபதி டாக்டர் பட்டாபிக்கு சென்னைக் கார்ப்பொரேஷன் ஒரு உபசாரமளித்தது. பட்டாபி, மேயர், உதவி மேயர், கமிஷனர் முதலியோரைப் படத்தில் காணலாம்.

றது. தென்னாப்பிரிக்கா அவர்களுடைய சொந்த நாடேயாயினும் அவர்களுக்கு ஒரு உரிமையுமில்லை; மிகவும் கடைத்தரமான அடிமை வாழ்வே அவர்கள் நடத்தி வருகின்றனர். அவர்களுடைய ஆத்திரம் வரைமிஞ்சிப் போகாதிருக்கும் பொருட்டு அவர்களுக்கு ஏதோ ஒரு சில உரிமைகள் இருப்பதுபோல் முன்பு ஸ்மட்ஸ் சர்க்கார் பாவனை செய்து வந்தனர். ஆனால் மலான் ஆட்சி வந்த பின் அந்தப் பாவனையும் மறைந்துவிட்டது. சுதேசிகளிடையே வர வரப் பெருகி வந்திருக்கும் கொதிப்பு இந்தியர்மீது திருப்பப்பட்டிருப்பதே தற்போதைய பயங்கரப் பேயாட்டத்தின் மர்மமாயிருக்கக்கூடும். சுதேசிகள் துன்பத்துக்கு இந்தியரே ஜவாப்தாரிகள் என்று வெள்ளையர் விஷமப் பிரசாரம் செய்து வருவதை ஸ்ரீ மணிலால் காந்தி சுட்டிக்காட்டியிருக்கிறார். உண்மையில் சுதேசிகளைப்போல், அங்கு குடியேறியுள்ள இந்தியரும் மிகவும் துர்ப்பாக்கிய நிலையிலேயே இருந்து வருவது பட்டவர்த்தனமான விஷயம். இவ்விரு ஜாதியினரையும் தங்கள் காலால் துவைத்து, அவர்களுடைய உழைப்பைக் கொண்டுபோக வாழ்வு நடத்தி வருபவர்கள் நிறத்திமிர் பிடித்த வெள்ளையர் தான். சுதேசிகளும், இந்தியரும் தங்களிடையே ஒருவரையொருவர் அடித்துக்கொள்வதைப் போல் அந்த வெள்ளையருக்கு ஆனந்தமளிக்கக் கூடியது எதுவுமில்லை. இந்த விஷமிகள் விரித்த வலையில் ஆப்ரிக்க சுதேசிகள் எளிதாக விழுந்து விட்டது பரிதபிக்கத்தக்கதாகும். ஆனால் சுதேசிகளிடையே கிளப்பிவிடப்பட்டுள்ள ஜாதிப்பகை இந்தியரை வருத்துவதுடன் நின்று விடும் என்று வெள்ளையர் எண்ணுவராயின், அது வெறும் பிரமையே. இன்று அவர்கள் வளர்க்கும் இனப்பகை இறுதியாக அங்குள்ள வெள்ளை ஜாதி முழுவதுக்குமே எமனாக முடியுமென்று நாம் திண்ணமாக எதிர்பார்க்கலாம். அவர்கள் செய்யும் கொடிய அக்கிரமங்களுக்கு நாளடைவில் கிடைக்கவிருக்கும் கூலி ஒருபுறமிருக்க, உடனடியாக தென்னாப்பிரிக்க இந்தியருக்கு நிவாரணம் கிடைக்கச் செய்வதில் இந்திய சர்க்கார் தங்களாலான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்வதவசியம்.



சமீபத்தில் கிண்டியில் நடைபெற்ற என்ஜினீயரிங் காட்சி அநேக விதங்களில் கவர்ச்சிபெற்றிருந்தது. காட்சியில் ஸ்டால்களைக் காண ஜனங்கள் சாரிசாரியாகச் சென்றனர். காட்சிக்குள் செல்ல காத்திருந்தோரைக் காட்டும் படம்.



கிண்டி என்ஜினீயரிங் காலேஜில் "கம்பியிலான டிராலி" வலதுபுறத்தில் அந்தரத்தில் நிற்கிறது. (இடது) விமானம் எப்படி பறக்கிறது என்பதையும் மற்றுமுள்ள நுணுக்கங்களையும் ஒரு அதிகாரி விளக்குகிறார்.



மின்சார விசைகொண்டு அறைத்து, கரைத்து, சகலமும் செய்துகொண்டு தட்டு தட்டாக இட்லியை உற்பத்திசெய்யும் இயந்திரத்தைப்பாருங்கள். நொடிப்பொழுதில் இவ்வேலைகளைப் பூர்த்திசெய்யும் இந்த சாதனம் என்ஜினியரிங் காட்சியில் ஸ்திரீகளுடைய கவனத்தை விசேஷமாகக் கவர்ந்தது.

அட்டைப்படம்

லட்சியத்தாய்



லட்சியத்தாயொருத்தி தனது மகள் மங்கைப்பருவமெய்தி, தன் மனத்தை ஒரு சிறந்த தலைவனிடம் ஈடுபடுத்தி அடிக்கடி தனித்துப் போவதை செவிலியின் மூலம் உணர்ந்து கொள்கிறாள். பல மக்களை ஈன்ற தாயல்ல அவள். கண்ணைப்போல ஒரே ஒரு பெண்தான் அவளுக்கு. மண வாழ்க்கையில் புகுவதன் காரணமாகத் தன் மகள் தன்னைவிட்டுப் பிரிய நேருமேயென்று அவள் மனம் குழைந்துபோகிறாள். அந்த குழைந்த உள்ளத்தினூடே தன் மகளின் பிள்ளைப்பிராயத்து நாட்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்றுக் சலனப்படம்போல திரையிடுகிறது. தன் மகள மண்ணால் சிறு வீடு கட்டிய இடம், திண்ணையில் உட்கார்ந்துகொண்டு கழங்கு, பலகறை, பல்லாங்குழி போன்ற விளையாட்டுகளில் முனைந்திருந்த காட்சி இவையெல்லாம் அவள் நினைவுக்கு வருகிறது. தாய் இவற்றையெல்லாம் எண்ணி ஏங்குகிறாள். தலைவனோடு சேர்ந்துகொண்டு இப்பெண், மலைப் பிராந்தியங்களையெல்லாம் கடந்து எப்படிச் சமாளிக்கப் போகிறாள்? வருத்தம் மேலிடுகிறது. இந்தத் தாயுள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுவதுபோலுள்ள **நற்றிணைபாட்டு** வருமாறு:—

ஒரு மகளுடையேன்
மன்னே யவளுஞ்
செருமிகு மொய்ம்பிற்
கூர்வேற் காளையொடு
பெருமலை யருஞ்சுர
நெருநற் சென்றன
ளினியே, தாங்கு
நின்னவல மென்றிரதுமற்
றியாங்ஙன மொல்லுமோ வறிவுடையீரே
யுள்ளினுள்ளம் வேமே யுண்கண்
மணிவாழ் பாவை நடைகற் றன்னவெ
னணியியற் குறுமகளாடிய
மணியேர் நொச்சியுந் தெற்றியுங் கண்டே.

———::———

வாழ்க்கைச்சூழல்

— கமலா சேஷாத்ரி —

வாழ்க்கை எவ்வளவு அநித்தியமானது. நமக்கு ஈடில்லை என்று கர்வத்துடன் வாழ்க்கையை நடத்துவது எவ்வளவு பேதமை. ஆண்டவன் எதையும் தன் விருப்பப்படி தான் செய்கிறானே அன்றி நம் செயலில் எதையும் விடுவதில்லை. அவனே நமக்கு அறிவு, புலமை, கல்வி, செல்வம், சந்தோஷம் முதலிய சாதனங்களை அளிக்கிறான். 'அவன்' அளித்ததை மறுபடி நாம் 'அவனுக்குத்' திரும்ப அளிக்கும்போது நம் மனம் வேதனையை ஏனோ அடைகிறது! நாம் 'அவனிடமிருந்து' ஒன்றைப் பெறும்போது நமக்கு ஏற்படும் திருப்தியும் சந்தோஷமும், அதை நாம் 'அவனுக்குத்' திரும்ப அளிக்கும்போது உண்டாகவேண்டும் என்கிற உயரிய எண்ணமே உதிப்பதில்லை. ஆனால் கடவுள் நமக்குச் சுகத்தையும் துக்கத்தையும் கொடுத்து, அவற்றைச் சமனாகப் பாவிக்கும்படி நம்மை எதிர்பார்க்கிறார். அவருடைய விருப்பப்படி நடக்க நாம் பிரியப்பட்டாலும், வாழ்க்கையில் அது எவ்வளவு கடினமாகவுள்ளது என்பது அனுபவத்தில்தான் தெரிகிறது.

தனது பங்களாவின் வாயிற்புறத்திலுள்ள வெராண்டாவில் ஓர் சாய்வான நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு இந்த ரீதியில் யோசித்துக்கொண்டிருந்த ஆத்மநாதனது பார்வை பரந்த ஆகாயத்தை நோக்கி இருப்பினும் அவர் மனம் அதில் நாட்டமற்றதாய்தான் இருந்தது. அவர் சிந்தனையெல்லாம் காலஞ்சென்ற தம் அருமை மனைவி விமலாவிடம் இருந்தது. தான் அந்நாளில் அவளுடன் வாழ்க்கை நடத்தியபோது நிகழ்ந்த பல சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அவரது மனதில் தோன்றி மறைந்தன.

சகல விதத்திலும் உயர்வாக விளங்கிய அவளைத் தன் வாழ்க்கைத்துணைவியாக அடையப்பெற்ற ஆத்மநாதன் உண்மையில் மிகவும் சந்தோஷமாகவே இருந்து வந்தார். அவருடன் இல்வாழ்க்கையை நடத்தியபோது, ஒரு முறைகூட தன் மனம் நோக தன் விருப்பத்திற்கு மாறாக அவள் நடந்ததில்லையே என்பதை நினைக்கும்போது அவர் மனம் அவளைக் குறித்து பச்சாதாபத்தால்கூட ஏங்கிற்று. 'உலகில் தன்னைவிட பாக்யசாலி இருப்பது அரிது,' என்ற பெருமையுடன் இருந்த அவருக்கு விமலாவின் மறைவு ஓர் பெரும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

பிறந்த இடத்திலும், வாழ்க்கையில் வந்து புகுந்த இடத்திலும் பாக்கியலக்ஷ்மி தன் அருளைப் பரிபூரணமாகச் சொரிந்து இருந்தாள். ஆனாலும் விமலா துளிக்கூட ஆடம்பரமோ, கர்வமோ இல்லாது, எவ்வளவு அடக்கத்துடன் இருந்து வந்தாள்! சுயநலம் என்பது மருந்துக்குக்கூட அவளிடம் தென்பட்டதே இல்லையே! வேலைக்காரர்கள் அவளிடம் 'யஜமானி' என்கிற முறையில் பழகாமல் அபார அன்புடனும் மரியாதையுடனும் பழகி வந்தனர். யாவரிடமும் இனிமையாகப்பேசி, அவர்களைத் தன் அன்பின் வசமாக்கும் அபூர்வ குணத்தை உடையவளாக இருந்ததினால்தான் காலனுக்கும் பிடித்தமானவளாகிவிட்டாளோ அவள்! எந்த விதத்திலும், எந்த சமயத்திலும் அவளது நினைவு அழியாமல் நிரந்தரமான இடத்தைத் தன் கணவனின் உள்ளத்தில் ஊன்றி விட்டாள்.

எல்லையற்ற இன்பமும் பெருமையும் அடைந்திருந்த ஆத்மநாதன், விமலாவைக் கண்போல் போற்றி வந்தார். அவளுக்கு எந்தக் காலத்திலும் எக்குறையும் நேராமல் சகல சௌகரியங்களையும் செய்து வைத்தார். ஆனால் விமலாவின் கண்களில் சதா ஒரு ஏக்கமும், சோகமும் குடிகொண்டிருந்தது. மணமான புதிதில் ஆத்மநாதனுக்கு, அவளது தோற்றத்தின் காரணம் ஒரு புரியாத புதிராக இருந்தது. அதன் காரணத்தை அறிய பலவழிகளில் பன்முறை முயன்றும், அவர் அதில் வெற்றியடையவில்லை. ஒருகால் அது அவளது சுபாவமோ என்று நினைத்து அதை விசேஷமாய் பாராட்டாமல் இருந்து பார்த்தார். நாளடைவில் அவருடைய ஒப்பற்ற அன்பின் காரணமாகவோ என்னமோ, அவள் சற்று குதூகலத்துடன் காணப்பட்டாள். அவளது இம்மாறுதலைக்கண்டு ஆத்மநாதன் மட்டற்ற மகிழ்ச்சியுடன் பூரித்தார்.

ஆனால் இது வெகுநாட்கள் நீடிக்கவில்லை. வசந்தி பிறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்பே, விமலாவின் பழைய ஏக்கமும் சோகமும் அவளைச் சூழ்ந்துகொண்டன. அதனால் மறுபடியும் கவலையுற்ற ஆத்மநாதன், அவளது ஏக்கத்தின் காரணத்தை தன்னிடம் கூறும்படி அவளை மன்றாடிக் கேட்டபோதும், அவள் தனக்கு ஒருவிதமான குறையும் இல்லை என்றும், தன்னிடம் அவருக்கு உள்ள தூய அன்புதான் அவரை அவ்விதம் சந்தேகிக்கச் செய்கிறது என்றும் மேற்போக்காகச் சொல்லிவிட்டாள். வசந்தி பிறந்த

பிறகு ஒருவாறு குழந்தையின் அழகிலும் விளையாட்டிலும் ஓரளவு தன்னை மறந்திருந்தாள் அவள் என்று மட்டும் கூறலாம்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், இன்னுமொரு ஆண் மகவைப் பெறும் பாக்கியத்தை ஆத்மநாதன் தம்பதிகள் அடைந்தனர். சகலவிதத்திலும் பெருமையுடனும், கௌரவத்துடனும் செல்வத்துடனும் வளர்க்கப்பட்ட, குழந்தைகளைக் காணும்போதெல்லாம் விமலாவின் மனம் பெருமிதத்தினுல் விம்மினும் அதே அப்பழைய சோகத்தின் சாயல் மட்டும் அவள் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டுதான் இருந்தது. அடிக்கடி தனியே இருக்கும்போது பெருமூச்செறிவாள். பூஜை அறைக்குள் சென்று, விக்ரகத்தினிடம் எதையோ முறையிட்டு விட்டு பலமணி காலம் கழித்து வருவாள். ஆனுல் அப்பொழுதும் அவள் மனதில் மூடி இருந்த சஞ்சலத்திரை அகற்றப்படாமலேதான் இருந்தது.

காலசக்கரம் வேகமாகச் சுழன்று கொண்டு சென்றது. குழந்தைகள் இருவரும் நன்கு போஷிக்கப்பட்டு அழகாக வளர்ந்து இருந்தனர். உடல் வளர்ச்சியுடன் நில்லாது, அதற்கேற்ப அறிவும் வளரவேண்டி ஆத்மநாபன் அவர்களுக்கு ஓர் உபாத்தியாயினியை ஏற்பாடு செய்து இருந்தார். அத்துடன் விமலாவின் விருப்பப்படி அவர்களுக்கு சத் விஷயங்களைப் போதிக்க ஒரு ஆசிரியரும் அமர்த்தப்பட்டார்.

ஆனுலும் குழந்தைகள் வளர வளர விமலாவின் ஏக்கமும் கூடவே வளர்ந்து வந்தது, அவர்கள் மிகவும் ஒற்றுமையுடன் இருந்தபோதிலும்கூட அவள் அவர்களுக்கு ஒத்துமையின் உயர்வைப்பற்றி ஓயாமல் கூறிக்கொண்டே இருந்தாள்.

நாட்கள் சென்றன. விமலா இளைத்து பலஹீனமாகிக் கொண்டே வந்தாள். அதைக்கண்டு மனம் வருந்திய ஆத்மநாதன், பெரிய டாக்டர்களைத் தருவித்து அவளது வியாதியின் காரணத்தை அறிய முயன்ருர். அவர்கள் எல்லோரும் ஒரு மூகமாகத் தீர்ப்புக் கூறிவிட்டனர். அவளை மனோவியாதிதான் பீடித்திருக்கிறதென்றும், அதற்கு மருந்து, மனச்சாந்திதான் என்றும் கூறிவிட்டனர். தன் குறையை வெளியிட்டால் அதற்குப் பரிகாரம் தேடுவதாய் ஆத்மநாதன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டும், விமலா கூற மறுத்துவிட்டாள்.

மிகவும் கவலையுற்ற ஆத்மநாதன் இரவும் பகலும் அவள் அருகாமையிலேயே இருந்து எப்படியாவது அவள் பிழைத்தெழுந்தால் போதும் என்று பாடுபட்டார். ஆனுல் ஒன்றும் நடக்கவில்லை.

அவர் பட்ட பாடு 'விழலுக்கிறைத்த நீர்' போல வியர்த்தமாகிவிட்டது. விமலாவின் மறைவு நிச்சயமாகிவிட்டது. அவள் இறப்பதற்கு முன்நாள் வழக்கத்திற்குமாருகதெளிந்து பொலிவுடன் விளங்கினுள். ஆத்மநாதனுக்குக்கூட ஒருகால் வியாதி குணமடைந்து அவள் பிழைத்தெழுந்து விடுவாளோ என்ற சபலம் தட்டியது. அன்று மாலை தனிமையில் இருக்கும்போது அவள், அவரிடம் தான் இனி பிழைப்பது துர்லபம் என்றும், தான் வெகு நாட்களாக சொல்ல வேண்டி இருந்த ஒரு விஷயத்தையும், அதை அவர் கவனக்குறைவாக விட்டு விடாமல் அவள் இஷ்டப்படி நடந்து கொள்வதாய் வாக்களித்தால் தான், தன் ஆத்மா சாந்தியடையும் என்றும் மன்ருடிக்கேட்டுக்கொண்டாள். அப்படியே அவர் உறுதிமொழி கூறிய பின்னர் விமலா தன் வாழ்க்கையின் சோகப் பகுதியை வெளியிட்டாள்.

"என் தங்கை லீலா வயதில் இரண்டு ஆண்டுகளே என்னைவிட இளையவள் நாங்கள் இருவரும் குழந்தைப்பருவம் முதல் மிகவும் ஒற்றுமையாகத்தான் இருந்து வந்தோம். ஆனுல் யாராவது அவளைப்பற்றி உயர்வாகப் பேசினுல்; என் மனதில் என்னையறியாமல் பொருமையே மேலோங்கும். எல்லோரும் என்னையே கொண்டாடவேண்டும் என்றதுர்

எண்ணம் எனக்குச் சதா தோன்றும். இருந்தாலும் லீலாவை நான் முற்றிலும் வெறுத்து வந்தேன் என்று சொல்லிவிட முடியாது. ஒருபுறம் துவேஷமான எண்ணம் இருப்பினும் அவளை நான் உயர்வாக நேசித்தேன். எங்கள் தாயார் இது விஷயத்தில் எனக்குப் பல புத்திமதிகள் கூறியிருக்கிருள். அதனுல்தாளு என்னமோ, என் மனதில் தோன்றிய எண்ணங்களை கூடிய வரையில் வெளிக் காட்டாமலேயே அடக்கி வந்தேன்.

லீலா பரம வெகுளி. எல்லோரிடமும் கள்ளம் கபடமின்றி சரளமாகப் பழகுவாள். கலகலப்பாகப் பேசி மகிழ்ந்து விளையாடும் அவளிடம் யாவரும் அமோகமான பிரேமையை வைத்திருந்தனர். என் உள்ளத்தை அறியாத அவள் என்னிடம் மட்டற்ற அன்பும், மரியாதையும் வைத்து இருந்தாள்.

அப்பொழுது எனக்குப் பனிரெண்டு வயது. நானும் லீலாவும் விளையாடிக் கொண்டிருக்கையில், நடுவில் சண்டை ஏற்பட்டு விட்டது. இருவரும் எங்கள் கட்சியை எடுத்துக் கூறி, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல், சளைக்காமல் வாதம் செய்தோம். கடைசியில் பொறுமையை இழந்த நான், தங்கையாகிய அவள் எனக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று அடாவடி செய்தேன். அதற்கு அவள் இணங்காமல், நான் செயல்வது மிகவும் தவறென்றும், நியாய விரோதமானதென்றும் கூறி, என் சொல்படி தன்னுல் நடக்க இயலாதென்றும் தீர்மானமாகக் கூறி விட்டாள். அவளது பதில் எனக்கு மிகுந்த கோபத்தை உண்டுபண்ணிற்று. அகங்காரம் என்னைப் பற்றிக் கொண்டது. 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பது போல செய்யும் காரியம் சரியா என்ற யோசனை ஒரு சிறிதும் இல்லாமல் கையில் இருந்த வெங்கல பொம்மை ஒன்ருல் அவளை ஓங்கி அடித்து விட்டேன். மறுகணம் அவள் மூர்ச்சித்துக் கீழே விழுந்து விட்டாள். அதேகணம் என் பேய் மயக்கம் என் தவறை உணர்ந்தபோது நான் அடைந்த பயங்கரத் துன்பம் அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும்.

பகவானுடைய கிருபையால் சில தினங்களில் லீலா பழையபடி நன்ருக ஆகிவிட்டாள். ஆனல் நான் அடித்த காயத்தின் வடு மட்டும் மறையவில்லை. பிறைபோன்ற நெற்றியில், நீண்டதொரு தழும்பு நிரந்தரமாக நின்று விட்டது. அதேபோல் என் மனதிலும் என் தவறின் வடு பதிந்து விட்டது. தீர்மானமாக எக்காரணத்தைக் கொண்டும் இனி உணர்ச்சிக்கு இடம் தருவதில்லை என்று சங்கல்பம் செய்துகொண்டேன். காலமும் மனிதரும் அச்சம்பவத்தை மறந்து விட்டாலும், என்னுல் அதை மறக்கவே முடியவில்லை. 'இவ்வளவு சிறுவயதில் இத்தகைய காரியத்தை செய்து விட்டேனே, ஒருகால் வாழ்க்கையில் எத்தகைய பாப காரியத்தையும் செய்ய அஞ்சாத கடின சித்தமுடையவளாக இருந்து விடுவேனே' என்ற எண்ணம் என்னை சதா ஆட்டிவைத்தது. அதனுல் எதிலும் சிரத்தையில்லாமல், மனதை என்னுல் இயன்றஅளவு கட்டுப்படுத்தி வந்தேன்.

குழந்தைப்பருவத்திலிருந்தே என்னை என் அத்தானுக்கு மணம் புரிவிப்பதாக ஏற்பாடு செய்து இருந்தார்கள். அத்தானிடம் எனக்கு அபாரமான பிரேமை உண்டு. அவரைப்போன்ற நல்ல வரன் கிடைப்பது மிகவும் அபூர்வம் என்று வீட்டில் எல்லோரும் சொல்லிக்கொள்ளுவார்கள். நான் லீலாவிற்கு இழைத்த தீங்கிற்குப் பரிகாரமாக, அவளை என் அத்தானையே மணம் புரிந்துகொள்ளும்படி செய்தேன். அதனுல் என் மனதில் ஓரளவு சாந்தி ஏற்பட்டது. கடவுள் என் பங்கிலிருந்து உங்களை என் வாழ்க்கைத் துணைவராக நியமித்தார். உங்களது அளவற்ற அன்பின் பெருக்கில் நான் கவலை நீங்கி இருந்தேன். வசந்தி பிறப்பதற்கு முன்பு பழையபடி திகில் ஏற்பட்டுவிட்டது. ஒருகால் என் குழந்தையும் என்னைப்போல குணம் படைத்து, அதை தகுந்தபடி வளர்க்காவிடில் அது கொடிய எண்ணங்கள் நிறைந்த தாய் மாறிவிடுமோ, என்ற சந்தேகப்பேய் என்னைப் பலமாக வாட்டத்தொடங்கியது. அதுவும் வசந்தி ரூபத்தில் என்னைபோலவே இருந்ததைக்கண்டவுடன், என் மனம் சொல்ல முடியாதவேதனையை அடைந்தது. 'தாயைப் பார்த்து மகளைக்கொள்,' என்பார்களே, அது ஒருகால் மெய்யாகி விடுமோ? அன்றி, தாயைவிட மகள் மோசமானவளோ! என்றெல்லாம் மனம் சஞ்சலப்படும். என் குழந்தைக்கு நல்ல எண்



ணத்தையும் குணத்தையும் கொடுத்தருளுமாறு கடவுளை சதாகாலமும் பிரார்த்தித்து வந்தேன்.

பிறகு ராஜு பிறந்தவுடன் இரண்டு குழந்தைகளையும் பார்த்து மனம் மகிழ்வடைந்தாலும், உள்ளூர பயமும் கவலையும் அதிகரித்துக்கொண்டே வந்தன. வசந்தியினால் ராஜுவிற்கு எந்த நிமிஷத்தில் தவறு நேர்ந்து விடுமோ என்று மனம் நிம்மதியில்லாமல் தவித்துக்கொண்டிருந்தது. அதற்காகவே, அவர்களுக்கு நல்ல புத்திமதிகளைக்கூற ஒரு ஆசிரியரையும் அமர்த்தச் சொன்னேன். நானும் அவர்களுக்கு நல்ல விஷயங்களாக எடுத்துச் சொல்லிவந்தேன். என்ன செய்தபோதிலும் எனக்கு சாந்தி ஏற்படவே இல்லை. என் கவலை என்னை உருக்கிக்கொண்டே வந்து என்னை படுக்கையிலும் கிடத்திவிட்டது. இனி நான் ஜீவித்திருப்பது சில நாட்கள்தான். எனக்காக வசந்தியை உங்கள் கண்காணிப்பில் வைத்துக்கொண்டு, அவள் ராஜுவுடன் அன்புடன் நடக்குமாறு பழக்குவதாக வாக்குறுதி செய்துதர வேண்டும்'' என்று சொல்லி முடித்தாள்.

நீண்ட யோசனையில் ஆழ்ந்திருந்த ஆத்மநாதன் தன் மனைவியின் அந்தி விருப்பத்தை தன்னால் கூடிய வரையில் நிறைவேற்றுவதாக வாக்களித்தாலும், அவளது மனச் சோர்வின் காரணத்தை அறிந்த அவர் ஆச்சரியமும் பரிதாபமும் ஒருங்கே அடையப் பெற்றார்.

மறுநாளே தனது இறுதி இச்சை பூர்த்தியான திருப்தியுடன் விமலா மீளா நித்திரையில் ஆழ்ந்தாள். இவ்வுலக பந்தங்களினின்றும், கவலைகளினின்றும், அவளுக்கு விடுதலை கிட்டி விட்டது.

அவள் இறந்த பிறகு, ஆத்மநாதனை அவளது கவலைகள் பீடிக்க ஆரம்பித்து விட்டன. தன் மனைவியின் யோசனை ஒருகால் பலித்து வசந்தியினால் ராஜுவிற்கு ஏதாவது தீங்கு ஏற்படுமோ என்ற விசாரம் அவரையும் பாதிக்கத் தொடங்கியது; 'தாயைப்போல சேய்' என்று அடிக்கடி விமலா தன் முன் தோன்றி சொல்வதுபோன்ற பிரமை ஏற்பட்டது. மனக்கிலேசத்தினால் சிறிது நாட்களில் அவர் மனம் எதிலும் நாட்டமில்லாமல் போய் விடவே குழந்தைகளுடனேயே தன் காலத்தின் பெரும் பகுதியை செலவிடலானார்.

நாட்கள் வெகு வேகமாக உருண்டோடின. குழந்தைகளின் நடத்தையில் யாதொரு கெடுதலான மாறுதலும் ஏற்படவில்லை. ஆத்மநாதனும் ஒருவாறு தன் பயம் நீங்கப் பெற்றிருந்தார்.

அன்று அந்த துக்ககரமான சம்பவம் நடக்கும்போது, வசந்தி, ராஜு இருவருக்கும் பள்ளிக்கூட விடுமுறை. பொழுது போக்காக ஏதாவது விளையாடலாமென்று நினைத்து, கடைசியில் 'பாட்மிண்டன்' ஆடத் தீர்மானித்தனர். இருவரும் மிகவும் அந்யோன்யமாகத் தோள் மேல் கைபோட்டுக் கொண்டு உல்லாசமாகத் தங்கள் காம்பவுண்டுக்குள்ளேயே அமைக்கப்பட்டிருந்த கோர்ட்டை நோக்கிச் செல்லும் காக்ஷியைக் கண்ட ஆத்மநாதன் தனது துக்கத்தை மறந்து ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்தார். அவர்கள் விளையாடும் அழகைக்கண்டு மகிழ எண்ணி அவரும் அந்த கோர்ட்டுக்கு சிறிது தூரத்தில் அமைக்கப்பட்டிருந்த சிமெண்ட் பெஞ்ச் ஒன்றின் மேல் போய் அமர்ந்தார்.

ஆட்டம் ஆரம்பித்து மும்மரமாக நடந்துகொண்டிருந்தது. திடீரென்று பாதி ஆட்டத்தின் நடுவில் வசந்தி தப்பிதமாக ஆடிவிட்டதாக ராஜு கத்தினான். சந்தர்ப்பம் வசந்திக்கு சாதகமாக இருந்ததினால் அவள் தான் செய்தது சரி என்று வாதித்தாள். ராஜு மேலே ஆட மறுத்து, மட்டையைக் கீழே போட்டுவிட்டு கோர்ட்டை விட்டு வெளியே வந்துகொண்டிருந்தான். இவர்களது சச்சரவை நீக்க ஆத்மநாதன் வருமுன், கோபம் கொண்ட வசந்தி தன் கையில் இருந்த மட்டையை ராஜுவை நோக்கி ஒருவரும் எதிர்பாராத வணணம் எறிந்துவிட்டாள். அது நேரே ராஜுவின் கணணில் போய் பட்டுவிடவே, 'ஐயோ' என்று அலறிக்கொண்டே அவன் கீழே விழுந்துவிட்டான்.

ஓடோடியும் வந்து ராஜுவைத் தன் மடியில் போட்டுக்கொண்டார் ஆத்மநாதன். தான் செய்த மகத்தான தவறைக்கண்டு நடுங்கி விட்ட வசந்தி கல்லாய் சமைந்து விட்டாள்.

உடனேயே ராஜுவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். அங்கு தன் நினைவில்லாமல் கண்ணில் கட்டு போடப்பட்டு ராஜு கட்டிலில் கிடந்தான். ஆத்மநாதன் அவனை விட்டு அகலவேயில்லை. என்னைப்போல என் குழந்தைகள் ஆகிவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று கெஞ்சிக் கேட்ட விமலாவின் குரல் அவர் காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டே இருந்தது.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், ராஜுவின் கண்ணை ஆபரேஷன் செய்தனர். பந்தடிக்கும் மட்டையில் இருந்து, ஒரு சிறு துண்டு கண்ணின் கருவிழியினுள் சென்று விட்டதினால், அவன் தனது வலக் கண் பார்வையை நிரந்தரமாக இழந்துவிட்டான். ஒரு மாத காலத்திற்குப்பின்னர் ஆஸ்பத்திரியிலிருந்து மகனை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்தார் ஆத்மநாதன்.

இச்சம்பவத்திற்குப் பின்னர் ஆத்மநாதன் அடியோடு மாறிவிட்டார். ஒருவருடனும் பேசாமல் சதா தனக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டு பிரமை பிடித்து ஏங்கி உட்கார்ந்துவிட்டார். "தாயைப்போல் சேய்'' என்ற வார்த்தைகள் மட்டும் அடிக்கடி அவர் வாயினின்றும் வெளிப்போந்தன.



14
மார்கழி நோன்பு

★

காலை ஐந்து மணிக்கே எழுந்து பாத்திரமும் கையுமாகப் பசுவையும் பால்காரனையும் எதிர்பார்த்தவண்ணம் வீட்டுவாசலில் நின்று கொண்டிருந்தேன். சிறுவர்களும் சிறுமிகளும் ஒரு சிறு கூட்டமாய், 'கும்பகர்ணனும் தோற்றும் உனக்கே பெரும் துயில்தான் தந்தானோ? என்று பாடக்கேட்டுத்தான் அன்று அவ்வளவு சீக்கிரம் எழுந்துவிட்டேன். பிறகும் பிள்ளைகள்.

நெய்யுண்ணோம், பாலுண்ணோம்
நாட்காலை நீராடி

என்றுபாடிக்கொண்டு வந்தார்கள். அப்போது அடுத்த வீட்டுக்காரியான கமலாவும்—என்னைப்போல் வாசலில் பால் வாங்கக் காத்து நின்றவள்—என்னை நோக்கி என்ன? "பால் உண்ணோம்" என்று இந்தக்குழந்தைகள் பாடிக்கொண்டு வருகிறார்களே, இன்று ஒருவேளை நமக்குப் பாலே கிடைக்காமல் போய்விடுமோ?' என்று வேடிக்கையாகக் கேட்டாள்.

அதற்கு நான், 'பாலுண்ணோம் —அதாவது, பாலாய் உண்ணோம் —காப்பி உண்போம், நீராடாமலே!—என்பது நவ நாகரிகமாய்ப் போய்விட்டதல்லவா? என்று நகைத்தேன்,

இதற்குள்ளே இரண்டு வீட்டு வாசலிலும் இரண்டு கறவைப் பசுக்கள் வந்து நின்றுவிட்டன. திருப்பாவை பாடிக்கொண்டிருந்த சிறுவர் சிறுமிகளும்,

வாங்கக் குடம் நிறைக்கும்
வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காது செல்வம்
நிறைந்தேலோர் எம்பாவாய்

என்றுஉத்ஸாகமாய் பாடினார்கள்.

'ஆனால் அந்தக் 'காமதேனு'க்கள் எப்படி ஹிம்ஸைப்படுத்திக் கறந்தாலும் குடம் நிறைக்கப் போவதில்லை. குவளை நிறைவதே கஷ்டம் என்றாள் கமலா.

'குடல் நிறையத் தீனி போட்டால் அல்லவா குடம் நிறையப் பால் கறக்கும்.

'ஆண்டாள் காலத்தில் அவளுடைய ஸ்ரீ வில்லிப்புத்தூரில் மேய்ச்சல்தரைகள் அதிகமாய் இருந்திருக்க வேண்டும்'

அதற்கு நான் விடையாக,

தீங்கின்றி நாடெல்லாம்
திங்கள்மும் மாரிபெய்து

என்ற ஆண்டாள் வாக்கை ஞாபகப்படுத்தினேன்.

இதைக் கேட்டுக் கொண்டே வந்த ஸரோஜா,

ஓங்கு பெருஞ்செந்நெல்
ஊடு கயல் உகள

என்று பாடிவிட்டு, 'நெல்லும் புல்லும் நாடெல்லாம் செழிப்பாக வளர்ந்திருந்தகாலம்அது என்றாள்.

'காலம் என்ன செய்யும்? இந்தக் காலத்திலும் அரசாங்கமும் குடிகளும் ஒத்துழைத்து உணவைப் பெருக்கிக்கொள்ள முயற்சிகள் செய்ய வேண்டும்' என்றேன் நான்.

கமலா சிறிது சிரித்து,

ஓங்கி உலகளந்த
உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச்
சாற்றிநீ ராடினால்.
தீங்கின்றி நாடெல்லாம்
திங்கள்மும் மாரிபெய்து

என்று பாடிக்கொண்டே போனாள்.

'உன் கருத்து எனக்கு இன்னதென்று தெரியுமே; "பாவை நோன்பு" என்ற மார்கழி நோன்பை நோற்று நியமத்தோடு இருந்தால்தானே மழை பெய்யும்?—என்கிறாய், இந்த நாளிலோ அந்தமாதிரி நோன்புகளை யார் நம்பிச் செய்யப்போகிறார்?—என்றும் சிரிக்கிறாய்' என்றாள் ஸரோஜா.

நான் சொன்னேன். 'எந்த நாளிலும் நோன்பு பயன்தரக்கூடியதுதான். ஆனால் காலத்துக்கு இசைந்தபடி நோன்பு முறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும்?

'அது எப்படி? நீ ஒரு புது நோன்பு நோற்கச் சொல்லுகிறாயா, பழைய மார்கழி நோன்பு போதாதென்று?' நீ சொல்லுகிறபடி நோன்பு நோற்றால் அது நெல்லை விளைவிக்குமா? புல்லைத்தான் விளைவிக்கமுடியுமா? "எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்!" என்று எருமைகளையும் பசுக்களையும் உன்னுடைய நோன்பினால் விளையும் மானஸப் பசும்புல் தரையிலே மேயவிட முடியுமா? அப்படி மேய்ந்து,

ஏற்ற கலங்கள்
எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும்
வள்ளல் பெரும்பசுக்கள்,

நமது நாட்டுக்குச் செல்வமாகப் பொங்கிவிடுமா? "மந்திரத்திலே மாங்காய் விழுமா?" மந்திர மாங்காய் கறிக்குத்தான் ஆகுமா? இந்த மூடக்கட்டுகளையும் மூத்த பொய்களையும் உதறித்தள்ளுவதுதானே உண்மைச் சுயமரியாதை?' என்று ஒரு பிரசங்கம் செய்துவிட்டாள் கமலா. உணர்ச்சி—வேகத்தில் கமலா பேசும்போது அவள் பேச்சு சம்பாஷணையின் ஒரு பகுதியாக அமையாது ஒரு சொற்பொழிவு ஆகிவிடும்.

இந்தப் பிரசங்க ஆவேசத்திலே பால்காரன் மெள்ளப் பாலில் தண்ணீர் சேர்த்ததுகூடக் கமலாவின் கண்களில் படவில்லை. 'இந்த அம்மாவின் கமலக்கண்கள்

தவறுகளைப் பார்க்கவும் கூசும்' என்று ஸரோஜா பால்காரனுக்குத் தைரியம் சொல்வதுபோல் பேசியது கேட்டுத்தான் கமலா பாலைப் பார்த்தாள்.

'என்னடி பார்க்கிறாய்? பால் வெள்ளையாகத்தான் இருக்கிறது கொக்குப்போல!' என்றாள் ஸரோஜா.

இதற்குள்ளே பால்காரன் மாட்டை ஓட்டிக்கொண்டு போய் விட்டான்.

'என்ன, சிரிக்கிறீர்களா? பால்காரன் நிறையப் பாலில் தண்ணீர் கலந்துவிட்டானா?' என்று கேட்டாள் கமலா.

'தண்ணீரில் பாலைக் கலக்க வில்லை!' என்றாள் ஸரோஜா.

'கறந்த பாலின் சூடு இல்லாமல் ஜில்லென்று இருக்கிறதே!' என்று திகைத்தாள் கமலா.

தீங்கின்றிப் பாலெல்லாம்
திங்கள்மும் மாரிபெய்து

என்று சிரித்தாள் ஸரோஜா. பிறகு

ஆழி மழைக்கண்ணா!
ஒன்றும்நீ கைகரவேல்

என்ற மழைப் பாட்டையும் பாடத் தொடங்கிவிட்டாள்.

கமலாவுக்குக் கொஞ்சம் கோபமும் வந்துவிட்டது. 'பால் வாங்குவதிலும் காப்பி போடுவதிலும் ஜாக்கிரதையாக இருந்தால் போதுமா?' என்று காரமாய்க் கேட்டாள்.

'உன் கேள்வியில் காரம் இருக்கிறது, ஸாரம் இல்லை!' என்றாள் ஸரோஜா.

'காலை வேளையில் இவர்கள் சண்டை போட்டுக்கொள்ளலாகாதே' என்று நான் பேச்சின் அந்தப்போக்கை மாற்ற விரும்பிக் கமலாவை நோக்கி, 'நீ மூடக்கட்டு என்றாயே, நோன்பெல்லாம் மூடக்கட்டு என்றுதான் உண்மையாகவே நினைக்கிறாயா?' என்று மெள்ளக் கேட்டேன்.

'திருப்பாவைப் பாடல்கள் அழகாய்த்தான் இருக்கின்றன. அசல் கவிதை; "இன்னிசைச் செந்தமிழ்ப் பூங்கோத்து" என்று வேணுமானாலும் சொல்லிக்கொள்ளுங்கள். ஆனால் இந்த மார்கழி நோன்பு நோற்கிறதும், "மழைக் கண்ணா!" என்று பூமியிலிருந்து கூச்சல்போட வானத்திலிருந்து மழை பெய்கிறதும், உனக்கு வேடிக்கையாகத் தோன்றவில்லையா? பாடல்களைக் கேட்டுக் கேட்டு உள்ளம் வசிகரிக்கப் பெற்றதால் பகுத்தறிவு சிந்தனை செய்யமாட்டேன் என்கிறது!' என்றாள் கமலா.

இச்சமயத்தில் ராமுவும் திருப்பாவைப் பொங்கலை நினைத்துக் கொண்டு எழுந்து வந்துவிட்டான். தான் எழுந்தது போதாதென்று எதிர்வீட்டுச் சோமுவையும் எழுப்பிவிட்டான். இருவரும்,

நீர்வளம் பெருகி
நெல்வளம் கொழிக்க!
பால்வளம் பெருகப்
பசுவினம் செழிக்க!

என்று தொடங்கி விட்டார்கள்.

'இது என்ன, ஒரு புதிய திருப்பாவையோ?' என்றாள் ஸரோஜா.

பிள்ளைகளே,
மழைவளம் பெருகி
மனிதர்கள் செழிக்க!
உழவும் தொழிலும்
உயர்க, ஓங்குக!

என்று பாடினார்கள்.

பக்கத்து வீடு ஒன்றிலிருந்து காமு என்ற சிறுமி,

மழையே! மழையே!
வா, வா;
மங்களம் யாவும்
தா, தா

என்று பாடத் தொடங்கினாள்.

'இந்தக் குழந்தைகளின் மழைப் பாட்டைக் கேட்டு மழை வரப் போகிறதா? இப்படித்தான் மழைப் பாட்டுப் பாடியிருக்கிறார்கள் ஆண்டாளும் மாணிக்கவாசகரும். கவிதை உயர்ந்த ரகம்.

வாழ உலகினில்
பெய்திடாய்

என்று மழைக் கடவுளை நோக்கிப் பிரார்த்திப்பதால் மழை பெய்துவிடுமா? அப்படிப் பெய்யுமானால் இந்த ஆண்டு-மழைக் குறைவை நாம் மார்கழி நோன்பு நோற்றுத் 'திருப்பாவை'யும் 'திருவெம்பாவை'யும் பாடிப் போக்கிக் கொண்டிருக்கலாமே?

புழலேரி பெருக,
குழாய் நீர் வருக

என்று பாடிச் சென்னைமாநகருக்குத் தண்ணீர்க் கவலை சிறிதும் இல்லாமல் செய்திருக்கலாமே!' என்றாள் கமலா.

'இப்படியெல்லாம் சொல்மழை பொழிந்துதான் என்ன பயன்?' என்றாள் ஸரோஜா. கமலாவை நோக்கி இப்படிச் சொல்லவில்லை; என்னை நோக்கியும் பேசவில்லை. தனக்குள் தானே பேசிக்கொள்வதுபோல்சொல்லிக்கொண்டாள்.

பிறகு நான் மார்கழி நோன்பின் உட்பொருளை விளக்குவதாய்ச் சொன்னதும் ஸரோஜா, 'காப்பி சாப்பிட்டுவிட்டு,

தூயோமாய் வந்துநாம்
தூமலர்தூ வித்தொழுது,

உன் வாயினால் கேட்டு எங்கள் மனத்தினால் சிந்தித்துப் பார்ப்போம்' என்றாள்.

எல்லாரும் காப்பி சாப்பிட்ட பின் நான் மார்கழி நோன்பைக் குறித்துப் பேசினேன் — 'நாடு செழிக்கவும், நல்ல கணவர்களை அடையவும் விவாகமாகாத பெண்கள் பழைய காலத்தில் நோற்று வந்த நோன்பு இது. ஆதியில் தேவி பூஜையாகிய நோன்பாகத்தான் பெண்கள் கொண்டாடினார்கள். இந்த விரதத்திற்கு ஆண்டாள் கிருஷ்ண பக்தியையும், மாணிக்கவாசகர் சிவபக்தியையும் விஷயமாகக்கொண்டு அற்புதமான தமிழ்ப் பாடல்கள் பாடியிருக்கிறார்கள்' என்று நான் சொல்லி வரும்போதே, ஸரோஜா குறுக்கிட்டாள்:

'நீ தொடர்ச்சியை மறந்துவிடாதே. ஒரே ஒரு வார்த்தைதான் நான் இப்போது சொல்ல விரும்புகிறேன். நல்லிசைப் பெரும் புலவரான அரியக்குடி ராமானுஜையங்கார்திருப்பாவைப் பாடல்களை அருமையாக ஸ்வரப்படுத்தியிருக்கிறார். நீ மேலே சொல்லலாம்.

'இப்போது நான் அதிகமாக ஒன்றும் பேசவிரும்பவில்லை அந்தப் பழைய நோன்பை ஆண்டாளும் மாணிக்கவாசகரும் பக்தியை வளர்க்கப் பயன்படுத்திக் கொண்டதுபோல், நாமும் இந் நாளிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். பக்தி விசுவாசம் என்பது முக்காலத்திற்கும் பொதுவான உண்மை மனிதனுடைய சமுதாய ஒழுக்கத்திற்கும் பூகம்பம் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் ஒரு குட்சுமத் தொடர்பு உண்டென்று கூட மகாத்மா காந்தியும் நம்பியதுண்டு. அவரும் உண்ணாவிரதம் முதலானநோன்புகளில் நம்பிக்கை கொண்டவர். பக்தி விசுவாசத்தை வளர்த்துக் கொள்வதும், உள்ளத்தைப் பண்படுத்திக்கொள்வதும் தான் மார்கழி நோன்பின் முக்கிய நோக்கம்; இயன்ற முறையில் நாமும் இப்பாடல்களைப் பாடி மகிழ்வதுடன் நமக்குப் பலனைக் கருதுவது முக்கியமன்று. இசைந்த ஏதாவதொரு நோன்பை அனுஷ்டிப்பதிலும் தவறொன்றும் இல்லை; நன்மைதான் உண்டு' என்றேன்.

———



தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

11

அழிவில் அடங்கிய ரகஸியம்

★

இயங்கும் உடம்பில் இந்திரியங்களாலும் மனத்தாலும் அறிய முடியாத ஜீவாத்மா இருந்து வருகிறது. அது உடல் தோன்றும் முன்னும் இருந்தது. உடல் அழிந்த பிறகும் அதே நிலையில் இருக்கப் போகிறது என்று வேதாந்திகள் கூறி வருகிருர்கள். ஜீவாத்மாவை அறிய மாட்டாதவர்களுக்கு 'அது உண்டு' என்று சொல்ல வேதத்தையே பிரமாணமாகக் காட்டுகிருர்கள். ஆனல் அதில் எல்லோருக்கும் நம்பிக்கை சுலபமாக ஏற்படுமா? ஏற்பட்டாலும் அது அனுஷ்டானம்வரை வந்து மரணத்தால் வரும் பயத்தையும் சோகத்தையும் எல்லோருக்கும் போக்குமா? போக்காதுதான். வாழ்வின்போது இயங்கி வந்த தேகம், மரணம் ஏற்பட்ட மறுகணமே இயக்கம் இல்லாமல் போகிறது. இதையே பிரத்தியட்சமாகப் பார்ப்பதால் பலர் உயிரும் உடலைப்போலவே நிலை கெட்டு உடலோடு அழிந்து போகிறது என்றே நினைக்கிருர்கள். அவ்வாறு நினைத்தாலும் துக்கிப்பதற்கு இடம் இல்லை. மரணத்தில் உயிர் அழிவதாக நினைத்தாலும், உடலும் உயிரும் அழிவதாக நினைத்தாலும் இரண்டும் விலக்க முடியாதிருப்பதால் வருந்துவதில் என்ன பயன்? என்று கண்ணன் அர்ஜுனனைக் கேட்பது அடுத்தபடியாகச் சொல்லப்படுகிறது.

பிறந்தவனுக்கு ஆங்கிறத்தல்
பின்அறுதி அவ்வா
றிறந்தவனுக் கும்பிறப்பும்
எய்தும்—திறம்தன்னல்
ஒன்றும் பரிகாரம்இல்லா
ஒரு பொருட்கு
நின்று மனந்தளரேல் நீ

(இ-ள்.) பிறந்தவனுக்கு பின் இறத்தல் அறுதி—பிறந்தவன் இறந்து போவது நிச்சயம், அவ்வாறு இறந்தவனுக்கும் பிறப்பும் எய்தும்—அதுபோலவே இறந்துபோனவன் மறுபடி பிறப்பை அடைவதும் (நிச்சயம்), திறம் தன்னல் ஒன்றும் பரிகாரம் இல்லா—தன் பலத்தால் எந்த விதத்திலும் விலக்க முடியாத, ஒரு பொருட்கு—மரணமாகிய ஒன்றிற்கு, நீ—, நின்று மனம் தளரேல்—எப்போதும் வருத்தப் படாதே.

4
ஜாதஸ்ய ஹித்ருவோ ம்ருத்யு:
4
த்ருவம் ஜந்ம ம்ருதஸ்யச
2
தஸ்மாத் அபரிஹார்யேர்தே
நத்வம் சோசிதும் அர்ஹஸி.

(இ-ள்) ஜாதஸ்ய — பிறந்ததற்கு, ம்ருத்யு:—அழிவு, த்ருவம்—நிச்சயம், ம்ருதஸ்யச—அழிவுற்றதற்கு, ஜந்மத்ருவம்ஹி—பிறப்பும் நிச்சயமாகும், தஸ்மாத்—ஆகையால், அபரிஹார்யே—தவிர்க்க முடியாத, அர்(த்)தே—விஷயத்தில், த்வம் சோசிதும்—நீ துக்கிப்பதற்கு, நார்ஹஸி — தகாதவனுயிருக்கிருய்.

மரணம் தவிர்க்க முடியாத விஷயம்தான். ஆனல் அது எல்லோருடைய வெறுப்பிற்கும் இடமானதாயிருக்கிறதே. கொஞ்சம் கூட விருப்பத்திற்குகந்த விஷயமாயில்லையே. விருப்பிற்கிடமில்லாது கேவலம் வெறுப்பிற்கே இடமாயிருக்கும் ஒன்றிலிருந்து சோகமும் பயமும் எங்ஙனம் உண்டாகாதிருக்கும்? தவிர்க்க முடியாத மரணத்தால் சரீரம் அழிந்து போவது எல்லோருக்கும் பிரத்தியட்சமாயிருக்கிறது. சரீரம் சாமானியமானதா? வாஸனைத் திரவியங்களையூட்டி பிறர் விரும்பப் பரிமளம் வீசச் செய்யப்பட்டது. குழந்தையாயிருந்த காலத்தில் பெற்ருேரும் உறவினரும் தழுவி முத்தமிட்டுக் கொஞ்சி ஆனந்தம் பெறுவதற்கு இருப்பிடமாயிருந்தது. ஒரு காலத்தில் புருஷனே அல்லது பெண்ணே இன்பம் பெறுவதற்கு இடமாயிருந்தது. அத்தகைய சரீரம் வாழும் காலத்தில் எடை குறைந்தால் கவலைக்கிடமாகிறது. நோய் காரணமாக சருமத்தின் நிறம் மாறி விகாரமாகத் தோன்றினல் கவலை உண்டாகிறது. எடையைக் கூட்ட மருந்து சாப்பிடுவது, புதிதாகச் சத்துள்ள உணவைக் கொள்வது; சரும நிறத்தைச் சரியாக்கத் தைலம் பூசுவது; ஊசி போட்டுக்கொள்வது என்று விதவிதமாகப் பரிகாரங்கள் தேடிப் பாதுகாக்கப்பட்ட உடல் மரணத்தில் அடியோடு அழிந்து போவதை எப்படிச் சோகமும் பயமும் இல்லாமல் சகித்துக்கொண்டிருக்க முடியும்? உடலுக்கு ஒரு காலத்தில் வரும் அழிவை தவிர்க்க முடியாததாயிருந்தாலும் அவ்வழிவைச் சற்று முன்பே உண்டாக்க எல்லோருக்கும் மனம் வருமா? பீஷ்மத், துரோணுதியரின் சரீரங்கள் அன்புடனும் மரியாதையுடனும் அர்ஜுனனல் வணங்கப்பட்டன. சரீரத்தின் அழிவு தவிர்க்கவொண்ணுததென்று நினைத்து அர்ஜுனனல், தானே அவற்றை அழிக்க முற்பட

முடியவில்லை. சோகமும் பயமும் உண்டாகவே செய்தன. அதையறிந்துகொண்ட கண்ணன் அடுத்தபடியாக 'அழிவு' என்பதில் அடங்கிய பொருளைத் தெளிவு படுத்துகிறார்.

பூதங்களான புணர்ச்சி
முதல் விளங்கா
சாதனங்களான விடை
தான்விளங்கு—மீதங்குப்
பொன்று நிலைதான் விளங்கா
போக்காம் அதில் வெறுப்
நின்றதனைக் கேளின்ன நீ [பென்

(இ-ள்) பூதங்களான புணர்ச்சி முதல் விளங்கா—(பஞ்ச) பூதங்களின் சேர்க்கையாலான சரீரங்கள் ஆதியில் தோன்றாத நிலையுடையன, சாதனங்களான இடைதான் விளங்கும்—கருவிகளாக இயங்கும் இடைக்காலத்தில் தோன்றும் நிலையுடையன, மீது அங்கு பொன்று நிலைதான் விளங்கா—மேலும் அழிகின்ற கடைசிக்காலத்தில் தோன்றா நிலையுடையன, போக்காம்—அது சரீர காரணமான வஸ்துவினது சுபாவமாம். அதில் வெறுப்பு என்?—அதில் வெறுப்புக்காட்டி என்ன பயன்? இன்னம் நீ—மேலும் நீ, நின்றதனைக் கேள்—(அழியாது) நிலைத்திருப்பதைப்பற்றிக் கேட்பாயாக.

3 4
அவ்யக்தாதீநி பூதாநி
4 [4
வ்யக்த மத்யாநி பாரத
4
அவ்யக்த நித நாந்யேவ
3
தத்ரகா பரிவேத நா

(இ-ள்) பாரத!—அர்ஜுனா! பூதாநி-சரீரங்கள், அவ்யக்தாதீநி-அறியப்படாத பூர்வா வஸ்த்தையுடையன, வ்யக்த மத்யாநி—நடுவில் தோன்றும் நிலையை உடையன, அவ்யக்த நிதநாந்யேவ—(முடிவில்) புலப்படாத அழிவையுடையவைகளே, தத்ர—அவ்விஷயத்தில். பரிவேத நாகா—சோகம் (கொள்வதால் பயன்) என்ன?

கண்ணால் காணப்படும் அல்லது காண இயலும் எல்லாப் பொருள்களுக்கும் முதல் இடை கடை என மூன்று நிலைகள் உண்டு. அந்நிலைகளை ஆதி மத்திமம், அந்தம் என்றும் சொல்லலாம். இடைக்காலம் ஒன்றிலே தான் பொருள்கள் பலவாய்க் காணும் நிலையில் இருக்கின்றன. அதற்கு முன்னும் பின்னும் பொருள்கள் இல்லாமல் போவதில்லை. கண்ணால் காணும் உருவத்தில் இருப்பதில்லை. காண இயலாத பொருளின் இருப்பை உலக இயல்பைக்கொண்டே அறியலாம்.

தண்ணீர் காணும் உருவில் இருக்கிறது. அதை நன்றாகக் கொதிக்கவைத்தால் நீராவியாக மாறிவிடுகிறது. அந்நிலையில் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. தகுந்த கருவிகளின் உதவியால் நீராவி நிலையில் நிற்கும் நீரைக் குளிரச் செய்தால், மறுபடி கண்ணிற்குப் புலனாகக்கூடிய தண்ணீராக மாறுகிறது. கண்ணுக்குப் புலப்படும் நீரின் நிலையை அப்பொருளின் இடைக்காலம் என்று கொள்ளலாம். அதற்கு முன்னே நீராவியாக இருந்திருக்கவேண்டிய அதன் நிலையை முதல்காலம் என்று கொள்ளலாம். சூட்டினால் நீரின் நிலை மாறி மறுபடி நீராவியாகி உருவம் தெரியாதிருக்கும் நிலையைக் கடைக்காலம் என்று சொல்லலாம்.

மேற்கூறியபடியே கண்ட பொருள் எதுவும் இல்லாமல் போவதில்லை. ஒரு துண்டுப் பேப்பரை நெருப்பில் காட்டினால் கருகுகிறது. பின் பொடியாகிச் சாம்பராகிறது. 'பேப்பர் கெட்டு விட்டது, அழிந்து விட்டது' என்று சொல்லுகிறோம். அதன் பொருள் என்ன? பேப்பர் உருவத்தில் நம் கண்ணுக்குத் தோன்றிய வஸ்து இல்லாமல் போய்விட்டதா? இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அதன் நிலை மாறிவிட்டதால் முன்னைப்போல் தோன்றவில்லை. கண்ணுக்குத் தோன்றும் பதார்த்தங்களின் நிலைகள் மாறிக்கொண்டேயிருக்கும். ஒரு நிலையில் தோன்றிய உருவத்துடன் மறு நிலையில் தோன்றுவதில்லை. ஒரு நிலையில் கண்ணுக்குத் தோன்றி, மறு நிலையில் கண்ணுக்குத் தோன்றுவதும் இல்லை. ஆனால் பதார்த்தங்கள் மாறுதல் அல்லது விகாரம் அடைந்தாலும் எப்பொழுதும் இல்லாமல் போவதில்லை. அழிவினால் பதார்த்தங்களில் மாறுதல் ஏற்படுகிறதேயொழிய பதார்த்தங்களுக்கு இன்மை நிலை உண்டாவதேயில்லை. இன்மை நிலையை எவராலும் உண்டாக்கவும் இயலாது.

அவ்வாறே பிராணிகளின் சரீரங்களாகக் காணப்படும் வஸ்து ஆதியில் மூலப்பிரகிருதியில் மறைந்துகிடந்து நடுவில் மனுஷ்யாதி சரீரங்களாகக் காணப்படுகிறது. கடைசியில் மாறி மூலப்ரக்கிருதியிலேயே மறையப் போகின்றது. என்று சிருஷ்டியும் ஸ்திதியும் ஸம்ஹாரமும் ஆகிய பிரபஞ்சத்தின் மூன்று தன்மைகளும் இப்பாடலில் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன.

ஆதியில் மூலப்ரக்தி அதிலிருந்து மஹான், அதிலிருந்து அஹங்காரம், தன் மாத்திரை, அதிலிருந்து ஆகாசம், வாயு அக்னி, ஜலம், பூமி என்ற முறையில் தோன்றி அவற்றின் சேர்க்கையால் கர்மேந்திரியம், ஞானேந்திரியம், மனம் இவற்றிற்கிடமான தேகம் தோன்றியது. தோன்றிய முறையிலேயே தேகம் மண்ணாக மாறி அது ஜலமாகி, நெருப்பாகி, வாயுவாகி ஆகாசமாகி முடிவில் மூலப்ரக்ருதியில் ஒடுங்கும். ஐம் பூதங்களின் சேர்க்கையாலான சரீரம் மரணத்தால் சாம்பலாகவோ மண்ணாகவோ மாறும். நாளடைவில் மாறிக்கொண்டே போய் தோன்றாத மூல ப்ரக்ருதியிலே ஒடுங்கும்.

போர் செய்ய வந்திருக்கும் எந்த வீரனாலும் ஆயுதங்களின் உதவியாலோ தன் பலத்தாலோ தேகத்தை இல்லாதபடி அழித்துவிட முடியாது. தேகத்திற்குக் காரணமான வஸ்து எப்பொழுதும் இருந்துகொண்டே இருப்பதை அறியாதவர்கள் மரணத்தில் தேகத்திற்கு அழிவினால் 'நிலை மாறுதல்' ஒன்றே வருவதைக் கிரகிக்க முடியாமல், மரணத்தில் தேகத்தை நினைத்துச் சோகிக்கிறார்கள். 'அழிவில் அடங்கிய ரகஸியம்' இதுதான் என்று அறிந்தவர்கள் மரணத்தை நினைத்து மேற்கொண்ட காரியத்தைக் கைவிடமாட்டார்கள் என்று கண்ணன் கூறினார்.

ரமாவைக் கேளுங்கள்!

குங்குமம்

அன்புள்ள கீதாவுக்கு,

'எதற்கெடுத்தாலும் ஒரு உபமானம் சொல்லாமல்தான் உனக்குப் பேசத்தெரியாதே' என்று அடிக்கடி என்னைப் பற்றி நீ சொல்வாயல்லவா? பேச்சில் மாத்திரமில்லாமல் எழுத்தில்கூட அது இல்லாமல் சரிப்பட்டுவராது போலிருக்கிறது.

கோர்ட்டில் ஒரு வழக்கு விசாரணை நடந்துகொண்டிருந்ததாம். ஒரு ஸ்திரீ, சாட்சி சொல்ல வந்திருக்கிறாள். அவளைப் பார்த்து மாஜிஸ்டிரேட் 'உங்கள் வயது என்ன?' என்று கேட்டாராம். 'இருபது வயதும் சிலமாதங்களும் ஆகிறது' என்று பதில் சொன்னாளாம். 'சிலமாதங்கள் என்றால்? எத்தனை மாதங்கள்?' என்று கேட்டாராம். நூற்று இருபத்து ஆறு மாதங்கள் என்றாளாம். அதாவது இருபதுவயதும் நூற்று இருபத்தாறு மாதங்களுமா? என்றாராம் மாஜிஸ்டிரேட். ஆமாம் என்றாளாம் அவள். கோர்ட்டில் இருந்தவர்களெல்லோரும் கொல் என்று சிரித்துவிட்டார்களாம்.

அதேமாதிரி சிங்காரம்மாள் (எங்கள் அத்தை) அவர்களை யாராவது வயது என்ன என்று கேட்டால் ஒரு பத்து வயதாவது குறைக்காமல் சொல்லவேமாட்டாள். வயது முப்பத்தைந்தோ முப்பத்தாறோ ஆகிறது. இருபத்திஐந்து, இருபத்தி ஆறுக்கு மேல் அவள் சொன்னதே கிடையாது. அதற்குத்தகுந்த மாதிரி அவளுடைய சரீர அமைப்பும் பொருத்தமாக இருந்தது.

இரண்டு சவுரிதான் வைத்துக்கொள்வாளோ அல்லது மூன்று சவுரிதான் வைத்துக்கொள்வாளோ, கைக்கு அடங்காதபடி அடர்த்தியாக இடுப்பு வரையில் தொங்கும் பின்னல்; அதில், கழுத்து தாங்குமோ தாங்காதோ என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கு கனகாம்பரம், கலகலவென்று கை நிறைய வளையல்கள், காலோடு கால் ஒட்டிக்கொள்கிறமாதிரி லேசாக சிலிப்பர் ஆகியவைகளுடன் கறுப்பு பார்டர் போட்ட கெம்புக்கலர் (பட்டு) புடவையைத் தழையத் தழைய உடுத்திக்கொண்டு அஸ்தமிக்கிற சமயத்தில் அவள் பீச்சை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும்போது கொஞ்ச தூரத்திலிருந்து அந்தப் 'பின் சேவை'யைப்பார்த்தால், உண்மையிலேயே அவள் தன் வயதை இருபது என்று சொன்னால்கூட நம்பும்படியாகத்தான் இருக்கும். இந்தக்காலத்து 'மேக் அப்'பில் தொண்டுகிழவிகள்கூட 'பின் சேவை'யைப் பார்த்தால் பதினாறு வயது குமாரிகளாகத்தான் காட்சியளிக்கிறார்கள் என்று உன் பக்கத்தகத்து மாமா, மாமி டிரெஸ் செய்துகொண்டு வெளியில் கிளம்பும்போதெல்லாம் வேடிக்கையாகச் சொல்லிவிட்டுச் சிரிப்பாரே ஞாபகத்துக்கு வருகிறதா? அது இவள் விஷயத்தில் கொஞ்சம்கூடப் பிசகில்லை. உயர்ந்த கெட்டிக்கரை புடவைகள் தவிர வேறு கட்டுவது கிடையாது.

''.........'பின் சேவை'யைப் பார்த்தால்......''

'அகமுடையான்தான் தள்ளிவைத்து'விட்டான். 'வாழாவெட்டியாக'வல்லவோ இருக்கிறாள். அவளா இவ்வளவு தடபுடலாக இருக்கிறாள்? இதற்கெல்லாம் பணம் ஏது?' என்று யோசிக்கிறாயா?

சிங்காரத்தைத் தெரியாதவர்கள் இந்தப் பிராந்தியத்தில் யாராவது இருக்கிறார்களா?

அவளுக்குத் தெரியாமல் எந்த வீட்டிலும் ஒரு நல்லதோ கெட்டதோ நடக்காது. எந்த வேலையையும் தானாக வலிய இழுத்துப்

போட்டுக்கொள்வாள். இதை அப்படிச் செய்ய வேண்டும், அதை இப்படிச் செய்ய வேண்டும், இந்தக்கலியாணத்துக்கு இவ்வளவு சாமான்கள் வாங்கினுல் போதும், சம்பந்திகளுக்கு இவ்வளவு 'சிரப்பு' கொண்டு வைத்தால் போதும், இதற்கு இரண்டு சமையல்காரர்கள் வேண்டியதில்லை,ஒருவனை வைத்துக்கொண்டு கூடமாட நாம் ஒத்தாசையாக இருந்தால் சமாளித்து விடலாம் என்று அவரவர்கள் சக்திக்குத் தகுந்த மாதிரி பட்ஜெட் தயாரித்துக் கொடுப்பதில் இவளை மிஞ்சுகிறவர்கள் யாரும் கிடையாது. ஒரு குடும்பத்தில் சண்டை மூள்வதும் ஸ்ரீமதி சிங்காரம் அவர்களால்தான். ஒரு குடும்பத்தில் ராஜி ஏற்படுவதும் மேற்படி ஸ்ரீமதி அவர்களால்தான். ஒரு குடும்பம் குட்டிச்சுவராவதும் அவளால்தான். ஒரு குடும்பம் முன்னுக்கு வருவதும் அவளால்தான். சுருங்கச் சொல்ல வேண்டுமானுல் ஆக்குவதும் அழிப்பதும் அவள் கையில்தான்.

இந்த வட்டாரத்தில் கடைகளின் விளம்பர சாதனம் பத்திரிகைகளல்ல. ஸ்ரீமதி சிங்காரம் அவர்கள்தான். புதிய மாதிரியில் ஒரு புடவை வந்திருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். முதல் தரம் இவளுக்குத்தான். அதாவது ஸ்ரீமதி சிங்கார அம்மாள் அவர்களைக் கூப்பிட்டு கடைக்காரர் அதில் ஒரு புடவையை 'பிரஸண்ட்' செய்துவிடுவார். அவ்வளவுதான் அன்று சாயங்காலத்துக்குள் அந்த வட்டாரத்தில் அந்தமாதிரி புடவையை வாங்கக்கூடிய அந்தஸ்துள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஏறி இறங்கிவிடுவாள். அதன் மகிமையைப்பற்றி ஆயிரம் விதங்களில் சொல்லி உடனே ஒவ்வொருவரையும் ஒரு புடவை வாங்கியாகும்படி செய்துவிடுவாள். இது பேசும் விளம்பரம். பத்திரிகைகளில் எவ்வளவு பணம் கொடுத்தால் இந்த மாதிரி விளம்பரம்செய்யமுடியும்? ஆகவே கடைக்காரர்கள் அவர்களாக, புதியமாதிரியில் வரும் புடவைகளில் ஒன்றை விடேறி வந்து அத்தையின் கையில் கொடுத்து விட்டுப் போய்விடுவார்கள். ஆகவே வேளைக்கு ஒரு தினுசாக அவள் புதுப் புடவை உடுத்திக்கொள்வதில் என்ன ஆச்சரியமிருக்கிறது!

"...புடவையை பிரஸண்டு செய்துவிடுவார்கள்..."

எங்கு வம்பர் மகாசபை நடந்தாலும் அதற்குத் தலைமை வகிக்கும் பாக்யம், அத்தை இல்லாவிட்டால்தான் வேறு யாருக்காவது கிடைக்கும். ஒவ்வொரு குடும்பத்தின் ரகசியமும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கே தெரியுமோ தெரியாதோ, அத்தைக்குத் தெரியாமல் இருக்கவே இருக்காது. இருக்கவும் முடியாது. இன்னின்னருக்கு இவ்வளவு கடன், இவ்வளவு இருப்பு, கார் வைத்துக்கொண்டு ஆடம்பரமாகப்போகும் அந்தப்பேர்வழி, வெறும் பகட்டு, 'உடம்பு முழுதும் ஒரேகடன்' என்பது போன்ற, இந்தவட்டாரத்திலுள்ளவர்களின் புள்ளி விவரங்களெல்லாம் அத்தைக்குத் தலைகீழ்ப்பாடம். பேச்சிலே மகா கெட்டிக்காரி. வானத்தை வில்லாகவே வளைப்பாள். மணலைக் கயிருகத் திரிப்பாள் என்று சொல்வார்களே, அது அத்தைக்கு அப்படியே பொருந்தும். இவர்கள் மரியாதைப் பட்டவர்கள், இவர்கள் அசல் மனுஷ்யாள், இவர்கள் சொந்த மனுஷ்யாள் என்ற வித்தியாசமே கிடையாது. எல்லோரிடமும் ஒரே மாதிரிதான் பேச்சு. ஓ என்ற இரைச்சல்தான். அடக்க ஒடுக்கம் என்பது அவள் அகராதியிலே கிடையாது.

இல்லாவிட்டால் அழகும் சாமர்த்தியமும் உள்ள ஒருத்தியை எதற்காக அகமுடையான் தள்ளி வைக்கிருன்? பாவம் அத்தையைத் தொட்டுத் 'தாலி' கட்டிய தோஷம்தானும். ஒரு நிமிஷம் அவளோடு சந்தோஷமாய்ப் பேசினேம் என்பதே கிடையாதாம். ஏதோ காலையில் எழுந்து ஒரு ரசம் சாதம் சமைத்துப் போட்டதுதான் அந்த 'மனுஷன்' கண்டதாம். ஒரு நாளாவது, அலுத்து ஆபீஸிலிருந்து வரும்போது ஆதரவாய் வரவேற்று ஒரு சரஸஸல்லாபம் என்பது கிடையவே கிடையாதாம். வரும்பொழுதே வீடு பூட்டியிருக்குமாம். பக்கத்து, வீடு, கோடி வீடு என்று தேடிப் பிடித்தால்தான் உண்டாம். ஒரு சங்கீதக்கச்சேரி, சினிமா

ஒன்றும் தவறமாட்டாளாம். கணவனுடன் போவதைவிட சிநேகிதிகளுடன் போவதில் தான் அவளுக்கு அதிகப் பிரியமாம். புருஷன்என்ற லட்சியமே கிடையாதாம். பாவம்! அவனும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தானும். அதற்கும் ஒரு எல்லே உண்டல்லவா? அதை மீறிவிடவேதான் இவளைத் தள்ளிவைத்துவிட்டு, வேறு கல்யாணம் செய்துகொண்டு விட்டானும். இருந்தாலென்ன? அதை இவள் சிறிதாவது பொருள்படுத்தினுல்தானே. அவன் மானி பாவம்! நாலுபேரறியத் தொட்டுத் தாலி கட்டிய தோஷத்துக்காக மாதம் முப்பது ரூபாய் ஜீவனும் சம் அனுப்பி வருகிருன். அதை வைத்துக்கொண்டு இவள் மான அவமானம் இல்லாமல் எல்லோரையும்விட நூறுமடங்கு அதிகச் சந்தோஷத்துடன் வாழ்க்கை நடத்திக் கொண்டு வருகிருள்.



''.......................அங்கே இல்லீங்களே.......................''

எதற்காக இவளைப்பற்றி இவ்வளவு வர்ணனை என்று கேட்கிருயா? எங்கள் குடும்பத்துக்கு இவள் வேர்ப்புழு என்பதை நான் சொல்லாமலே நீ தெரிந்து கொள்வதற்காகத்தான்.

தெருவிலிருந்து கூப்பிட்டு உனக்குத் தெரியுமாடி? என்று இவள் கேட்டாளென்று முன் கடிதத்தில் எழுதியிருந்தேனல்லவா?

என்னமோ கூப்பிடுகிருர்களேயென்று போனேன். எல்லோரும் குசுகுசுவென்று பேசிக் கொண்டிருந்தார்கள்,

உனக்குத் தெரியுமாடி? உன்னிடம் ஏதாவது சொல்லி விட்டுப் போனுளா? என்ருள்.

எனக்கு ஒன்றும் தெரியாதே. 'யாரைப்பற்றிக்கேட்கிறீர்கள்?' என்று கேட்டேன்

'காலேயில் காப்பி சாப்பிட்டு விட்டுப் போனவள், வஸந்தா (சிறிய மைத்துனி - காலேஜ் குமாரி) இன்னும் வரவில்லேயே. உன்னிடம் ஏதாவது சொல்லி விட்டுப் போனுளோ என்று கேட்டேன்' என்ருள் அத்தை.

'என்னிடம் ஒன்றும் சொல்ல வில்லேயே' என்றேன்.

'ஒருவேளே கோபாலன் ஆத்துக்குப் போயிருக்கிருளோ என்னவோ?' என்ருள் பெரிய நாத்தனர்.

'அங்கு போயிருந்தாலும் இவ்வளவு நாழி அங்கே இருக்க மாட்டாளே. எதற்கும் அங்கேயும் பார்த்துக்கொண்டு வர, வேலேக்காரியை அனுப்பியிருக்கிறேன்' என்று அத்தை சொல்லிக்கொண்டிருக்கும் போது வேலேக்காரி வந்து சேர்ந்தாள்.

'என்னடி? இருக்கிருளா அங்கே?' என்று கேட்டாள் மாமியார்.

'இல்லேயே அம்மா! காலேயிலே வந்ததாம். அப்பொழுதே வந்துவிட்டதாம். கோபாலன் கூட காலேயில் வீட்டை விட்டுப் போனது இன்னும் வீட்டுக்கு வரவில்லேயாம்' என்ருள் வேலேக்காரி.

'வேறு எங்கே போயிருக்கும்?' என்ருள் மாமியார்.

இருந்தாலும்கூட வயசு வந்த ஒரு பெண். இங்குதான், போகலாம் இங்குதான் போகக் கூடாது என்ற வித்தியாச மில்லாமல் இப்படிக் கேள்வி முறையில்லாமல் பழகுவது நன்ருகயில்லேயம்மா. போகத்தான் போகிறதே. 'இங்கே போகிறேன். இங்கே வருகிறேன்' என்று ஒரு தகவல் சொல்லிவிட்டுப் போகாதோ?' என்ருள் நாத்தனர்.

அதோ தெருவில் ஏதோ கார் வந்து நிற்கிறது. மற்றவை அடுத்த கடிதத்தில்.

உன் அன்புள்ள

ரமா



அத்தியாயம் 18

சேகரன், ராமசாமி முதலியவர்களை சென்ட்ரல் ஸ்டேஷனில் நடேசய்யர் எதிர்கொண்டழைத்தார். ராவ்பகதூர் பயங்கர நரஸிம்மமும் அவர்களுடன் கூடவே இருந்தது அவருக்கு மிக்க ஆச்சர்யத்தை விளைவித்தது.

"ராவ்பகதூர் ஸார்! நீங்க அவசியம் நம்மாத்துக்கு வரணும். கதலீபுரத்திற்கு நான் வந்திருந்தபோது நீங்கள் என்னிடம் காட்டிய அன்பையும், ஆதரவையும் நான் என்றென்றும் மறக்கமுடியாது" என்று மிகுந்த பிரியத்துடன நரஸிம்மத்தை வரவேற்றார் நடேசய்யர்.

"இல்லை, மன்னிக்கவேண்டும். ஊருக்குச் சீக்கிரமாய்ப் போகவேண்டும். அந்தக் குட்டி ரொம்பக் கவலைப்படுவாள்" என்று சாக்குப் போககு சொல்ல ஆரம்பித்தார் நரஸிம்மம். சமீபத்தில் ஒருவருடைய மருமகன்மீது பெரிய திருட்டுக்குற்றம்சாட்டிவிட்டு. அவர் வீட்டிற்கே அதிதியாகப் போய்ச்சேருவது அவருக்கு உசிதமாகப்படவில்லை.

"மாப்பிள்ளை! நீங்களும் சொல்லுங்களேன்!" என்று ராமசாமியைக் கேட்டுக்கொண்டார் நடேசய்யர்.

"சொல்லவாவது! அவர் வராவிட்டால் யார் அவரை விடப்போகிறார்கள்!" என்று மிகுந்த உரிமையுடன் சொன்னான் ராமசாமி. அவ்வளவு தூரத்துக்கு இருவரும் பழகிவிட்டார்கள்.

"நீங்கள் அவசியம் எங்கள் மாமா விட்டுக்கு வரத்தான் வேண்டும்" என்று சேகரன் பயங்கரத்தை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டான்.

"நீங்கள் இவ்வளவுபேர் சொல்லும்போது நான் தட்டிவிட்டுப்போக விரும்பவில்லை. இவ்வளவு அன்புடனும், உரிமையுடனும் யார் அழைக்கப் போகிறார்கள்!" என்று மிகுந்த உணர்ச்சியுடன் சொன்னார் பயங்கரம். நியாயமாகத் தன்னைச் சத்துருவாகப் பாவிக்கவேண்டிய மனிதர்கள் தன்னிடம் இவ்வளவு அன்பு காட்டியது அவருக்கு மிகுந்த ஆச்சர்யத்தை விளைவித்தது.

இதுவரையில் சேகரன் மாமா இருந்த பக்கம் கூடப் பார்க்கக் கூச்சப்பட்டுக்கொண்டு எங்கெங்கேயோ பார்த்துக்கொண்டிருந்தான். நடேசய்யரும், என்னதான் மனதில் நல்லெண்ணமும் நட்பும் ஏற்பட்டுவிட்டது என்றாலும், சேகரனைப் பார்க்க விரும்பவில்லை. ராமசாமி இதை நன்றாய் உணர்ந்துகொண்டான். தனிமையில்

சேகரனை அழைத்து, "ஏய்! பிரம்மஹத்தி! பேசுடா!" என்றான்.

"மாமா! சௌக்கியமா?" என்றான் சேகரன் நடேசய்யருக்குப் பக்கத்திலிருந்த தூணைப் பார்த்துக்கொண்டே.

"சௌக்கியந்தான்!" என்றார் நடேசய்யர், சேகரனுக்குப் பின்னாலிருந்த டிரங்குப்பெட்டியைப் பார்த்துக்கொண்டு.

ராமசாமி ஏமாற்றத்துடன் உதட்டைக் கடித்துக்கொண்டான். இதற்குள் நடேசய்யர் ஒரு டாக்ஸியை அமர்த்திக்கொண்டு வந்தார். ராமசாமி டிரைவருக்குப் பக்கத்தில் அமர்ந்துகொண்டு, நடேசய்யரையும் சேகரனையும் சேர்ந்து உட்கார்ந்துகொள்ளும்படி செய்தான். டாக்ஸி மயிலாப்பூருக்குக் கிளம்பியது.

சேகரன் தன்னையும் மீறி, "மாமா! நம்ப மங்கா உடம்பு எப்படியிருக்கிறது? டாக்டரிடம் காண்பித்தீர்களா? நான் பார்க்கும்போதே ரொம்ப 'வீக்'காயிருந்தா!" என்றான் சேகரன்.

நடேசய்யர் முகத்தில் குடிகொண்டிருந்த மௌனம் விலகியது. அவர் முகத்தில் ஒரு புன் சிரிப்பு எழுந்தது. சேகரன், கடைசியில், நடேசய்யரின் பலஹீனத்தைஅறிந்து விட்டான்!

நடேசய்யர் சேகரனின் கைகளைத் தம்முடையகைகளால் பிடித்து கொண்டார். அவருடையகண்களில் புத்தொளி வீசிற்று. அந்த ஒளியின் பிரகாசத்தில் பழைய, இன்னும் அடியோடு தொலையாத, மாத்ஸர்யங்கள், வெறுப்புக்கள் யாவும் மறைந்து விட்டன.

"சேகர்! மங்காவுக்கு உடம்பு இன்னும் பலஹீனமாய்த்தான் இருக்கிறது. டாக்டர் இப்படித்தான் இருக்கும், கவலைப்படவேண்டாம் என்கிறார். அவளைக் கொஞ்சங்கூட நடக்கக் கூடாது என்று சோபாவிலேயே சாய்ந்து கொண்டிருக்கும்படி சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், மாப்பிள்ளை இன்னும் வரவில்லையே, வரவில்லையே என்று உள்ளுக்கும் வாசலுக்குமாக நடந்து கொண்டிருக்கிறாள். நல்லவேளை! மாப்பிள்ளை வந்துவிட்டார். இனிமேல் அந்தக் கவலையில்லை!" நடேசய்யர் குரலில் புத்திரியிடம் அவர் கொண்டிருந்த அளவற்ற வாஞ்சை பிரதிபலித்தது.

"உங்கள் உடம்புகூட, மாமா! கொஞ்சம் ஒடுங்கியிருக்கிறது!" என்று சேகரன் சம்பிரதாயம் மீறாமல் சொன்னான்.

"என் உடம்புக்கு என்ன, சேகர்! உங்களைப் போல சிறிசுகள் சந்தோஷமாக இருந்தால் அதுவே எனக்குச் சந்தோஷம்......ஆச்சு! வெகு சீக்கிரத்தில் எனக்குப் பேரன் பிறக்கப்போகிறான். எனக்கு இனிமேல்வேறு என்ன ஆனந்தம் வேண்டும்? –இதைச் சொல்லும் போது நடேசய்யர் முகத்தில் நம்பிக்கையும் ஆனந்தமும் ஒருங்கே தாண்டவமாடின.

அன்று மத்தியானம் சாப்பாடெல்லாம் ஆனபிறகு நடேசய்யர், "உங்களோடு கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்' என்று சொல்லி பயங்கரத்தை அழைத்துக் கொண்டு போனார்.

சேகரனுக்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது—இவர்களுக்குள் என்ன ரகசியம் இருக்கப்போகிறதென்று.

"உங்காத்துக்குட்டிக்கும் எங்க மங்கா வயசு தான் இருக்கும் என்று நினைக்கிறேன்'' என்று ஆரம்பித்தார் நடேசய்யர்.

"எங்காத்துக் குழந்தைகள் வயசுகூட எனக்குச் சரியாகத் தெரியாது. எங்க விசாலத்துக்குப் பதினெட்டு வயசு இருக்கும் என்று நினைக்கிறேன்'' என்றார் பயங்கரம். பிறகு ஏதோ நினைத்துக்கொண்டவர்போல, "விசாலத்துக்கு கல்யாணஞ் செய்யவேண்டும். எங்க அம்மா தினம் சொல்லிக் கொண்டிருக்கிறாள்—எத்தனை நாள் இப்படியே வைத்துக்கொண்டிருக்கப் போகிறாய் என்று. எனக்கு ஸார் வரனுக்காக என்று ஊரூராகப் போவது என்றால் பிடிக்காது, நான்கூட வரனுக்காகப் பேப்பரில் விளம்பரம் செய்யலாம் என்று நினைத்தேன். அம்மா சண்டைக்கு வந்துவிட்டாள். குலம், கோத்திரம் எல்லாம் நன்றாய்த் தெரிந்து கொள்ளவேண்டும் என்று அவள் சொல்லுகிறாள்''

"அதைப்பற்றிப்பேசத்தான் நானும் உங்களைக் கூப்பிட்டேன். ரொம்ப அருமையான வரன் ஒன்று உங்களுக்காகத் தேடி வைத்திருக்கிறேன், நீங்கள் யோசனை செய்யவேண்டிய தேயில்லை,''

"மன்னிக்கவேண்டும். நானே ஒரு நல்லவரனைத் தேடிவிட்டேன். ஈசுவர சங்கல்பம் இருந்தால் நிச்சயம் நடந்துவிடும்.''

நடேசய்யர் முகத்தில் ஏமாற்றம் பிரதிபலித்தது.

"ஏதோ உங்களுக்கு உபகாரம் செய்யலாம் என்று நினைத்தேன். முன்னாடியே நீங்கள் நல்ல வரனைப் பிடித்துவிட்டால் எனக்கும் சந்தோஷந்தான்''

"நான் பார்த்திருக்கும் வரன் யார் என்று சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் பயங்கர நரஸிம்மம்.

நடேசய்யருக்கு வியப்பாக இருந்தது. "யார் அந்த வரன்?'' என்று ஆவலுடன் கேட்டார்.

"சேகரன். உங்கள் மருமான். ஒருகால் உங்களுக்கு இஷ்டம் இருக்குமோ, என்னமோ? ஆனால் நான் தீர்மானித்துவிட்டேன். சேகரனுக்கு நான் ஒரு பெரிய அநீதி இழைத்துவிட்டேன். அதற்கெல்லாம் நான் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டும். அதற்காக, எங்கள் குடும்பத்தின் உயர்ந்த பொக்கிஷம் என்று நான் கருதும் விசாலத்தை—''

நடேசய்யர் சிரித்தார், "நான் உங்களுக்கு ஆச்சரியம் உண்டாக்கவேணுமென்று நினைத்தேன். நீங்களோ என்னை ஆச்சரிய சாகரத்தில் அமிழ்த்தி விட்டீர்கள். நானும் சேகரனைப் பற்றித்தான் பிரஸ்தாபித்தேன்!...அவனுடைய பூர்வோத்தரங்களையெல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டாமா?''

"வேண்டியதேயில்லை, அதெல்லாம் சம்பிரதாயத்திற்காகவல்லவா செய்கிறது? சேகரனைப் பார்த்துப் பேசிப் பழகிவிட்டு, அவனுடைய உதாரகுணத்தைப்பற்றி நன்றாய் அறிந்துவிட்டு, அப்புறம் எதற்குப் பூர்வோத்திரங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும்?''

"பேஷ்! இன்றுதான் என் மனம் குளிர்ந்தது. 'சுபஸ்ய சீக்ரம்' என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். அதனால் சேகரனை அதிக நாள் காக்கும்படி வைத்துவிடாதீர்கள்!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் நடேசய்யர்.

சேகரனுக்கும் "கல்யாணம்,'' "வரன்,'' "சேகரன்,'' "விசாலம்'' என்ற வார்த்தைகள் மெதுவாகக் கேட்டன. இந்த நான்கு சம்பந்தமுள்ள வார்த்தைகள் சேகரனுக்கு விஷயத்தைத் தெளிவாக விளக்கிவிட்டன.

"ராமசாமி!'' என்று கூப்பிட்டான் சேகரன், ராமசாமியும் மங்களமும் பேசிக்கொண்டிருக்கும் போது.

"ஏண்டா! ரொம்ப முக்கியமான சமாசாரமோ?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டான் ராமசாமி.

"முக்கியமான சமாசாரமா? நன்றாய்க் கேட்டாய். கோபால்ஸ் டிம்பர் கன்ஸெர்ன்ஸின் வருங்காலம் பூராவும் அதைப் பொருத்திருக்கிறது......அது கிடக்கட்டும். உனக்குத் தெரிந்த நல்ல பிரஸ் எது? சொல்லு பார்ப்போம். இரண்டாயிரம் காபி கல்யாணப் பத்திரிகை முதல்தரமான ஆர்ட் பேப்பரில் போடவேண்டும். சார்ஜ் என்ன ஆனாலும் சரி!'' என்றான் சேகரன்.

"என்னடா இது? சாப்பிடுகிறவரைக்கும் சரியாய் இருந்தாய். இப்போ திடீரென்று கல்யாணப்பத்திரிகை போடவேண்டும் என்கிறாயே?... உனக்கு ஏதாவது விமோசனம் பிறந்திருக்கிறதா?''

நரஸிம்மமும், நடேசய்யரும் குதூகலத்துடன் வந்தார்கள். நடேசய்யர் சேகரனைப் பார்த்த பார்வையில் அர்த்தம் ததும்பியது. நரஸிம்மம் சேகரனைப் பெருமிதத்துடன் பார்த்தார்.

சேகரன் இருவரையும் ஒன்றும் தெரியாதவன் போலப் பார்த்தான். ராமசாமி மூவரையும் ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"சரி நீ போ ராமசாமி! மங்கா உன்னைக் கோபித்துக்கொள்ளப்போகிருள்!" என்று கேலி செய்தான் சேகரன்.

இந்தக் குதூகலங்களுக்கிடையில் சேகரனுக்கு ஒரு தந்தி வந்தது. தந்தி கொடுத்திருந்தவர் கோபாலசாமி. தந்தியின் வாசகம்:—

சென்னையில் கோபால்ஸ் டிம்பர் கன்ஸெர்ன்ஸின் பிராஞ்சு திறக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். நீ அதன் மானேஜராக நாளையே சார்ஜ் ஒப்புக்கொள்ளவும், கடிதம் தொடரும்"

* * * * * * * *

கதலீபுரத்து பங்களா வாசலில் பெரிய பந்தல் போட்டிருந்ததைக்கண்டு அவ்வூரார் மகிழ்ந்தனர். அவ்வூரில் அநேகம் பேரில் குறைந்த பட்சம் இன்னும் நான்கு நாட்களுக்கு தம் வீடுகளில் அடுப்பெரிக்க வேண்டியதில்லை என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டனர். பந்தலின் தரத்தைக்கொண்டு கல்யாணச்சாப்பாடு எப்படியெல்லாம் இருக்கும் என்று போஜனப் பிரியர்கள் திட்டமிட்டனர். மாப்பிள்ளைப்பையன் சேகரன்தான் என்று கேள்விப்பட்டபோது, "இதென்ன அதிசயம்?" என்று அந்த ஊர் ஸ்திரிகள் ஒருவரையொருவர் ஏககாலத்தில் கேட்டுக்கொண்டார்கள். விஷயந் தெரிந்த ஸ்திரிகள் விஷயந் தெரியாதவர்களுக்கு வியாக்யானம் செய்தார்கள்.

விசாலாட்சி பெர்னர்ட்ஷாவைத் தூக்கி எறிந்துவிட்டு ரோமியோ அண்ட் ஜூலியட்டைப் படிக்க ஆரம்பித்தாள்!

பிரபல நாதஸ்வர வித்வான்களின் வாத்தியங்கள் முழங்க, விதவிதமான குரல்கள் படைத்த, விதவிதமான புடவைகள் தரித்த ஸ்திரீகள் மங்கள கீதங்கள் பாட சேகரனும், விசாலாட்சியும் தம்பதிகளானர்கள்.

ராமசாமி விவாகப் பரிசாகச் சேகரனுக்கு ஒரு தங்கப் பாலாடையை அளிக்கவே, விவாகப் பந்தலில் ஒரே குதூகல ஆரவாரமாயிருந்தது.

கோபால்ஸ் டிம்பர் கன்ஸெர்ன்ஸின் ப்ரொப்ரைட்டர் கோபாலசாமி ஒரு அழகான தேக்கு மரப் பீரோவைப் பரிசாக அளித்தார்.

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த அந்த வைர அட்டிகையை விசாலாட்சி அணிந்து கொண்டிருந்தாள். ராமசாமி அர்த்தபுஷ்டியுடன் அதையும் சேகரனையும் மாறி மாறிப் பார்த்துவிட்டுச் சிரித்தான். பாலுசாமி மெதுவாக ராம

சாமியிடம் வந்து, "ஸார்! உங்களுக்குச் சீட்டாடத் தெரியுமா?" என்றான்.

"சீட்டாட்டத்தைக் கண்டுபிடித்தவனே நான் தான் அப்பா!" என்றான் ராமசாமி.

"அப்போ மத்யானமா ஒரு ஆட்டம் போடுவோம்" என்று குதூகலத்துடன் கேட்டுக்கொண்டான் பாலுசாமி.

ராமசாமி வழக்கத்தைவிட இன்று குதூகலமாயிருந்தான். தன் குதூகலத்தின் காரணத்தை இன்னும் அவன் சேகரனிடம் கூடச் சொல்லவில்லை. மங்களத்திற்குப் பெண் குழந்தை பிறந்திருப்பதாக அவனுக்குச் சற்று நேரத்திற்குமுன் நடேசய்யரிடமிருந்து தந்தி வந்திருந்தது.

வைத்தாவுக்குக் கல்யாணம் அலுவல்களைத் தவிர சில பிரத்யேக வேலைகளும் இருந்தன. உள்ளூர் ஆரம்ப பாடசாலைக்காக நிதி திரட்ட ஒரு நாடகம் நடத்துவதாக அவன் ஒப்புக்கொண்டிருந்தான். இதற்காகப் பயங்கரத்தின் கதையொன்றை வெகு சிரமப்பட்டு நாடகமாக நடித்துக்காட்ட ஏற்பாடுகள் செய்திருந்தான். சேகரன் தனியாக இருந்தபோது, "மாப்பிள்ளை! நீங்கள் தம்பதி சகிதமாக என் நாடகத்துக்கு வந்து என்னைக் கௌரவிக்க வேண்டும், நான்தான் ராஜபார்ட் போட்டுக்கறேன். முப்பத்தைந்து பாடல்கள்! கண்ணைக் கவரும் ஐம்பது ஸீன்கள். கதாநாயகன் (நான்) மூர்ச்சையாகும்போது கதாநாயகி (நம்ப அடுத்த தெரு ராமுடு) ஒரு ராகமாலிகை பாடுகிறாள். கையோடு கைக்குட்டை கொண்டு வாருங்கள், இல்லாவிட்டால் ரொம்ப சிரமம்!" என்றான் வைத்தா.

"உங்கள் எஜமானியம்மாளைக் கேட்டுக்கொள், வைத்தா! அவ்விடத்திலே உத்திரவு ஆகிவிட்டால் நான் நிச்சயம் வருகிறேன்" என்றான் சேகரன்.

பயங்கர நரஸிம்மம் வெகு குதூகலத்துடன் காணப்பட்டார். சேகரனும் விசாலமும் பேசிக்கொண்டிருந்தபோது தற்செயலாய் அந்தப் பக்கம் வந்தவர் பாராதவர்போலப் புன்முறுவலுடன் வேறு பக்கமாய்ச் சென்றார். அவருடைய சிந்தனைகள் வெகு வெகு வருஷங்களுக்கு முன்னால் நடந்த அவருடைய விவாகத்தை நோக்கிப் பறந்தன. சட்டென்று அவருக்கு சீமாச்சுவின் நினைவு வந்தது. வெகு நேரமாய் அவனைக் காணவேயில்லையே! எங்கே போயிருப்பான்?

தூரத்தில் ஒரு கறுப்பு நாய் படுத்துக்கொண்டிருந்தது. சீமாச்சு கையில் கல்லுடன் ஒரு மரத்தின் பின்னால் பதுங்கிக்கொண்டிருந்தான். சரியாகக் குறி பார்த்துக் கல்லை மிகுந்த பலத்துடன் பிரயோகம் செய்தான். அடுத்த நிமிஷம் 'வள்-ள்-ள்-ள்' என்று அந்த திசையிலிருந்து சப்தம் வரவே, சீமாச்சு திருப்தியுடன் வீட்டை நோக்கி நடந்தான்.

சுபம்!

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: "சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.



அவள் ஆசை

விந்தியா

எழுதி முடித்திருந்த கடிதத்தைக் கவரில் போட்டு ஒட்ட வேண்டியதுதான் எஞ்சிநின்ற வேலை.

“அப்பா! கவர் வேணும்!” என்று கேட்டாள் லலிதா.

“வைத்திரு கடிதத்தை! இங்கே கவரில் நானும் மாப்பிள்ளைக்கு ஒரு கடிதம் வைத்து தருகிறேன்! பத்தே நிமிஷம்!” என்றார் அவள் தந்தை. லலிதா ‘ஊம்’ கொட்டிவிட்டு, அவர் பேச்சிற்குச் சம்மதங் கூறிவிட்டு, தான் எழுதியிருந்த கடிதத்தைப் பத்திரமாக வைத்துவிட்டு, கட்டிலில் வந்து படுத்தாள்.

எழுதி முடித்திருந்த கடிதத்தைப் பற்றியே யோசனை. இன்னும் தபாலுக்குப் புறப்படவில்லை கடிதம். கவரில் கூடப் பொருத்தவில்லை இன்னும் அதை. யோசனைக்கு உரிமையும் இடமும் உண்டல்லவா? அச்சில் ஏறாத, பத்திரிகைக் காரியாலயத்துக்கே புறப்படாத, எழுத்துப் பிரதிக்கு மாறுதல்களை ஏற்க எத்தனை உரிமையும் அவகாசமும் உண்டோ, அத்தனை உரிமை கூடவா இருக்காது அவள் கடிதத்திற்கு?

உண்டு, நிறைய உண்டு. அவளுடைய யோசனைகளுக்குப் பலனும் கிடைக்கக்கூடும்!

என்ன எழுதியிருக்கிறாள் கணவருக்கு?

என்ன எழுதவேணுமோ, என்னத்தை அவனிடம் சொல்ல வேண்டும்போல தோன்றியதோ, அதை எழுதியிருக்கிறாள்!—மாறுதல் இருக்கணும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் கடிதம் எழுத ஆரம்பிப்பதற்கு முன் அவள் நினைத்த ஒரு விஷயத்தை—அவள் எழுதவில்லை, வேண்டாமென்றுதான் அதைத் தவிர்த்துவிட்டாள் அந்த செயலை.

புது வருஷம் வருகிறது! அவருக்கு ஒரு “புத்தாண்டுச் செய்தி” அனுப்பணும் என்று விரும்பினாள் அவள். ஆனால் உடனே ஏனோ அந்த எண்ணம் சப்புத்தட்டியது.

“போதும், எனக்கென்ன இந்தப் பவிஷும் பெருமையும்!” என்று தோன்றிவிட்டது! அந்த எண்ணத்தை அகல விட்டாள். சப்புக்கட்டினாலும், அதன் பயனாகவே எழுந்தன சில தீவிரமான உணர்ச்சிகள்! தன் அலுப்பு சலிப்புகளை அவர் அறியட்டுமே! கடிதம் உருவாயிற்று. எழுதிவைத்திருக்கிறாள்.

“இந்த நெடுங்கடிதம் எழுதும் உத்தேசம் எனக்கு இன்று இருக்கவில்லை! ஒரு “புத்தாண்டுச் செய்தி” அனுப்ப நினைத்தேன். ஆனால் ஓரோரு “புத்தாண்டுச் செய்தியும் கண்ட பலன்தான், ஓரோரு புதுவருஷமும் கண்ட பலன்தான் இதுவும் காணலாம் என்ற சலிப்பில் அந்த எண்ணம் விட்டுவிட்டேன். இரண்டு நாளுக்கு முன்புதான் உங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன், அதனால் இந்தக் கடிதம் நீங்கள் எதிர்பாராததாயிருக்கும். என் கடிதங்கள் மகிழ்ச்சியே உங்களுக்கு அளிக்கும் என்ற நம்பிக்கையில், இந்தக் கடிதம் புத்தாண்டின் துவக்கத்தில் உங்களுக்கு எதிர்பாராத மகிழ்ச்சியளிக்கட்டும் என்று எழுதினேன்.”

இப்படித்தான் ஒளிவு மறைவு இன்றி கணவனுக்குத் தன் உள்ளக்கிடக்கையை வெளியிடவும் வெளியிட்டிருந்தாள் லலிதா. நேர்மையான பேச்சு. ஒரு மறைவும் இல்லை. இப்படித்தான் இருக்கவேண்டும் தம்பதிகளிடையே கடிதம்—

ஆனால்—இந்தக் கடைசிப் பகுதியின் மேல்தான் லலிதாவின் கவனம் பிணைந்துவிட்டது.

“இப்படி எழுதலாமா?”

“எதிர்பாராத மகிழ்ச்சி முதலில் உண்டாகலாம். ஆனால் கடிதத்தைப் படித்து முடித்ததும் மனம் கனக்கும். “ஓரோரு வருஷமும் கண்ட பலன்தான் காணலாம்” என்ற வாக்கியம்

உறுத்தும் மனதில். நோகும் அவர் நெஞ்சு" என்று தோன்றியது.

"இப்படி எழுதவேண்டாம்" என்று எண்ணினாள். ஆனால் கசப்பு உணர்ச்சி, வாழ்க்கையின் வறட்சியினால் ஏற்பட்ட போது உணர்வு "உண்மையைச் சொன்னால் என்ன?" என்றது!

அப்பா எழுதியிருப்பார் தாம் எழுதவேண்டிய கடிதத்தை—வந்துவிடும் அது கவருடன், இப்போது தன் கடிதத்தில் எதற்கு மாற்றம் செய்வது? ஏன் செய்யவேண்டும்!

கடிதத்தை மாற்றி எழுதும் நினைப்பை உதறிவிடவிடுபவள் போல சலனமற்று யோசனையுடனே படுத்திருந்தவள், ஒரு திரும்புத் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

புது வருஷம் வரப்போகிறது! இந்த வருஷமாவது தன் வாழ்க்கையில் ஜீவனைக் கொணருமா? "கொணரட்டும்" என்று வெளிப்படையாகச் சொல்லவில்லை, புத்தாண்டுச் செய்தி கூறவில்லை. ஆனால் மானஸீகமாகக் குமிழிட்டுக்கொண்டிருந்த இந்த விருப்பு, அவளுக்கும் அவள் கணவனுக்கும் எப்போதும் வாழ்த்துக்கூறிக் கொண்டு தானே இருக்கிறது!

இந்தப் புதுவருஷத்திலாவது வருமா சுகம், அமைதி, மனச் சாந்தி ?

"புது வருஷம்!... ஆம், இந்தப் புது வருஷம்தான் புது வாழ்வு கொணர வேணும் !

"புது வருஷம் கட்டாயம் புதுமையும், புதுவாழ்வும் எனக்குக் கொண்டு வரத்தான் போகிறது! என் கடிதத்திற்கு வரும் பதிற் கடிதத்திலேயே நற்செய்திவரலாம்! இதோ, இந்தப் பாழும் பழைய வருஷத்தின் கடைசியில் நான் எழுதியுள்ள இந்தக்கடிதமே என் மனக் குமுறலைத் தாங்கும் இறுதிக் கடிதம் !" என்று தோன்றியது அவளுக்கு. மனசுக்கு ஒத்தடம் கொடுக்கப்பட்டது போல இருந்தது. ஆறுவலாக இருந்தது. கண்கள் லேசாக மூடின.

அவசியமான எரு கிடைத்ததும் செழிப்பு கொள்ளும் செடி



போல, அவளுக்கு அப்போது அவசியமாயிருந்த சிறு ஆறுதல் கிடைத்ததும், அவள் யோசனையும் கற்பனையாகச் செழிப்பு வாய்க்கப் பெற்றது.

அவள் எதிர்பார்த்தபடியே கடிதம் போய்ச் சேருகிறது—சேர்ந்தது வாசுவிடம்—ஜனவரி ஒன்றாம் தேதி காலையில். கடிதம் எழுதுகையில் அவளுக்குண்டான உணர்வு போன்றதே — இன்பமும் துன்பமும் இழைத்த உணர்ச்சியே அவனுக்கும் உண்டாயிற்று—இந்த உணர்ச்சியை விவரிக்க முடியுமா?—முடியாது. கணக்குப் பாடத்தில், "இப்படிப் போட்டால் விடை!" என்று சொல்லிவிடுவதுபோல, 'எகனமிக்ஸ்' பாடத்தில் சொல்லிவிட முடியுமா? சொல்லித்தர முடியுமா? கால மாறுதல்களையும், மனநிலைகளையும், ஒட்டி ஒட்டிச் சொல்லவேண்டும்.

உடல் உறுப்புக்களைப்பிரித்து அறுத்து விவரிக்கலாம், உள்ளத்தை விவரித்துவிட முடியாது. இந்த மாதிரிதான் அவள் உணர்ந்தாள், அவனும் உணர்ந்தான். வாசு தன் மனசை எழுதுவானானால் இப்படியேதான் எழுதுவான். அவன் 'எகனமிக்ஸ்' படித்தவன், மாமனார், 'கணக்கு'ப் பேர்வழி.

கடிதத்தைப் படித்தான் வாசு—அதைக் கையில் வைத்தபடியே முறுவலித்தான். அந்த முறுவலிடையே முறுக்கப்பட்டுக் கிடந்தது வருத்தத்தின் சாயை. திருப்பி திருப்பிப் படித்தான் கடிதத்தை. அதைப் படித்து முடித்துப் பெட்டியில் போட்டு விட்டு, மேஜையருகே வந்தான். காகிதத்தாள், பேனா சகிதம் உட்கார்ந்தான் அதனருகே. கடிதம் அவளுக்குத்தான்.

"புதுவருஷத்தில் உனக்கு நான் எழுதும் கடிதமும் இனிமையானதாக, வருத்தமற்றதாக இருக்க வேண்டுமல்லவா? அதனால் உன் கடிதம் எனக்களித்த மகிழ்ச்சியையே நான் எடுத்துக் கூற விரும்புகிறேன் முதலில்.....!

"புத்தாண்டுச் செய்தியும்!" "வாழ்த்தும்" நம்மிடையே அவசியமா? நம் மனங்கள், அந்தரங்க உணர்ச்சிகள் நாடும் விஷயத்தை, நாடும் இன்ப வாழ்க்கையை—நாமிருவரும் வெளிப்படக் கூறிக்கொள்ள வேண்டாமல்லவா? நாமும் அறிவோம். கடவுளும் அறிவார் அன்றோ!

இதோ.....கடிதத்தில் நான் சொல்லவேண்டிய, வருத்தம் தரக்கூடிய விஷயமும் இருக்கிறது — அதையும் ஒளிக்காமல் உன்னிடம் சொல்லி விடுகிறேன். புதுவருஷத்தில், நான் உன்னிடமிருந்து என் அந்தரங்கத்தை மறைக்கவும் கூடாது அல்லவா?

நான் ஒரு நிலைப்படாததால்தான் உனக்கு வருத்தம், துன்பம், அலுப்பு, சலிப்பு. ஓரோரு வேலை அப்ளிகேஷன் போடவும் நான் மீனமேஷம் பார்க்கவேண்டிய நிலைமையில் இருப்பதால், ஓரோர் இண்டர்வ்யூக்கும் சகுனம் பார்த்து அனுப்பப்படும் நிலைமையில் நான் இருப்பதால் உனக்கும், "ஓரோர் புதுவருஷமும் கண்ட பலன் என்ன?" என்ற அலுப்பு. பாவம், நீயும் ஓரோரு புதுவருஷமும் புது வாழ்வு எதிர்நோக்கி நிற்கிறாய். நைப்பாசையால், தமிழ்ப் புது வருஷம் வந்தால், அதைப் பேராவலோடு வரவேற்கிறாய்! "நல்லாண்டாக விளங்கட்டும்!" என்று சொல்கிறாய்! தமிழ் வருஷம் முடிவதற்குள் ஆங்கிலப் புதுவருஷம் பிறக்கிறது "அதன் வரவு நல்வரவாகுக" என விரும்புகிறாய்! ஆங்கில வருஷம் முடிவதற்குள்— தமிழ்ப் புத்தாண்டு இந்த ஒன்றரை

வருஷங்களுள் நீ மூன்று "புத்தாண்டுச் செய்திகள்" அனுப்பியிருக்கிறாய் பாவம்!...உன்னைப் பற்றி நினைத்தால் பரிதாபமாயிருக்கிறது எனக்கு! இப்போது நீ புத்தாண்டுச் செய்தி அனுப்புவாய் என்றே எதிர்பார்த்தேன். அடுத்தாற்போல வரவிருககும் விரோதி நாம ஸம்வத்ஸரத்திற்குள்ளாகவாவது "புத்தாண்டுச் செய்தி" வரவைத் தவிர்க்க வேண்டும், எனக்கு வேலை கிடைத்துவிடவேண்டும் என்று எண்ணினேன். ஆனால் நீ இந்த ஆங்கில வருடத்திற்கே 'புத்தாண்டுச்செய்தி'யை நிறுத்திவிட்டாய்! இது எனக்கு ஒரு நம்பிக்கையளிக்கிறது! "இனி உண்மையிலேயே நமக்கு இன்ப வாழ்வு உண்டு என்றுதான் சூசிக்கிறதோ இந்த 'நிறுத்தம்'?" என்று தோன்றுகிறது.

உனக்கும் தென்பு வரட்டும். இப்பொழுதே எனக்கு ஒரு எண்ணம் தலை தூக்குகிறது. "வேலை கிடைத்து நிலைக்கு முன் கல்யாணம் செய்துகொண்டது தவறோ?" என்று! இந்த என் எண்ணம் உன் தென்பினால், உன் சந்தோஷத்தினால், அகலட்டும்! புது வருஷம் இனிதாய் விளங்கட்டும் நமக்கு!"

விறுவிறுவென்று எழுதி முடித்த கடிதத்தை, கவரில் இட்டு, ஒட்டிப் போட்டான் வாசு. லலிதாவின் விலாசமிட்டான்.

"அம்மா. லலிதா? கவர்மேல் நீயே விலாசம் எழுது!...ஒட்டு நன்றாய்! இந்தா!"

யோசனைக்குவியலில் மூழ்கி எழுந்த லலிதா, விலாசதாரரிடம் சேரும் "ரிஜிஸ்தர்" கடிதம்போல விறைப்பாக தென்பட்டாள்.

"தாங்கோ—" என்றாள். பெற்றுக் கொண்டாள் கவரை அப்பாவிடமிருந்து.

உள்ளே போய் மேஜையிடம் அமர்ந்த லலிதா லேசில் எழுந்து வராதது கண்டு, அறையுள் எட்டிப் பார்த்தார் தந்தை. என்னமோ எழுதிக்கொண்டிருந்தாள் லலிதா.

"என்னம்மா—நீ இப்பவா எழுதறே! எழுதியாகல்லே?"

"முதல்லே எழுதினேன்—ஆனால் அதுவே ஒரு விஷயம் மறந்துட்டேன்—இப்போ எழுதறேன்—"

"சரி" என்று போய் விட்டார் தந்தை.

அவர் தன்பேச்சில் "உண்மை தொனிக்கவில்லை" என்று அறிந்தேயிருப்பார் என்று தோன்றியது லலிதாவுக்கு.

எனினும் எழுதினாள்.

அவள் எழுதியது வெகு சொற்பம். ஆனால் புதுக்கடிதம். எதிரே கிடந்தன கலர் பென்ஸில்கள். அவைகள் லலிதாவின் கையில் ஏறி வரைந்த மூவர்ண தேசியக் கொடி, காகிதத்தின் மேற்பகுதியில். கொடியின் நிழலில், பொற்கோலின் அண்மையில் சில வார்த்தைகள். இதுவே கடிதம்.

"இந்தப் புது வருஷமேனும் நமக்கு இன்பம் கொணரட்டும்!" என்ற வாக்கியம்தான்—வார்த்தைகளின் சேர்க்கை!

"ஆங்கிலப் புது வருஷம் கொண்டாட வேண்டாம் என்றுதான் எண்ணம்! ஆனால் என் மனம் வருஷத்தில் இரண்டு புது வருஷங்களின் வரவை விரும்புவதில் உங்கள் மனம் வேடிக்கை நுகராதா? அதற்காகத்தான் ஆங்கிலப் புத்தாண்டை, தேசியக் கொடியால் பெருமைப்படுத்துகிறேன், என் மனசுக்கும் அமைதி நாடுகிறேன்!" என்று கணவருக்கு மறுநாள் 'சாதா'க் கடிதம் விடுக்க எண்ணம் லலிதாவுக்கு. "எதிர்பாராத மகிழ்ச்சியாக"ப் போய்ப் பிறகு சோகச் சாயை கொடுக்கும் முதலில் எழுதிய கடிதத்தை அனுப்ப மனமில்லை! புது வருஷத்தில் தன் 'பழைய வழக்கம்' அளிக்கக்கூடிய குறுகுறுப்பே இருக்கட்டும்-தான் கற்பனையில் அவன் கடிதத்தில் வந்ததாகக் கண்ட வேடிக்கை வியாக்கியானம், உண்மையாக வரட்டும்-என்றும் ஆசை!

புது வருஷத்தில் பிரும்மாண்டமானதொரு ஆசையை எதிர்பார்த்த அவளுக்கு இந்த நைப்பாசையும் தோன்றியது!

"உலகிலே இன்பம் கிடையாது!" என்பது ஒரு வேதாந்தம். "உலகின் ஒவ்வொரு அம்சத்திலும்,பொருளிலும் உண்டு இன்பம்!" என்பது ஒரு சித்தாந்தம்!

இரண்டும் அவளிடம் குடிகொண்டிருந்தன; குட்டிக் கடிதத்தைத் தபாற் கவரில் இட்டபோது!



சீராயம் நீங்கிற்று

—தில்லைவாசி—

ஒரு கடற்கரைப் பட்டினம். அந்த ஊரில் ஒரு பிச்சைக்காரன் இருந்தான். அவன் அங்கே வெகு காலமாகயிருந்து வந்தான்.

அவன் தெருத் தெருவாய், வீடு வீடாய்ப் போய் பிச்சைக் கேட்பது வழக்கம். பிச்சையாகக் காசுதான் கேட்பான். ஏதாவது தின்பண்டமோ, சாதமோ கொடுத்தால் வாங்கிக்கொள்ள மறுத்துவிடுவான்.

அவன் தன் கையில் எப்பொழுதும் ஒரு பெரிய துணிப்பை வைத்திருந்தான். அது மிகவும் பழமையானது. ஆனுல் கிழியாதது. தனக்குக்கிடைக்கும் காசுகளை அதில் போட்டு வைத்துக்கொள்வான்.

ஒரு நாள் வீடு வீடாகப் போய் பிச்சைக்கேட்டான். அன்று யாரும் அவனுக்கு ஒரு காசுகூடக் கொடுக்கவில்லை. வெறும் பையுடன் தெருவைச் சுற்றிவந்துகொண்டிருந்தான். தனக்கு யாரும் காசு கொடுக்கவில்லையே என்று அவனுக்கு ஆத்திரம் தான் உண்டாயிற்று. மேலும் வீடுதோறும் சென்று பிச்சை கேட்டான்.

ஒரு வீட்டிற்கு வந்தான். பிச்சை கேட்டான். காசு கிடைக்கவில்லை. அந்த வீட்டுக்காரர்மேல் அவனுக்குக் கோபம் வந்தது. அவர் ஒரு கப்பல் வியாபாரி. பெரிய பணக்காரராகயிருந்து, கப்பல் வியாபாரம்செய்து நஷ்டமடைந்தவர், அதனுலேயே ஏழையானவர்.

"அடேயப்பா! இவருக்குத்தான் எத்தனை ஆசை! சம்பாதிக்கிற செல்வம் போதும் என்று சும்மா இருந்தாரா? மேலும் மேலும் ஆசைப்பட்டார். கப்பல்கள் கட்டினர். கடல் மூலம் வியாபாரம் செய்யத்தொடங்கினர். கப்பல்கள் நடுக்கடலில் புயலில் சிக்கிக்கொண்டன. கவிழ்ந்து போயின. கப்பல்களில் இருந்த பொருள்கள் எல்லாம் கடலுக்கு இரையாயின. நஷ்டமடைந்தார். ஏழையானுர். அவருடைய அதிக ஆசை அதிக நஷ்டமாயிற்று" என்று அந்தக் கப்பல் வியாபாரியைப் பற்றி தனக்குத் தெரிந்த வரலாறை நினைத்துக்கொண்டான்.



இப்படியே ஒவ்வொரு பணக்காரர்வீடுவரும்பொழுது எல்லாம் "இவருக்கு இருக்கிற சொத்து போதாதா? ஏன் இன்னும் கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறுர்? ஏழையாய்ப்போன கப்பல் வியாபாரியைப்பார்த்துகூட இவருக்கு இன்னும் புத்தி வரவில்லையே" என்று நினைத்துக்கொண்டே போவான். அவன் அந்த ஊரிலேயேயிருந்துவந்ததால், ஒவ்வொருவரைப்பற்றியும் அவனுக்குத் தெரியும்.

எனக்குமட்டும் உண்பதற்கு உணவும், உடுப்பதற்கு உடையும் இருந்தால், நான் திருப்தியடைவேன். அதிக ஆசைப்பட்டு அவதிப்படமாட்டேன்" என்று எண்ணிக்கொண்டே ஊரின் கடைசித்தெருவுக்குப்

போய்விட்டான். அங்கும் அவனுக்குக்காசு கிடைக்கவில்லை. ஏதாவது தின்பண்டந்தான் கொடுக்க வந்தார்கள்.

அந்த ஊரைச் சேர்ந்தாற் போல் ஒரு காடு இருந்தது. அப்படியே ஊரைத்தாண்டி அந்தப்பிச்சைக்காரன் காட்டினுள் புகுந்துவிட்டான். காட்டு வழியே நடந்து கொண்டிருந்தான்.

அந்தக் காட்டின் நடுவில் ஒரு காளிகோயில் இருந்தது. அங்கு போய் உட்கார்ந்து, அன்றையப் பகல் பொழுதைக் கழித்துவிடலாம் என்று காளி கோயிலுக்குள் போனான். அவனுக்கு முன்பே கோயிலில் ஒருகிழவி உட்கார்ந்திருந்தாள். பிச்சைக்காரனைக் கண்டதுமே கிழவியின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

உடனே கிழவி பிச்சைக்காரனைப்பார்த்து. "என்னிடம் நிறையப் பொற்காசுகள் இருக்கின்றன. உனக்கு வேண்டுமானால் கொடுத்துவிடுகிறேன். பொற் காசுகளை ஜாக்கிரதையாகப் பெற்று வைத்துக் கொள்ளவேண்டும். ஏதாவது ஒரு காசு தவறிப்போய்க் கீழே விழுந்துவிட்டாலும், அத்தனை காசுகளும் மண்ணாக மாறிப்போய் விடும். இதோ பெற்றுக்கொள்" என்றுகூறி, பொற்காசுகளை அவனுக்குக் கொடுக்க வந்தாள்.

பிச்சைக்காரனுக்கு கிழவி வைத்திருக்கும் எல்லாக் காசுகளையும் தானே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. "இன்று நல்ல முகத்தில் விழித்து வந்திருக்கிறேன். என்னை அதிருஷ்டம் தேடி வந்திருக்கிறது. இனி நானும் பணக்காரனாகி

விடுவேன்" என்று சந்தோஷப் பட்டுக்கொண்டே, தன்னுடைய துணிப் பையைப் பிரித்து, அதில் பொற்காசுகளைப் போடச்சொன்னான்.

கிழவி அவன் பையில் காசுகளைப் போட்டுக்கொண்டே இருந்தாள். பாதிப்பை வரையில் நிரம்பிப் போய்விட்டது. உடனே கிழவி பிச்சைக்காரனைப் பார்த்து "போதுமா?" என்று கேட்டாள். பிச்சைக்காரன் "இன்னும் கொஞ்சம் போடுங்கள்" என்றான். கிழவி "பை பிய்ந்து கிழிந்து போய்

விட்டால், கஷ்டமாயிற்றே. காசுகள் கீழே விழுந்து மண்ணாகிவிடுமே" என்று சொல்லி மேலும் சில பொற்காசுகளை அவன் பையில் போட்டாள். அப்பொழுதுகூடப் பிச்சைக்காரன் ஆசை அடங்கவில்லை.

கிழவி மேலும் மேலும் பையில் காசுகளைப் போட்டுக்கொண்டேயிருந்தாள். பையில் முக்கால்பாகம் வரைக்கும் நிரம்பிப் போயிருந்தது. பிச்சைக்காரனுக்கோ ஆசை அடங்குவதாயில்லை. "என்னுடையப் பையில் எவ்வளவு காசு வேண்டுமானாலும் போட்டு வைத்துக் கொள்ளலாம்" என்று கூறிக் கொண்டே, பையைக் குலுக்கி குலுக்கி இடம் ஏற்படுத்திக் கொண்டேயிருந்தான்.

கிழவி தன்னிடமிருந்த எல்லாக் காசுகளையும் ஒன்றுகூடப் பாக்கியில்லாமல் பிச்சைக்காரன் பையில் போட்டுவிட்டாள்.

உடனே பையின் அடிப்பாகம் பொற்காசுகளின் கனம் தாங்காமல் கிழிந்துபோயிற்று. அது பழைய பையானதால் கொஞ்சம் கொஞ்சமாக காசுகளின் கனம் தாங்காமல் பிய்ந்து வந்திருக்கிறதை பிச்சைக்காரன் உணரவில்லை. காசுகளும் பையிலிருந்து தரையில் விழுந்து மண்ணாக மாறி விட்டன.

காசுகள் மண்ணாக மாறியதும், கிழவி அங்கே காணப்படவில்லை. அவளுக்குப் பதில் ஒரு அரசகுமாரி அங்கு நின்று கொண்டிருந்தாள். அந்தப் பிச்சைக்காரனும் ஒரு அரச குமாரனாக மாறிவிட்டான்.

ராஜகுமாரி சொன்னாள்: "நான் மகத தேசத்து இளவரசி. ஒருநாள் தோழியர்களுடன் காட்டிற்குப் போனேன். அங்கே ஒரு மரத்தில் ஒரே ஒரு பூ பூத்திருந்தது. அது மிகவும் அழகாயிருந்தது. அதன் வாசனை என்னைக் கவர்ந்தது. அதைப் பறித்து தலையில் சூட்டிக்கொண்டேன். அந்த மரத்தின் அருகில் ஒரு ஆசிரமம் இருந்தது. அதில் ஒரு முனிவர் இருந்தார். அவர் பூஜைக்காகப் பூக்கும் பூவை நான் பறித்துவிட்டதால் அவருக்குக் கோபம் வந்துவிட்டது. என்னைக் கிழவியாகச் சபித்துவிட்டார். என் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டேன். முனிவர் எனக்கு நிறையப் பொற்காசுகள் கொடுத்தார். இந்தக் காசுகள் எப்பொழுது பிறர் மூலம் தரையில் விழுந்து மண்ணாக மாறுகிறதோ, அப்பொழுது நீ முன்போலவே ராஜகுமாரியாகிவிடுவாய். காசுகளை எச்சரிக்கை செய்துதான் எல்லாவற்றையும் ஒருவருக்கே கொடுக்கவேண்டும். தகுந்த ஆளைத் தேடிக்கொடுப்பதிலும் நீ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று சொன்னார். இத்தனை வருஷங்களாக அலைந்துகொண்டிருந்தேன். உன்னைக் கண்டதுமே நான் தேடிக்கொண்டிருக்கும் ஆள் நீதான் என்று எனக்குப்பட்டது. காசுகளும்

உன் பையிலிருந்தே கீழே விழுந்து மண்ணாகி விட்டன, என் சாபமும் நீங்கிற்று" என்று அரசகுமாரி சொல்லி முடித்தாள்.

ராஜகுமாரி தன் கதையைச் சொல்லி முடித்ததும், ராஜகுமாரன் தன் விருத்தாந்தத்தைச் சொல்லத் தொடங்கினான்.

"நான் அங்கதேசத்து அரசகுமாரன். ஒருநாள் காட்டுக்கு வேட்டையாடப்] போனேன். வேட்டையில் ஒரு முனிவர் ஆசிரமத்து மானைத் தெரியாமல் அடித்துக் கொன்றுவிட்டேன். முனிவர் என்னைப் பிச்சைக்காரனாக மாறும்படி சபித்துவிட்டார்.

'ஆசையுள்ள பிச்சைக்காரனாக அலைந்துகொண்டிருப்பாய். உன் ஆசை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டேயிருக்கும். எப்பொழுது உன் அதிக ஆசை பயனற்றுப் போகிறதோ, அப்பொழுது நீ மீண்டும் ராஜகுமாரனாக ஆகிவிடுவாய்' என்று எனக்கு மன்னிப்பளித்தார். இதுகாறும் அலைந்துகொண்டிருந்தேன். இப்பொழுதுதான் என் சாபம் நீங்கிற்று" என்று ராஜகுமாரன் கூறி முடித்தான்.

ராஜகுமாரன் ராஜகுமாரியைத் தன் தேசத்துக்கு அழைத்துச் சென்றான். இருவருக்கும் மிகச் சிறப்பாக விவாகம் நடந்தது. பிறகு ராஜகுமாரன் மகததேசத்திற்கும், அங்கதேசத்திற்கும் அரசனானான். அவர்கள் இருவரும் வெகுகாலம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து அரசாண்டு வந்தார்கள்.



36

நந்தமாமுனி ஆனது

★

'தொண்டர் தீயில் மூழ்கவும் வேண்டுமா? நடராஜா இப்படிக் கட்டளையிட்டிருக்கிறாரே, இப்படியும் ஒரு கொடிய சோதனையா? இறைவன் திருவுள்ளத்தின் குறிப்பு அறியோம். தொண்டர் திருவுள்ளத்தையாவது அறிந்துகொள்வோம்' என்று எண்ணமிட்டவாறு நந்தனாரிடம் வந்து சேர்ந்திருக்க வேண்டும் தில்லைவாழ் அந்தணர்கள். 'தீயில் மூழ்க வேண்டியதில்லை' என்று ஆண்டவன் கனவில் கட்டளையிட்டிருந்தாலும், தொண்டர் நனவில் குறிப்பாக அப்படி உணர்த்தியிருந்தாலும்,

தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்

என்று சுந்தரமூர்த்திசுவாமிகளால் போற்றப்பெறும் பக்தர்கள் வளர்த்த தீயையும் அணைத்திருக்கக்கூடிய அருளாளர்களாகவே நடந்திருப்பர் என்பதில் சந்தேகமில்லை.

தில்லை அந்தணர்களின் தரும சங்கடம்

நந்தனாரை அடைந்ததும் அந்தணர்கள் 'புலையரென்று' கருதவே இல்லை. 'ஐயரே!' என்று நந்தனாரை அழைக்கிறார்கள் தில்லைவாழ் ஐயர்கள். அழைத்துத் தீ அமைத்த செய்தியை உடனே தெரிவிக்கவும் கூசிக் கூசிப் பேசுகிறார்கள்

'ஐயரே! அம்பலவர்
அருளால்இப் பொழு(து)
அணைந்தோம்,
வெய்யஅழல் அமைத்(து)
உமக்குத்
தரவேண்டி!' எனவிளம்ப,
நையும்மனத் திருத்தொண்டர்
'நான் உய்ந்தேன்' எனத்
தொழுதார்;
தெய்வமறை முனிவர்களும்
தீஅமைத்த படிமொழிந்தார்.

[அம்பலவர்- சபாபதியாகிய நடராஜா. அணைந்தோம்- (உம்மை) அணுகி வந்தோம். வெய்ய அழல்- கொடிய தீ. நையும் மனத் திருத்தொண்டர்- ஏற்கெனவே தமது நிலை குறித்து மனத்திற்குள் நைந்துகொண்டிருந்த பக்த மணியாகிய நந்தனார்.]

இந்தப் பாட்டை விசேஷ கவனத்துடன் படித்துப் பார்க்க வேண்டும். 'அம்பலவர் அருளால் இப்பொழுது அணைந்தோம்' என்று கூறுவதும், தீயைக் கொடிய தீ என்று குறிப்பிடுவதும், தில்லை அந்தணர்களின் மன நிலையைக் காட்டுகின்றன. 'நையும் மனம்' துறந்து ஆனந்தமாக நந்தனார் 'இறைவன் அருளிய வண்ணமே நான் உய்ந்தேன்!' என்று உறுதி கூறிய பின்புதான் வந்தவர்கள் தீ அமைத்த விதம் தெரிவிக்கிறார்கள். இந்த நிலையில் சேக்கிழார் பெருமான் 'தெய்வ மறை முனிவர்களும்' என்று உள்ளுக்குள்ளே தெய்வ அருள் நிறைந்த அவர்களைச் சுட்டிக் காட்டுவதும் நம் கவனத்திற்கு உரியது.

தீயில் புடமிட்ட பொன்மேனி

தென் மதிற் புறத்திலே கோபுர வாசலுக்கு முன்னே அமைத்திருந்த தீக்குழியை அடைந்தார் நந்தனார். நடராஜப் பெருமானின் திருவடியைத் தியானித்துக்கொண்டே தீக்குழியை வலம் வந்தார்.

இறையவர்தாள் மனம்கொண்டே
எரிசூழ வலம்கொண்டார்

வலம் வந்து தீயில் மூழ்கினார். மாயாகாரியமாகிய பொய்யுடல் ஒழியப் புண்ணியமா முனிவராக எழுகின்றாராம்:

கைதொழுது, நடமாடும்
கழல்உன்னி அழல்புக்கார்,
எய்திய அப் பொழுதின்கண்
எரியின் கண் இம்மாயப்
பொய்தகையும் உருவொழித்துப்
புண்ணியமா முனிவடிவாய்

மெய் திகழ்வெண் நூல்விளங்கு
வேணிமுடி கொண்டெழுந்தார்.

[நடமாடும் கழல்—நடனமாடும் திருவடி. உன்னி—தியானித்து. அழல் புக்கார்—அக்கினிப்பிரவேசம் செய்தவர். எய்திய அப்பொழுதின் கண்—அடைந்த அப்பொழுதில். எரியின் கண்—நெருப்பிலே. மாயப் பொய்தகை உரு—மாயா காரியமாகிய பொய்யுடம்பு. மெய்திகழ் வெண் நூல்—மேனியில் திகழும் பூணூல். வேணி-சடை.]

சோதனையில் பூர்ண வெற்றி

புண்ணியப் பொன்மேனியில் வெண் நூலும் சடைமுடியும் விளங்கச் செந்தீயிலிருந்து எழுந்து வந்த நந்தனாரின் அந்த நிலையும், அது கண்ட வானவர்களின் மகிழ்ச்சியையும் சேக்கிழார் வெற்றிச் சங்கு ஊதிக் காட்டுவதுபோல் அறிவிக்கிறார்:

செந்தீமேல் எழும்பொழுது
செம்மலர்மேல் வந்தெழுந்த
அந்தணன்போல் தோன்றினர்;
அந்தரதுந் துபிநாதம்
வந்தெழுந்த(து) இருவிசும்பில்;
வானவர்கள் மகிழ்ந்(து)
ஆர்த்துப்
பைந்துணர்மந் தாரத்தின்
பனிமலர்மா ரிகள் பொழிந்தார்.

[அந்தணன்—(இங்கே) பிரம்மதேவன். அந்தரதுந்துபி—தேவ துந்துபி என்ற ஒரு தெய்வ இசைக் கருவி. இரு விசும்பில்—பெரிய ஆகாசத்தில். பைந்துணர்—பசிய பூங்கொத்துக்கள். மந்தாரம்—ஒரு வகைக் கற்பகத்தரு. பனிமலர்—குளிர்ந்த பூக்கள்.]

திருவடி கண்டவரை ஒருவரும் கண்டிலர் !

இந்த ஞானஸ்நானத்தால் உண்மையான மறை முனிவராகி அந்தணர் தொழும் அந்தணராகி ஆடும் திருவடிதொழப் போகிறாராம்:

திருவுடைய தில்லைவாழ்
அந்தணர்கள் கைதொழுதார்
பரவரிய தொண்டர்களும்
பணிந்து மனம் களிபயின்றார்;
அருமறைசூழ் திருமன்றில்
ஆடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப்
போவாராம் மறைமுனிவர்.

[திருவுடைய — அருட்செல்வம் என்ற பாக்கியத்தையுடைய. பரவரிய—புகழ்தற்கு அரிய. களிபயின்றார்—ஆனந்த வெறி கொண்டார்கள். திருமன்றில்—திருச்சபையில். கழல்—திருவடி.]

நந்தனார்பக்தர்களுடன் சென்று பொன்னம்பலம் புகுந்ததும் அப்படியே மறைந்து போகிறாராம்.

தில்லைவாழ் அந்தணரும்
உடன் செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார்
கோபுரத்தைத் தொழு(து)
இறைஞ்சி
ஒல்லைபோய் உள்புகுந்தார்,
உலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார்;
யாவர்களும் கண்டிலரால்!

[எய்தி—அடைந்து. மான்மறிக் கரத்தார்—மான் கன்றைக்கையிலேந்திய பெருமான். ஒல்லை—விரைந்து. தலைப்பட்டார்-அடைந்தார்.]

'அம்பலவர் தாள் அடைந்தார்'

இப்படிச் சிவபெருமான் நந்தனாருக்குத் திருவடிப்பேறு நல்கிய



பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் இம்மாதம் 8-ந்தேதி இரவு போதார் காலேஜிலுள்ள மகாத்மா சாந்தி ஹாலில் ஸ்ரீமதி லீலாவதிமுன்ஷி தலைமையில் 'குமாஸ்தாவின் பெண்' என்ற சமூக நாடகத்தை நடித்தனர். நாடகத்தில் நடித்த நண்பர்கள்.

வைபவத்தைச் சேக்கிழார் பாடிக் கதை முடிக்கிறார்;

அந்தணர்கள் அதிசயித்தார்;
அருமுனிவர் துதிசெய்தார்
வந்தணைந்த திருத்தொண்டர்
தம்மைவினை மாசறுத்துச்
சுந்தரத்தா மரைபுரையும்
துணைஅடிகள் தொழுதிருக்க,
அந்தமிலா ஆனந்தப்
பெருங்கூத்தர் அருள்புரிந்தார்.

[வந்தணைந்த — (தில்லையின் எல்லையில்) வந்து சேர்ந்த, வினை மாசு அறுத்து—விதியின் பந்தத்திலிருந்து விடுதலை செய்து. புரையும்—ஒக்கும். துணைஅடிகள்—இரண்டு அடிகள்.]

தீயில் குளித்துத் திருநடனம் கண்ட இந்த நந்தனாரின் திருவடிகளைக் கடைசியாக வாழ்த்திச் செல்லும் சேக்கிழார் பெருமான்,

மாசுடம்பு விடத்தீயின்
மஞ்சனம்செய் தருளிஎழுந்(து)
ஆசில்மறை முனியாகி
அம்பலவர் தாள்அடைந்தார்.

[ஆசில்—குற்றமற்ற.]

என்று தாம் விரித்துரைத்த 'திருநாளைப்போவார் நாயனார் புராண' ஸாரத்தைக் குறிப்பிடுகிறார். இவ்விதமாக முற்றுப்பெறும் கதையில் நந்தனார் நந்தமாமுனியாக அக்கினி மஞ்சனம் (Fire Baptism) செய்துகொண்டது முக்கிய அம்சமாய்க் காண்கிறது.

நாயன்மார் காலத்திலும் பிறப்பால் உயர்வு, தாழ்வு கருதும் வழக்கம் இருந்தது. எனினும் பக்தி என்ற பேரன்பிற்கு முன்னே, 'பெரு நெருப்பிற்கு ஈரமில்லை' என்றபடி சாதிவேற்றுமை பாராட்டப்படவில்லை. நாயன்மார்களிலும் ஆழ்வார்களிலும் பல வேறு வகுப்பினரையும் காண்கிறோம். வேற்றுமை சிறிதும் பாராட்டாது இந்தத் தொண்டர்களையெல்லாம் ஆலயங்களில் எழுந்தருளுவித்து அனைவரும் வெகுகாலமாய்த் தொழுது வருவது பிரசித்தம். சூட்சுமமாகப் பார்த்தால் இத்தொண்டர்கள் எல்லாரும் 'அக்கினி-மஞ்சனம்' செய்து புண்ணியப் பொன்மேனி பெறுகின்றார் என்பது உண்மை.

இது நமது நாட்டுப் பக்தி இலக்கியங்களை மட்டுமல்ல, பிறநாட்டுப் பக்தி இலக்கியங்களை ஆராய்ந்திருப்பவர்களும் நன்கறிந்த செய்திதான். ஆனால் 'திருநாளைப் போவார் புராண'த்திலே சூட்சும அக்கினி-மஞ்சனம் போதாதென்று ஸ்தூலமாகவும் அக்கினி அமைப்பதற்குக் காரணமென்ன?

இது குறித்துக் கருத்து வேற்றுமைகள் உண்டு: அடுத்தவாரம் பார்க்கலாமே.



நாமொன்று நினைக்க-----!

ய. மகாலிங்க சாஸ்திரி, எம்.ஏ.பி.எல்.

இன்ஸ்பெக்டர் கோபாலன் தகப்பனுரும் மணி சாஸ்திரிகளின் மாமனுருமான ராமஸ்வாமி அய்யர் ஒரு கண்யமான மிராசுதார். அவருடைய வரவினல் சேஷு சாஸ்திரிகள் மிகுந்த பெருமையை அடைந்தார். பெரியவர்கள் கூடினல் பேசுவதற்குக் கேட்பானேன்! மனதிற்கு மலர்ச்சிதரக் கூடிய, மேன்மை வாய்ந்த பல பழைய கதைகள் பரஸ்பர உபசரணை ரீதியில் ஞாபகப்படுத்திக் கொண்டு பிரஸ்தாபிக்கப்பட்டன. போட்டியின்மேல் போட்டியாய் இருவர்களும் ஒரு தலைமுறைக்கு முந்திய உலகத்தையும், அக்காலத்து மனிதர்களையும் இளைஞர் வியக்குமாறு வருணிக்க அலுக்கவில்லை. இருவரும் ஒரு ச்ருதியில் பாடும் பாடகர்களைப்போல் ஒற்றுமையாய்ப் பேசினர்கள். ஒருவர் பொது விதியை மற்றெருவர் ஆமோதித்து உதாரணத்துடன் விளக்கினர். இரு குலங்களின் பெருமைகளும் ஒரே அளவிற்குப் பெருக்கெடுக்கும் இரண்டு கிளை நதிகள்போல் பிரவகித்தன.

பிரஸ்தாபப் பேச்சுத் துவக்கத்திற்குப் பூர்வ பீடிகையாக இந்த ரஸமான விவரங்கள் நடந்துகொண்டிருக்கும்பொழுது, ஸீதாராமன் ராமனுதனுல் தனக்கு அனுப்பப்பட்ட தந்தி தபால்களைத் தகப்பனுரிடமிருந்து பெற்று ஆராய்ந்துகொண்டிருந்தான்.

"என்னவிதமாய் வெட்ட வெளிச்சமாக்கினன்? அதன் விளைவுகளை இவன் எப்படி தாங்கி நிற்கப் போகிருன்? சிவராமன் வந்ததற்கும் இவன் ரகஸ்யங்கள் வெளிப்பட்டதற்கும் என்ன சம்பந்தம்? தகப்பனுர் ஊரில் இல்லையாம்! அவர் வந்த பிறகு தன் நிலைமை எவ்வாறு மாறும் என்பதை இவன் அறியவில்லவனு? தான் குடும்பத்தைவிட்டு விலகிவிடுவது நிச்சயம் என்கிருனே? அது என்ன விளையாட்டா? மேலே தன் வாழ்க்கைப்பாதை எங்கு நோக்கிச் செல்வது என்பதைப்பற்றிச் சிறிதும் சிந்தித்தானு! கதை கற்பனைகளிலும், கேளிக்கையின்பாசாங்குகளிலும் மட்டும் கஷ்ட நிஷ்டூரங்கள், வீரம், தியாகம், காதலரின் சோதனைகள், இவைகளைப் பார்த்த ஒருவன் அனுபவ உலகத்திலும் அவைகளை அறிந்துகொண்டுவிட்டதாய் எண்ணிக்கொள்வது உத்தரகுமாரன் சேனை அணிவகுப்புகளைச் சித்திரத்தில் பார்த்துவிட்டு கௌரவர்களுடன் யுத்தத்திற்குப் புறப்பட்டது போலல்லவா ஆகும்! நான் இப்போது சென்றுல் ராமநாதனை எச்சரித்துத் திருப்பி வழிக்குக் கொண்டுவந்துவிட முடியுமா? அவனே என்னைச் சிறியவனுயும் தன்னை உலகறிந்த ஜாம்பவானுகவும் மதிப்பதாய்த் தெரிகிறது. அவனுக்குப் படிப்பு முடிந்துவிட்டதாம்! நான் படிப்பைத் தளரவிடாமல் தொடரவேண்டுமாம்! எவ்வளவு பெரும் தன்மையை இவன் கற்றுக்கொண்டுவிட்டான்— ஆனல் உலகத்தில் ஒரு தவறு செய்தவர்கள் வாழ்க்கையின் உண்மை இயல்பை உறைந்து உட்புகுந்து அறிவதுபோல், என்றும் கண்கட்டிய குதிரைபோல் பாதையோடு போய்க்கொண்டிருப்பவர்கள் அறிய இயலாதென்பது வாஸ்தவம்தான். ராமநாதன் இரண்டு, மூன்று பதுக்கங்களில் தடுமாறி வழுந்துவிட்டமையால் உலகவியலில் என்னைவிட விரிந்த அனுபவஸ்தனுகிவிட்டானென்பதற்கு ஐயமில்லை. இப்புதிய ராமநாதனை நானும் கண்டு திறப்பட அறிய ஆவல் கொள்கிறேன்—"

இன்ஸ்பெக்டர் கோபாலய்யர் ராமநாதனுடைய தந்தியையும் கடிதத்தையும் ஸீதாராமனிடமிருந்து வாங்கிக்கொண்டார். மணி சாஸ்திரிகளும் அவருமாய் அதை ஆராயப்புகுந்தார்கள். செக்சின் சரித்திரமும் உஷாவின் உபாக்யானமும் அவர்களுக்கு ஏற்கனவே ஸீதாராமன் மூலம் தெரியுமாதலால் கடிதத்தின் போக்கை அறிந்துகொள்வதில் அவர்களுக்கு விற்பத்தி பூர்ணமாயிருந்தது. இருவரும் ஸீதாராமனைப் பார்த்து ஜாடையாய்ப் புன்முறுவல் செய்தார்கள். ஸீதாராமன் தன் நண்பனுக்காக வெட்கித் தலை குனிந்தான்.

இதற்குள் பெரியவர்கள் ஸம்பாஷணை பிரகிருதத்தை எட்டிப் பிடித்தது. ஸீதாராமன் திருச்சினுப்பள்ளிக்கு வரவும் மணி அவனைத் தொடரவும் தனக்கு ஆச்சர்யம் விளைவித்ததையும், பிறகு தான் எல்லாம் தெய்வத்தின் தூண்டுதல் என்றும், சௌ. ஸரஸ்வதியின் விவாககாலம் வந்துவிட்டதால் அயர்ந்து இருந்தவர்களை எழுப்பிச் சுறுசுறுப்புப்படுத்தும் பிரகிருதங்கள் ஏற்படுகின்றனவென்றும் நிச்சயித்துக்கொண்டதாயும் ராமஸ்வாமி அய்யர் எடுத்துரைத்தார். சேஷு சாஸ்திரிகள் பதரானை மையத்தில் வைத்து வட்டமிட்டுக் கொண்டிருந்த தன் சித்தத்தைத் திருச்சினுப்பள்ளிக்கு திருப்பச் சிறிது கிலேசப்பட்டுக் கொண்டே உடன்பட்டார். மணியை அப்போது அவர் பார்த்து தலையசிக்கியதும் சிரித்ததும் "என்னை ஏமாற்றினையா? இருக்

கட்டும். உன்னை இலகுவில் விட்டேனு பார்'' என்று எச்சரிப்பதுபோலிருந்தது. அப்போதும் சேஷு சாஸ்திரிகளுக்கு கடிதத்தில் ஸூசிப்பிக்கப்பட்ட ராமனுதனின் சரித்திரங்களை யாரும் விவரமாய் எடுத்துக் கூறவில்லை. சாஸ்திரிகளும் அவ்வித வியாக்யானத்திற்கு அஞ்சினவர்போல், பெரிய மனுஷ்யன் வீட்டு சமாசாரம், நமக்கென்னத்திற்கு வீண் வம்பு, எதுவாயிருந்தாலும் சரி—நம்மாத்துப் பிள்ளைக்கு ஒரு அபவாதமும் இல்லாமல்போனுல் நமக்கு அதுவே போதும். மற்ற விசாரம் நமக்கெதற்கு, எது வந்தாலும் அவர்களுக்குத் தாங்கும். சமாளித்துக் கொள்ள சக்தியுண்டு. பலவானுக்குப் பத்தியம் கிடையாது என்பது சாஸ்திரம். நம்போன்ற வயிற்றுவலிக்காரன் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். மேலும் பெரியோர்கள், சொன்னதுபோல் வைக்கோல்போரில் பிடித்த நெருப்பைப் பரவச் செய்து வீசும் காற்றுக் கை விளக்கை அணைத்து விடுமல்லவா! பெரிய கனதனவான்கள் இடையூறுகளையும் எதிர்ப்புகளையும் வென்று மேலும் உயர்வு பெற்று விளங்குவார்கள். நம்போன்றயாசக விருத்திகன் தடைகளைத் தவிர்க்க முடியுமா! பகைவருடன் போராட முடியுமா! தெய்வானுகூல்யமில்லாவிட்டால் ஒரு மூச்சில் உட்கார்ந்துபோக வேண்டியதுதான். ஆகையால் ராமனுதனுக்கு ஒரு குறைவும் வராது. 'லக்ஷ்மி குமாரனை அவன் எந்தச்சிக்கலில் மாட்டிக்கொண்டாலும் சோர்ந்து போய் விடமாட்டான். ஜய பேரிகையுடன் வெளிக்கிளம்பி விடுவான். அவனைப்பற்றி நாம் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. நாம் கவலைப்பட்டும் கையாலாகாத நம்மால் அவனுக்கு உதவி ஒன்றும் கிட்டாது. நம் பிள்ளையாண்டானைப்பற்றிய கவலை நீங்கியதே! அபாண்டமான அபவாதங்களும் மறைந்தனவே!—இது ஸ்ரீ சியாமளாம்பாவின் பிரஸாதம் — இதற்குமேல் நாம் செய்யவேண்டியதை யோசிக்கவேண்டியது முக்கியமாகும்........'' என்று உபன்யஸித்தார்.

"அபவாதம் என்று நீங்கள் சொன்னதினுல் ஒன்று ஞாபகம் வருகிறது'' என்று ராமஸ்வாமி அய்யர் பேசத்தொடங்கினுர். இன்று காலை நான் குளத்தில் துணி தோய்த்துக் கொண்டிருந்த போது சீனு வாத்யார் என்னை க்ஷேமம் விசாரித்தார். என் பேத்தி கல்யாண விஷயமாய் மணி என்னை வற்புறுத்தியதினுல் வந்திருப்பதாய்ச் சொன்னேன். அதை ஆமோதித்து அவர் பேசும் போது, மணி அந்தஸ்துக்கும் மதிப்புக்கும் பெரிய இடமாய்ப் பார்க்கலாமென்றும் உள்ளூர் உறவு வரனையே நம்பியிருக்க வேண்டாமென்றும் அது பற்றிச் சில சமீப நிகழ்ச்சிகள் காதில் விழுந்தவரை யாருக்குமே மன வேதனை தரக்கூடியதாயிருப்பதாயும் ஜாடை மாடையாக பிரசாரம் செய்தார். எனக்கு அவர் பேச்சு விரஸமாயும் விஷமாயும் பட்டது. இருந்தாலும் இவ்வளவு நெருங்கின இடத்தில் இப்படி விபரீதப் பிரசாரம் செய்வாரா இவர் என்று சிறிது சந்தேகித்தேன். அவருக்கு மேலே பேச அதிக உத்சாகமளிக்காமல் அந்தச் சம்பாஷணையை அத்துடன் நிறுத்திக் கொண்டு துணியை அறைந்து அறைந்து தோய்த்தேன். அவரும் சற்று அசடு வழியும் முகத்துடன் நின்றுகொண்டிருந்துவிட்டு என்னை உத்தரவு கேட்டுக்கொண்டு சென்றுவிட்டார். அவர் எதை மனதில் வைத்துக்கொண்டு பேசினுர் என்பது இப்பொழுதுதான் எனக்கு நன்ருய் விளங்குகிறது. ஏன் அந்த மனுஷ்யனுக்கு அவ்வளவு க்ஷாத்திரம். அவனுக்கு யார் என்ன கெடுதி செய்தார்கள்''

மணி குறுக்கிட்டார்— "இந்த சுபஸந்தர்ப்பத்தில் அந்தப் பொருமைக்காரன் பேச்சு நமக்கு வேண்டாம். அவன் உட்கார்ந்த இடத்தில் பூமி ஒருகஜ ஆழத்திற்கு வெந்து போய்விடும். இந்த அபாண்ட புளுகுப் பிரசாரம் எல்லாம் அவனே கிளப்பிவிட்டது. சிவராமன் அதற்குக்கால்வாசிகூட பொறுப்பாளியல்ல என்று தெரிகிறது—''

சேஷு சாஸ்திரிகள் அய்யாப் பயல் அங்கு இருந்து ஓட்டுக்கேட்கிருனேஎன்று சற்று அச்சத்துடன் நாலாபக்கமும் பார்வையைச் செலுத்திக் தேடலானுர். நல்ல வேளையாய் அவன் சமயல் அறையில் வேம்புவுக்கு உதவியாய் டிபன் தட்டுக்களை அலம்பிக் கொண்டிருந்தான்.

பின்பு ஸல்லாபங்கள் சி. ஸீதாராமன் விவாஹத்தைப்பற்றியும் அவன் படிப்பைத் தொடர்வது ப்ற்றியும், விரிந்தன. சௌசரஸ்வதிக்கும் சி. ஸீதாராமனுக்கும் விவாஹ சம்பந்தமான வாக்நிச்சயத்தை இரண்டு தினங்களுக்குள் நல்ல வேளையில் செய்துகொள்வதென்றும் முகூர்த்தத்தைச் சித்திரை பிறந்து வைத்துக்கொள்வதென்றும் ஸீதாராமன் படிப்பைக் கத்தரிக்கவிடாமல் தொடர்வதென்றும் அதற்காக ராமனுதனின் அழைப்பிற்கிணங்கி இரண்டொரு தினங்களில் அவன் மதராஸ் புறப்படுவதென்றும் ஸர்வ சம்மதமாய்த் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

* * * *

இப்போது நாம் சியாமளாம்பாபுர விருத்தாந்தங்களை இத்துடன் விட்டுவிட்டு மதராஸில் வெங்கிட சுப்பையரின் திட்டப்படி உருவாகும் புரட்சிகரமான ஸம்பவங்களை அனுசரிப்போம்.

செவ்வாய்க்கிழமை காலை 7½ மணிக்குள் அழகிரியின் வீட்டு வாசலில் போலீஸ் "கார்'' வந்து நின்றது. சில கான்ஸ்டேபிள்கள் ஸைக்கிளில் வந்திறங்கினுர்கள். ராமனுதன் இன்ஸ்பெக்டர் கந்தப்பநாயகருடன் காரை விட்டு இறங்கினுன். அழகிரியிடம் மாஜிஸ்திரேட்டின் ஸர்ச்சு வாரண்டு ஸமர்ப்பிக்கப்பட்டது. அழகிரி பொன்னுசாமிபிள்ளையுடன் அன்று காலை மதராஸை விட்டுப்புறப்பட ஏற்பாடுசெய்து கொண்டிருந்தான். உஷாவைத் தந்திரமாய் வெங்கிடசுப்பையர் தன் வீட்டிற்கு அழைத்து வரச் செய்து அவளுக்கு அடைக்கலம் அளித்ததிலிருந்து அவனுக்கு மனக் கலவரம் கடலோசைபோல்ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. ஏதோ ஒரு விலங்கு தனக்காகத் தயாராகிறது என்று அவனுக்குத் தோன்ருமலில்லை. ஆதலால் முன் எச்சரிக்கையாகத்தான் பொன்னுசாமியுடன் ஊரைவிட்டு ஓடிவிடுவதென்று தீர்மானித்து அதற்கு மூட்டைகளும் கட்டிவிட்டான். ஆனுல் இவ்வளவு விரைவில் தன்னை விலங்கிலிடும் முன்னேற்

பாடுகள் நடக்கக்கூடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. தன் விரோதிகளைத் தன் சுறு சுறுப்பான தற்காப்புத்திட்டங்களால் அவன் ஏமாற்றிவிட நினைத்தான். ஆனால் இவனைவிட மின்னல் வேகத்தில் அவனைப் பிடித்தடைக்கும் இயந்திரங்களை வெங்கிட சுப்பையர் வேலை செய்யச் செய்திருக்கிறார் என்பது அப்போதுதான் அழகிரிக்குத் தெரிந்தது. அழகிரி ராமனாதனை அப்போது பார்த்த பார்வை முக்கண்ணன் மன்மதனைப்பார்த்த பார்வையாகத்தானிருந்தது. ராமனாதனும் சற்று உடல் நடுக்கமுற்று போலீஸ் படையின் நிழலில் மறைந்து கொண்டான்.

"என்னிடம் அந்த வைரப் பித்தான்களிருப்பதால் இந்த ஐயர் மகன் பிரமாணம் செய்வாரா?" என்று அழகிரி கர்ஜித்தான்.

"கேஸ் அதுதான்-கோர்ட் விசாரணையில் இந்தக் கேள்வியை நீர் கேட்டுக்கொள்ளலாம். இப்போது என் வாரண்டை நான் நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறேன்-" என்று அமைதியாயும் அலட்சியமாயும் இன்ஸ்பெக்டர்பதிலுரைத்தார்.

"என் வீட்டில் நீங்கள் ஸர்ச்சுப் போடும் சாமான்களில்லா விட்டால் என்னை அனாவசியமான அவமானத்திற்கும் அசௌகரியத்திற்கும் உள்படுத்தியதற்காக இந்த வாரண்டுப் பிறப்பித்தவர் மேல் நான் தாவா தொடரலாமல்லவா?"

"உங்களுக்குச் சட்டப்படி உள்ள பாத்யதைகளை இல்லை என்று சொல்ல யாரால் முடியும்?" என்று விடை அளித்துக் கொண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் தன் சிப்பந்திகளைக் கொண்டு வீட்டிற்கு "ரக்ஷா பந்தனம்" செய்தார்! அந்த சமயம் கொல்லை வழியாய் ஒரு ஆள் ஓடப் பிரயத்னப் பட்டதாய் தெரிந்ததால் அவன் 734 ஆல் பிடிக்கப்பட்டு ஆஜர் செய்யப்பட்டான்.

அழகிரி "அவரை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? அவர் எங்கள் வீட்டிற்கு நகைகள் செய்து கொடுக்கும் ஆசாரி: பெண்டுகள் ஏதோ வைர அட்டிகை வேண்டுமென்று கேட்டிருந்ததால் ஒரு இனத்தைக் கொண்டு வந்து காண்பிக்க வந்திருக்கிறார்" என்று சிபார்சு செய்ய முன் வந்தான்.

"யாராயிருந்தாலும் எங்கள் சோதனைக்கு உள்பட வேண்டியதுதான்" என்று அதிக கோபத்துடன் இன்ஸ்பெக்டர் கர்ஜித்து விட்டு ஆசாரியைப் பரிசோதனை போட உத்தரவு போட்டார்.

"என்னங்காணும், உமக்கு அவ்வளவு அவசரம்? நாங்கள் எல்லோரும் மெனக்கட்டு உங்களைத் தேடி வந்திருக்கும்போது நீர் கொல்லை வழியாய் சொல்லிக்காமல் ஓடப் பாக்கிறீரே? கையில் என்ன ஐயா பெட்டி? ஓகோ வைர அட்டிகையா? -எங்களுக்கு வாங்க யோக்கியதை இல்லாவிட்டாலும் அந்தப் பிரகாசமான ஆபரணத்தைக் கண்ணால் பார்த்தாவது ஸந்தோஷிக்கிறோம். கொண்டு வாரும் இப்படி —734, அவர் இடுப்பில் ஏதோ சொருகியிருக்கிறாரே-அதைவாங்கு -பைகளில் என்ன ஐயா. பயப்படாதேயும்! நாங்கள் தேடும் சாமான்களைத்தவிர மற்றவை எதையும் எடுத்துக் கொண்டு விடமாட்டோம்—" இன்ஸ்பெக்டர் உத்வேககரமான தன் நடவடிக்கைகளினால் மனுஷ்ய வர்க்கம் எங்குமிரளப்போகிறதோ என்று சந்தேகித்து மேற்படி நடவடிக்கைகளை ஒரு சில்லரை தமாஷ்போல் நடத்துவதில் சிரத்தை உள்ளவராகக் காணப்பட்டார். தன்னுடைய ஹாஸ்யத்தை யார் யார் ரஸிக்கிறார்களென்று தன்னைச்சுற்றி அவர் அடிக்கடி பார்த்துக் கொண்டார். அவர் சிப்பந்திகள் வீட்டில் உள்ள பெட்டி,பேழை எல்லாவற்றையும் ஒரு பக்கமாய் எடுத்துக்கொண்டு வந்து வைத்தார்கள். பொன்னுசாமி பிள்ளையின் பிரயாண டிரங்கும் பிடிபட்ட சாமான்களில் ஒன்றாயிருந்தது. பொன்னுசாமிப் பிள்ளை ஒரு மூலையில் ஸ்தம்பித்துப் போய் வீற்றிருந்தார். அவருக்கு ஏன் மதராஸுக்கு வந்தோம் என்று வெறுப்பு வந்ததுபோலும். 734 ஆசாரியின் இடுப்பிலிருந்து ஒரு சிறிய டப்பாவை எடுத்தான். அதைப்போலீஸ் இன்ஸ்பெக்டர் வாங்கித் திறந்து பார்த்தார். அவர் கண்கள் ஆச்சரியத்தினால் விரிந்தன. ஆசாரியை ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு அவர் ராமனாதனிடம் டப்பாவிலிருந்த சாமான்களைக் காட்டினார்.

ராமனாதன் "ஆம். இவை தான் என்னுடைய வைரப்பித்தான்கள்" என்று உறுதி கூறினான்.

(தொடரும்)

சத்வைத்யசாலை நஞ்சன்கூடு

"நஞ்சன்கூடு பல்பொடி"

பாகுடேரியின் சிறந்த மருந்துகள்

I. D. L.

குழந்தைகளுக்கு:
12 காஸ்மன் கஸ்தூரி மாத்திரை
18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை

அவசியங்கள்:
99 ஜ்வரேக் எல்லா ஜ்வரங்களுக்கும்
77 காலரெக்ஸ் அஜீர்ண பேதிக்கும், விடிபேதிக்கும் (காலரா)
23 பெமிநோ (பெயின் பாம) தலைவலி, வாயுபிடிப்பு .....

தினசரிகள்:
61 நஞ்சன்கூடு பல்பொடி பல் உபாதைகளையும் கண்டிக்க
78 ஸூலெக்ஸ் உஷ்ண சமன தைலம்
55 இஞ்சிப் அஜீரண,பித்த சமனி
மற்ற மருந்து ஜாபிதாவிற்கு எழுதவும்

ஸோல் ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் வீதி, மதறாஸ்

காலரா, அஜீர்ண பேதிக்கு, I. D. L. நெ. 77. காலரெக்ஸ் சிறந்த மருந்து ரூ. 1-8-0 தபாலில் அனுப்ப ரூ. 2-6-0 அனுப்பவும்.

டிப்போக்கள் : மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

எழுத்துக் கூலி!

ப. கணபதி சுப்ரமண்யம்

அறையின் எல்லா பாகங்களிலும், கிழிந்த காகிதத் துண்டுகள் சிதறிக் கிடந்தன. ஒவ்வொரு துண்டிலும் இலக்கங்கள், தாறுமாறாக கிறுக்கப்பட்டிருந்தன. நண்பன் தனகோடியும், எதையோ பறி கொடுத்தவன் போல், தலைவிரி கோலமாக நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவனுடைய பரிதாப நிலைமை, எனக்குத் திகைப்பை விளைவித்தது.

தனகோடி 'பிறவி அதிர்ஷ்ட சாலிகளில்' ஒருவன். அவனுடைய தகப்பனார், ஏராளமாகச் சொத்தை சேர்த்து வைத்துவிட்டு, காலமாயிருந்தார். அவர் ஒரு ஆங்கிலக் கம்பெனியில் மானேஜர் பதவிவகித்து வந்தவர். நில புலன்களையும். வீடுகளையும் வாங்காமல், தனது மூலதனம் முழுவதையும், பல கம்பெனிகளின் 'பங்குகளாக' மாற்றி வைத்திருந்தார். தகப்பனாருடைய இச்செய்கை தனயனுக்கு வசதியாக அமைந்தது. சொத்துக்களைப் பராமரிக்கும் தொல்லை தனகோடிக்கு ஏற்படவில்லை. மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை, பங்குகளின் தரத்திற்கு ஏற்றபடி, அவன் கைக்கு ரொக்கப் பணம் வந்து சேரும். இவ்வளவு சௌகரியம் போதாதென்பது போல், அவனைப் பிடுங்கித் தின்று அல்லல்படுத்துவதற்கு பந்துக்கள் ஒருவரும் கிடையாது. அதிர்ஷ்ட சாலியென்பதை நிரூபிப்பதற்குச் சான்றாகக் கல்யாணமும் நடைபெறவில்லை. ஏகாங்கியாக. சென்னை நகரில் ஒரு அறையை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, காலங் கழித்து வந்தான் இலக்கியத்தில் சிறிதளவு ஆர்வமிருந்ததால், காலத்தைக் கழிப்பதைப் பற்றிய கவலை ஏற்படவில்லை. சில பத்திரிகைகளில் அவனுடைய கதைகளும், கட்டுரைகளும் பிரசுரமாகும்.

இத்தகைய 'சுகவாசி' தலைவிரி கோலமாகக் காட்சியளித்ததின் காரணம் எனக்குப் புலப்படவில்லை. ஏதாவது 'காதல் விவகத்தில்' மாட்டிக்கொண்டு தவிக்கிறானென்று சிந்தித்தேன்.

"என்னப்பா, விஷயம்? இது, என்ன அலங்கோலம்?" என்று பக்குவமாக துக்கம் விசாரிக்கத் தொடங்கினேன்.

தனகோடி பதில் சொல்லவில்லை. மௌனமாக மேஜைமீது கிடந்த கடிதத்தைச் சுட்டிக் காட்டினான். கடிதத்தின் உரையைப் பார்த்ததும், அது சர்க்கார் தாக்கீது என்பது தெளிவாயிற்று. கடிதத்தைப்பிரித்து வாசிக்கலானேன்.

வருமானவரி ஆபீஸ்,
சென்னை,
3-12-44.

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் 7-11-44ல் அனுப்பிய வருஷாந்திர வருமான ரிப்போர்ட்டை, 8-11-44ல் கிடைக்கப் பெற்றோம். ஆனால் அதில் தாங்கள் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்து, அதன் மூலம் சம்பாதிக்கும் ஊதியத்தைப்பற்றிய யாதொரு விவரத்தையும் குறிப்பிடவில்லை. இந்தக் கடிதம் கண்ட ஒரு வாரத்திற்குள் மேற்படி இலக்கியத் தொண்டின் வருமான விவரங்களை நமது காரியாலயத்திற்கு அனுப்பித் தரும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

கொ. கா. பஞ்சநாதம்
வருமானவரி ஆபீஸர்,
சென்னை ரேஞ்சு.

"ஆமாம். உனக்கு இந்த மாதிரி பத்திரிகைகளுக்கு எழுதுவதின் மூலம் பணம் வரும் என்ற விஷயம், வருமான வரி ஆபிசிலுள்ளவர்களுக்கு எப்படி எட்டிற்று" என்று நண்பனைக் கேட்டேன்.

"நுணலும்தன் வாயால் கெடும் என்பது போல வாய்த்தது. ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது பிரமாதமாக 'கதை அளந்துகொண்டிருந்தேன். பக்கத்தில் உட்கார்ந்திருந்த பேர்வழி வருமானவரி இன்ஸ்பெக்டர் ஆபீசில் போய் எல்லாவற்றையும் அளந்து கொட்டிவிட்டான். இப்பொழுது இந்தச் சின்னக்காரியம் தலைக்கே ஆபத்தாக வந்துவிட்டது."

"இது என்ன பிரமாதமான தலைபோகிற விஷயம்? எவ்வளவு வருமானம் வந்திருக்கிறதோ அதை அந்த ஆபீசிற்குத் தெரிவித்தால் போதுமே?"

"உனக்கு எல்லாம் சில்லரை விஷயம்தான். கணக்குப் பார்த்தால்தான், என்னுடைய கஷ்டம் உனக்கு விளங்கும். இராத்திரி

முழுதும் தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டு முயற்சித்ததுதான் மிச்சம். பலனொன்றையும் காணோம்.''

“ஆமாம், நீ பகீரதப் பிரயத்தனம்செய்திருக்கிறாய் என்பதுதரையைப் பார்த்தால் நன்றாகத் தெரிகிறதே! இந்தத் துண்டுக் காகிதங்கள் உன்னுடைய முயற்சிக்கு ருஜுவாக துலங்குகின்றன. இந்தச் சிறிய விஷயத்திற்காக ஏன் மண்டையை உடைத்துக்கொள்கிறாய்? ஏதாவது ஒரு தொகையைக் குறிப்பிட்டு ஆபிசிற்கு எழுதிவிடு. இதையெல்லாம் யார் கிளறிப் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறார்கள்? அந்தக் குமாஸ்தாக்களுக்கு வேறு வேலை கிடையாதா? உன்னுடைய எழுத்துக்கூலிப் பிரச்னையைத்தான் துருவித்துருவிப் பரிசிலனை செய்யப் போகிறார்களாக்கும்?''

நீ அலட்சியமாய்ப் பேசிவிட்டாய். தப்பு விவரங்கள் கொடுத்தால் சொத்தைப் பறிமுதல் செய்துவிடுவார்கள். இதோ இந்தப் பத்திரிகையில் கொட்டை எழுத்தில் பிரசுரமாயிருக்கும் வருமானவரிக் கேஸின் விவரத்தை வாசித்துப்பார். சொத்து போனாக்கூடப் பரவாயில்லை. இந்த ஜட்ஜுடைய வசைமொழிகளைத்தான் பொறுக்கமுடியாதுபோல் தோன்றுகிறது. அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேள். ‘இந்த மாதிரி வரிகொடுக்காமல் சர்க்காரை ஏமாற்றும் பேர்வழிகள் சமூக விரோதிகள். இந்தத் துரோகிகளுக்குத் தூக்கு தண்டனைகூட போதாது’ என்று சூடு கொடுத்திருக்கிறார். ஏதாவது தவறான விவரங்களைக் கொடுத்தால், நானும் கோர்ட்டில் சந்தி சிரிக்கும் அநுபவத்திற்கு உள்ளாக வேண்டியதுதான். இப்படி ஏதாவது சம்பவிக்குமானால், நான் விஷத்தைக் குடித்து உயிரை விட்டுவிடுவேன்''

“பிராணத்தியாகம் செய்துகொள்வது அவ்வளவு எளிதான காரியமல்ல. மேலும் இந்தச் சிறிய விஷயத்தைப் பெரிதாக்குவதும் தவறு.''

“சரி, உன்னுடன் வாதாட நான் தயாராயில்லை. இந்தப் பிரச்னை சம்பந்தமாக, ஏதாவது உருப்படியாக யோசனையிருந்தால் சொல்; இல்லாவிட்டால் வாயைப் பொத்திக்கொள்'' என்று கடிந்தான் தனகோடி.

“இந்த விவகாரத்தை என்னிடம் ஒப்படைத்துவிடு. வரிசையாக உன்னுடைய இலக்கிய வருமானங்களைக் கூறு, எழுதிக்கொள்கிறேன். பிறகு நானே ஒரு ‘ரிப்போர்ட்டு’ தயாரித்துத் தருகிறேன். அதில் கையொப்பமிட்டு, ஆபிசிற்கு அனுப்பு. இந்த அற்பகாரியத்திற்காக வேதனைப்படாதே.'' என்று கூறினேன். ஒரு காகிதத்தையும் பேனாவையும் எடுத்து வைத்துக்கொண்டு காரியத்தில் ஈடுபடத் தயாரானேன்.

“எனக்குக் கவலை ஒழிந்தது. இந்தப் பொறுப்பை நீ ஏற்றுக்கொண்டுவிட்டாய். விஷயத்தை விவரமாகச் சொல்கிறேன், குறித்துக்கொள். இந்த வருஷத்துவக்கத்தில் பர்மாவில் பிரசுரமாகி வந்த ‘பிரளயம்’ என்ற பத்திரிகைக்கு ஒரு கட்டுரை அனுப்பினேன். கட்டுரை பிரசுரமானதும். “பிரளயத்தின்’ ஆசிரியர் இருபது ரூபாயக்கு ஒரு ‘செக்’ அனுப்பியிருந்தார். செக்கை மாற்றுவதற்குள் ஜப்பான்காரன் பர்மாவைப் பிடித்துக்கொண்டுவிட்டான். பத்திரிகைக்காரியாலயம் குண்டுக்கு இரையாய்விட்டது. இங்குள்ள பாங்கிக்காரர்கள் செக்கை மதிக்க மறுத்துவிட்டார்கள். ‘இந்த இனத்தை’ வருமானமாகச் சேர்ப்பதா, இல்லையாவென்று புரியவில்லை''

“சரி. அதைப்பற்றிப் பிறகு யோசித்துக்கொள்ளலாம். இரண்டாவது ‘அயிட்டத்தை’ச் சொல்லு.''

“எமகண்டம்’ பத்திரிகைக்கு ஒரு சிறு கதை அனுப்பினேன். அதன் ஆசிரியர் நம்முடன் கலாசாலையில் படித்த அரட்டை ஆராவமுதம். அவன் கதைக்குரிய சன்மானத் தொகையை சுவிகரித்துக்கொண்டு விட்டான். பத்திரிகைக்காரியாலயக் கணக்கில் அந்தத்தொகை எனக்கு அனுப்பப்பட்டதாக எழுதப்பட்டுவிட்டது. பணம் என் கைக்கு வந்து சேரவில்லை. இந்த அயிட்டத்தை வருமானமாகக் கருதுவதா?''

“என்னப்பா, எல்லாம் ஒரே தப்புத்தண்டா விவகாரமாகயிருக்கிறதே. மேலும் சொல்.''

“சினிமா பயங்கரம் என்ற வாரப்பத்திரிகைக்கு ஒரு வசன கவிதை அனுப்பினேன். அதற்குச் சன்மானமாக ‘பயங்கரத்தின்’ ஆசிரியர் இருபது பிரதிகளை அனுப்பிவிட்டார். அவைகளை விட்டு சன்மானத் தொகையை ஈடு செய்துகொள்ளும்படிக் கேட்டுக்கொண்டார். ஒரு பிரதிகூட விற்பனையாகவில்லை. பழய காகிதங்களுடன். அவைகளையும் விற்றுவிட்டேன். இந்த இருபது பிரதிகளின் விலையென்னவென்று புரியவில்லை, இதற்கென்ன சொல்கிறாய்?''

“ஏது, உன்னுடைய இலக்கிய சேவை ஒரு பெரிய பொருளாதாரப் பிரச்னையாகயிருக்கிறதே?''

“அதற்குள் மலைத்து விடாதே. பூராக்கதையையும் கேள். “குண்டுமணியின் காதல்'' என்று ஒரு நாவல் எழுதினேன். அதனை ‘கபளீகரப் பிரசுராலயம்’ வெளியிட்டது. எங்களுக்கு யாதொரு ஒப்பந்தமும் செய்துகொள்ளாததால், பிரசுராலயத்தின் சொந்தக்காரர். அச்சுக்கூலி. பதிப்புச் சார்ஜ் முதலியவைகளுக்காக என்னிடமிருந்து ரூ. 477 வர வேண்டுமென்று கூறுகிறார். புஸ்தக விற்பனையின் மூலம் நான் இதுவரை ரூ. 14-7-6 பை பெற்றிருக்கிறேன். பாக்கியுள்ள 996 பிரதிகள் புஸ்தகக் கடைகளின் அலமாரிகளை அலங்கரிக்கின்றன. புஸ்தகக்கடைக்காரர்களிடமிருந்து பணத்தை வசூல் செய்வது என்னுடைய பொறுப்பு என்று ‘கபளீகரப் பிரசுராலயம்’ கருதுகின்றது எந்த ஜன்மத்தில் பணம் வசூலாகுமோ’ தெரியவில்லை.

“இப்படி அடுக்கிக்கொண்டே போனால், என்னதான் செய்கிறது?''

“இந்த அற்ப விஷயத்தை ஒரு நொடியில் முடித்து விடுவதாக வீராப்புப் பேசிவிட்டு, இப்பொ

முது என்னிடமே யோசனை கேட்கிருயே?''

“ஆனல், இந்தச் சங்கடங்களை யெல்லாம் நீ முன் கூட்டியே என்னிடம் சொல்லவில்லை. இந்தக் கஷ்டத்திலிருந்து தப்புவதற்கு நாம் பிரயத்தனம் செய்தால் போதாது. என்னுடைய சிறிய தகப்பனர் ஒரு ‘ஆடிட்டர்' இந்த மாதிரி வருமான வரி கேஸ்களில் அவர் அசகாயசூரர். அவருடைய பெயர் அகோரம். அவரிடம் போவோம், வா.''

நாங்கள் இருவரும் அகோரத்தின் வீட்டிற்குச் சென்ருேம். அவருடைய யோசனையின்பேரில், நண்பன் தனகோடியின் அந்த வருஷத்திய இலக்கிய வருமானம் ரூ.80 என ‘கம்பவுண்ட்' செய்துகொள்ளப்பட்டது. அகோரம், பஞ்சநாதத்தின் அத்யந்த நண்பரான படியால் தகராறில்லாமல் தனகோடியின் ‘எழுத்துக் கூலிப் பிரச்னை' முடிவுற்றது.

இந்த சம்பவத்திற்குப் பிறகு தனகோடியும், அகோரமும் நெருங்கிப் பழக வாரம்பித்தார்கள். நட்பு முற்றியதும், தனகோடி இலக்கிய சேவையைப் புறக்கணித்துவிட்டு, வரவு செலவு கணக்குகள் தயாரிக்கும் முறை, வருமான வரிச்சட்டம் முதலிய பொருளாதாரத் துறைகளில் தேர்ச்சி பெறலானுன்.

தற்சமயத்தில் தனகோடி. தனது பெயரிற்கேற்ப, ஒரு பெரிய பாங்கியின் முதலாளியாக விளங்குகிருன். பல பெரிய கம்பெனிகளை நிர்வகிக்கும் பொறுப்பு அவன் கையில்ஒப்படைக்கப்பட்டுள்ளது. கவிதைகளையும், கட்டுரைகளையும், வசன காவியங்களையும் புனைந்த திருக்கையால், தனகோடி கம்பெனிகளின் வருஷாந்திர ரிப்போர்ட்டுகளையும்புதிய கம்பெனிகள் ஆரம்பிப்பதற்கானமுன் அறிக்கைகளையும், விதிகளையும் ஷரத்துகளையும் வரைந்து தள்ளுகிருன். வருமான வரிச்சட்டத்தை விள்க்கி அவன் எழுதியுள்ள நூல், வியாபார சமூகத்தின் வேதமாக விளங்குகின்றது.

தனகோடியின் கௌரவத்திற்கு ஏற்ப அவனுக்குச் சன்மானம் அளிக்க பத்திரிக்கைகளால் முடியுமா? சொந்தமாகப் பத்திரிகை நடத்துவதுதான் உசிதம். அவனுடைய தற்போதையஅந்தஸ்திற்கும் அதுதான் பொருத்தமாகும்!

பரிசு - பரிசு - பரிசு

பொங்கல் பண்டிகை சமீபித்துவிட்டபடியால், மகாத்மா காந்திஜியின் ஞாபகார்த்தமாக கைத்தறிகளினுல் தயார் செய்த இட்டாலி சில்குகளில் சாரி, சோமன், அங்கவஸ்திரம் ஜனவரி முதல் 30—1—49வரை பரிசு வழங்கப்படும்.

பரிசு திட்டம்

35 ரூபாய் விலையுள்ள 3x8 சில்கு சோமன் ஒன்றும், அங்க வஸ்திரம் ஒன்றும் ரூபாய் 20-க்கும், 24 ரூபாய் விலையுள்ள 6 கெஜம் சில்கு சாரி ஒன்று ரூபாய் 12-க்கும் பரிசு வழங்கப்படும். நபருக்கு ஒன்றுக்குமேல் வினியோகம் செய்யப்படமாட்டாது. இத் திட்டத்தில் சேருபவர்கள் இதைக்கத்தரித்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.

N. B. டிசம்பர் முதல் ஜனவரி 30 வரை பரிசு திட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு காந்திஜி ஞாபகார்த்த அழகிய சில்கு கர்சீப் ஒன்று இலவசமாக 2-1-49 முதல் அனுப்பிவைக்கப்படும். M. O. அனுப்புவோர் M.O.ரசீதும் அனுப்பவும்.

பெயர்.......................................

ஊர்...

Sri Ram Silk Factory, Kottar (S. Travancore.)





உயர் ரக கைக்கடியாரங்கள்

ஜுவல் பதித்தது.

ஸ்விஸ தயாரிப்பு. சரியான மணிகாட்டும். உறுதியானது அழகிய டிசைன். தபால் செலவு அணு 14. நெ 1. வட்டம் குரோமியம் கேஸ் 4 ஜுவல் ரூ. 13. சிறந்தது ரூ. 14 நீண்ட சதுரம குரோமியம் கேஸ் 5 ஜுவல் ரூ. 18. சிறந்தது ரூ. 20. ரோல்ட்கோல்டு (10 வருஷ உத்தரவாதம்) 6 ஜுவல் ரூ. 25. சிறந்தது ரூ. 27. வட்ட. தட்டை கேஸ் 15 ஜவல் ரூ. 29., சிறந்தது 30. நெ. 2, நீண்ட சதுர குரோமியம் கேஸ் 6 ஜுவல் ரூ. 21, சிறந்தது ரூ. 22 நீண்ட சதுர ரோல்ட்கோல்டு (10 வருஷ உத்தரவாதம்) 7 ஜுவல் ரூ. 27. சிறந்தது ரூ. 30. அலாரம் டைம்பீஸ் 4 ஜவல் ரூ. 14. சிறந்தது15.

வீட்டிலேயே அச்சடிக்கும் பாகெட் பிரஸ்:—

பெயர்கள், விலாசம், கடிதம், லேபில்—நேர்த்தியாக வீட்டில் அச்சடிக்கலாம், நெ. 1. ரூ. 2. நெ. 2. ரூ. 3. ஸபெஷல் ரூ. 3/8. சிறந்தது ரூ. 5. தபால் செலவு அணு 14.

FRENCH COMMERCIAL STORES (T. M.)
Post Box No. 12216, CALCUTTA 5.



சகல விதமான பட்டு நூல் ஜவுளிகளுக்கு கைராசியும் நம்பிக்கையுமுள்ள

புதிய ஜவுளிக்கடை

ராம்ராஜ்யா ஹால்

N.R.ராமசந்திர செட்டி & கோ. கடை வீதி...சேலம்

தொண்டைப் புண், ஜலதோஷம் இன்புளுயன்ஸாவுக்கு



சமனமூட்டி வியாதி பரவுதலை தடுக்கும் பெப்ஸ் உமக்கு தேவையாகவிருக்கும்

நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லையில் மருந்து சத்துக்கள் இருப்பதால் உமது தொண்டைக்கும் சுவாசப்பைக்கும் சமனமூட்டும். பெப்ஸின் சமனமூட்டும், குணமாக்கும் கிருமிநாச ஆவிகள் தொண்டை, மார்பு, சுவாசப்பை இவற்றுக்கு சுவாசத்துடன் கலந்து பலனளிக்கக்கூடியவை. புண், நமைச்சல் வீக்கம் இவற்றை குணமாக்கி, கிருமிகளை நாசம் செய்து அடைப்பை நீக்கும்.



பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதைக் குறிக்கும் படம்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.

PEPS

கிருமி நாச

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு, சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பலனளிக்கவல்ல நிவாரணி.

வைத்திய ரத்ன

யு. ராமநாத சாஸ்திரிகளின்



ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது). அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும், திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம் 30மாத்திரைசீசா1 ரூ.7

மஹா பில்வாதி லேகியம்

பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்றுக் கோளாறுகளை உடனே கண்டிக்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரி கவசம்

வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோகவியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசிகரண மூலிகை, பிரதிஸரஸௌத்ரம், ஸ்ரீதன்வந்தரியந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லா விதமானபடைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது)

சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்குங்கிடைக்கும். கேட்லாக்இனாம். ஸகலத்துககும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்

பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீ

லேட் கான்சாகிப் எம். முஹம உமர்சாகிபுவின் குமாரரான முகம நூருல்லா என்று பெயர்கொண் நான் இவ்வியாபாரத்தை மிகவு அபிவிருத்தி செய்துள்ளேன். மிக சிறந்த புகையிலையையும், உயர்த மான சரக்குகளையும் உபயோகித்

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீ களின் ரகமும், மணமும், குணமு என் தகப்பனார் காலத்திலிருந்ததை போன்றே சிறப்பாகவிளங்குகின்ற

முகம்மது நூருல்லா

ஸோல் புரொப்ரைட்டர்:

ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிக

37, மண்ணடி, மதராஸ்.

தேவாம்ருதம்

"பீம-வீர்"

சாஸ்வத சக்தியை கொடுக்கும்

देवामृतम

'भीम-वीर'

शाश्वत शक्ति देनेवाला है



RESTORES MAN HOOD

Nectar of Life

MAKES MEN YOUNG

"BHEEMA-VEER"

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்தி செய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீரிய சக்தியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.

40-நாள் மருந்து ரூ. 3—12—0. பாக்கிங், தபால் சார்ஜ் கிடையாது.

ஜமதக்னி ஔஷதாலயா, 31-சி, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை 4.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலே, ஜுரக்கட்டி வியாதிகளே சொற்ப காலத்தில் நிச்சயம் குண மளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளேக் கண்டு ஏமாருதிர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.	திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.



ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷி பலனே வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,

"தபோநிதி" தியாகராய நகர், மதராஸ் 17.

ஜெயா எலக்டிரிக் கம்பெனி,

சின்னகடை வீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக் . பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள். ஸ்விட்ச் கியர்கள், பல்பு தினுசுகள், ஒயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்.

இன்னும் மில்களுககும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானல், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானல் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலேப் படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்த சாஸ்திர சம்பந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று, பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானுல் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.

வி. பி. செலவு அணு 9.

ஷாஜஹான் புக் டெப்போ,

34, சாந்தோம், சென்னை 4.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்.

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ்.	லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச்: மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

கர்பரக்ஷா மாத்திரை

பெண்கள் கர்ப காலங்களில் இதை சாப்பிட்டுவந்தால் எவ்வித கோளாறுமின்றி சுகப்பிரசவமாகும். கர்பச் சிதைவைத்தடுக்கும். நூறு மாத்திரை ரூ. **6—4—0.** ஐம்பது மாத்திரை ரூ. **3—8—0.**

தசமூலாரிஷ்டம்

பிரசவமான பிறகு உடம்பைத் தேற்றிக்கொள்ள இதுபோல் கைகண்ட ஔஷதம் வேறு கிடையாது. ஹிருதய பலவீனத் திற்கும், நரம்புத் தளர்ச்சிக்கும் ஆண்களும் உட்கொண்டால் பரிபூர்ண குணம் கிடைக்கும். 24 அவுன்ஸ் புட்டி ரூ. **6—0—0.**

விவரங்களுக்கு:—

ஆரிய வைத்தியன் பி. ஜி. வாரியரின்

ஆரிய வைத்தியாசிரமம், குமரன் வீதி, திருப்பூர்.

பிராஞ்சு: பல்லடம்.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

வியாபாரிக்கு அத்தியாவசியம் நாணயமே

"லாபமடிப்பது" வியாபாரியின் நோக்கமாகும். வியாபாரி அதை தானாகவே கூறவேண்டாம். அது வெளிப்படையான உண்மை. வியாபாரிக்கு அதனால் ஒருவித அச்சமுமில்லை. லாபத்தில் ஒரு பங்கை சாதுர்யத்துடன் அடைகிறார். உமக்கு மிகவும் நெருங்கியவராக நடித்து அதிகமாகக் கொடுக்கும் வியாபாரியிடமிருந்து நாரையைப் போன்ற வழியை அனுசரித்து பெறுகிறார். நீங்கள் அவருடைய உண்மையான நடத்தையைக் கண்டு பிடிக்கும் வரையில் தமது நடிப்பினால் தமக்கு யாதொரு பயமுமில்லை என்பதை உணருவார்.

மிகவும் சிரமமான காலங்களில் சமாளித்து நீண்ட நாள் அனுபவத்தினால் நாணயமான முறையைப் பின்பற்றி மெள்ள தமது புகழை வியாபாரி அதிகரித்துக் கொள்கிறார். "நம்பிக்கை வெகு நாட்களுககுப் பிறகாவது உதவும்" என்பதே அவர் நீண்டகால அனுபவத்தினால் அடிப்படையாகக் கொண்டது.—"இந்த அனுபவமும்" புகழும். வைரம் போன்ற எளிதில் மதிப்பிடமுடியாத வஸ்து சம்பந்தப்பட்ட மட்டில், சந்தேகமின்றி வாங்குவதற்குக் காரணமாகும்.

வெகு சீக்கிரத்திலேயே லாபமடிக்க முயலும் அனுபவமில்லாத புது வியாபாரிகள் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அவர்களுக்கு உதவி புரிவது தரகர்களே. இவர்களுடன் "சேர்ந்துகொண்டு" உம்மை ஏமாற்றி எவ்விதத்திலாவது பணம் சமபாதிக்கின்றனர்.

நிபுண தரகர் — உமது மனிதர் — இதுபோன்ற புது வியாபாரிகளினால் பெரிதும் விரும்பப்பட்டு, அவருக்கு எந்த வியாபாரி அதிகமாகக் கொடுக்கிறாரோ அவரிடமே உம்மை அழைத்துச் செல்கிறார். இந்த வியாபாரத்தால் உமக்கு யாதொரு பயனுமில்லை — இரு சக்கரங்களுக்கிடையே அகப்பட்டுக்கொண்டவர் போன்றிருப்பீர்கள்.

நாணயமான வியாபாரியை படுமோசமெனவும், தரகரின் அன்பான (!) உதவியில்லாவிட்டால் ஏமாறக்கூடுமெனவும் கூறிக்கொண்டு, தமக்கு அதிகமாகக் கொடுக்கும் வியாபாரியிடம், உமக்கு தவறான அபிப்ராயத்தை தெரிவித்து, அழைத்துச் செல்கிறார். நீங்கள் வியாபாரியிடம் அணுகும் முறையே தவறுதலானது.

நாணயமான வியாபாரியை நம்புங்கள்
உமக்கு நாணயமான சரக்கு கிடைக்கும்

நீங்கள் அணுகும் முறை தவறானது.

ஸூரஜ்மல்ஸ்

நம்பிக்கை மிகுந்த நகை வியாபாரிகள்
"1895 முதல்"

313, எஸ்பிளனேட் மதராஸ்.